
# தமிழரசு

16-9-1978 50 காசு.

தந்தைபெரியார்
நூற்றாண்டு விழாச்
சிறப்பிதழ்



சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக்
கட்டப்பட்டது!





● கண்கவர் வண்ணம்
● துல்லியமான பூச்சு
● அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
● காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
● அதிக உழைப்பு உறுதி
● கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:
**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.


தோற்றம் : 17-9-1879
மறைவு : 24-12-1973
19.12.73



# பெரியார் ஒரு சகாப்தம்

எனக்கென்று ஒரு வசந்த காலம் இருந்தது. நீண்டநாள்களுக்குப் பிறகு-ஆண்டு பலவற்றிற்குப் பிறகு-அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு, இன்றைய கவலை மிக்க நாள்களிலே எழவியலாத புன்னகையைத் தருவித்துக்கொள்கிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலம் தெரியும்; இன்று பொறுப் பேற்றுக் கொண்டிருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும்.

'வசந்த காலம்' என்றேனே, அந்த நாள்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி அவருடன் காடு மேடு பல சுற்றி வந்த நிலை அது. அந்தக் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது, வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி, மகிழ்வளித்ததைக் கண்டேன்; நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன்.

ஒருவர் தன்னந்தனியராய்ப் புறப்பட்டு, ஓயாது உழைத்து உள்ளத்தைத் திறந்து பேசி, எதற்கும் அஞ்சாது பணியாற்றி, ஒரு பெரிய சமூகத்தை விழிப்பும் எழுச்சியும் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்ற வரலாறு, இங்கன்றி வேறெங்கும் நிகழ்ந்ததில்லை.

அந்த வரலாறு தொடங்கப்பட்டபோது சிறுவன் நான். அந்த வரலாற்றிலே புகழேடுகள் புதிதுபுதிதாய் இணைக்கப்பட்ட நாள்களிலே, ஒரு பகுதியில் நான் அவருடன் சேர்ந்து பணியாற்றியிருக்கிறேன். அந்த நாள்களையே 'என் வசந்தம்' என்று குறிப்பிட்டிருந்தேன்.

பெரியாருடன் இணைந்து பணியாற்றியவர் பற்பலர். ஆயினும், மற்றப் பலரையும்விட அவருடன் இடைவிடாது இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தவன் நான். அந்த நாள்கள் எனக்கு மிகவும் இனிமையான நாள்கள். இன்றும் அவைகளை நினைவிற் கொண்டுவரும்போது இனிமை பெறுகிறேன்.



எத்தனை எத்தனையோ கருத்துக்களை உரையாடல் வாயிலாக எனக்கு அவர் தந்திருக்கிறார். 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்பதை நான் கற்றுணரும் வாய்ப்பினையும் அவர் தந்தார். பொதுத்தொண்டு ஆற்றுவதில் நான் ஆர்வமும் அகமகிழ்வும் மனநிறைவும் பெற்றிடச் செய்தார் அவர்.

கோபத்துடன் அவர் பலரிடம் பேசிடக் கண்டிருக்கிறேன்; கடிந்துரைக்கக் கேட்டிருக்கிறேன்; 'உன்னை எனக்குத் தெரியும்: போ!' என்று உரத்த குரலில் கூறியதைக் கேட்டிருக்கிறேன், ஒரு நாள்கூட அவர் என்னிடம் அவ்விதம் நடந்து கொண்டதில்லை. எப்போதும் ஒரு கனிவு எனக்கெனத் தனியாக வைத்திருப்பார். என்னைத் தமது 'குடும்பத்தில் பிறவாப் பிள்ளை' என்று கொண்டிருந்தார்.

நான் கண்டதும் கொண்டதும் அந்த ஒரே தலைவரைத்தான். இப்போது நான் உள்ள வயதில் அவர் இருந்தார். நான் அவருடன் இணைந்தபோது-முப்பது ஆண்டுகளுக்கு முன்பு அதற்கும் முன்பு முப்பது ஆண்டுகள் அவர் பணியாற்றி வந்திருக்கிறார்.

இந்த ஆண்டுகள் தமிழரின் வரலாற்றிலே மிக முக்கியமான ஆண்டுகள். 'திடுக்கிட வைக்கிறாரே! திகைப்பாக இருக்கிறதே! எரிச்சலூட்டுகிறாரே! ஏதேதோ சொல்கிறாரே!'

என்று பலர் ஏசினர்; பேசினர்: பகைத்தனர்: எதிர்த்தனர்; ஆனால், அவர் பேச்சைக் கேட்ட வண்ணமிருந்தனர் - மூலையில் நின்றாகிலும், மறைந்திருந்தாகிலும்!

அந்தப் பேச்சு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நடந்தபடி இருக்கிறது. எதிர்த்தவர்கள், ஏளனம் புரிந்தவர்கள்; ஏனோ தானோ என்றிருந்தவர்கள், தங்களது நிலை தன்னாலே மாறிவிடக் கண்டார்கள். கொதித்தவர்கள் அடங்கினார்கள். மிரட்டியவர்கள் பணிந்தார்கள். அலட்சியம் செய்தவர்கள் அக்கறை காட்டினார்கள்.

அவருடைய பேச்சோ? அது தங்கு தடையின்றி வேகம் குறையாமல், பாய்ந்தோடி வருகிறது, மலைகளைத் துளைத்துக் கொண்டு கற்களை உருட்டிக் கொண்டு, காடு கழனிகளை வளம் பெறச் செய்துகொண்டு, நுரை நயத்துடன், ஒய்யார நடையுடன், அங்கே போகிறார்; இங்கே வருகிறார். அது குறித்துப் பேசுகிறார் எனத் தமிழகம் இந்த ஐம்பது ஆண்டுகளாய் கூறி வருகிறது.

'மனத்திற்பட்டதை எடுத்துச் சொல்வேன், எது நேரிடினும்' என்னும் உரிமைப்போரே அவரது வாழ்வு. அதிலே அவர் கண்ட வெற்றி மிகப்பெரியது! அந்த வெற்றியின் விளைவு அவருக்கு மட்டும் கிடைத்துவிடவில்லை. இன்று அனைவரும் பெற்றுள்ளனர். அந்த வெற்றியின் விளைவுகளை, இந்தத் தமிழகத்தில் தூய்மையுடன், மனத்திற்குச் சரி எனப்பட்டதை எவரும் எடுத்துரைக்கலாம் என்னும் நிலை உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. அறிவுப் புரட்சியின் முதற்கட்ட வெற்றி இது. இதற்கு முழுக்க முழுக்க பொறுப்பாளர் பெரியார். இந்த வெற்றி கிட்ட அவர் ஆற்றிய தொண்டின் அளவு மிகப் பெரியது!

அவர் நமக்கு இதுவரையில் ஆற்றியிருக்கிற தொண்டுக்கு, அவரால் தமிழகம் பெற்றிருக்கிற வளர்ச்சிக்கு, நல்ல பெயருக்கு- நாம் நமது மரியாதையை- அன்பை-இதயத்தைக் காணிக்கையாக்க வேண்டும்.


தமிழகத்திற்கும் தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும்—இன்னும் உலகத்திற்கேகூட என்றும் சொல்லலாம்-அவர் செய்திருக்கிற அரிய பெரிய காரியங்களை, ஆற்றியிருக்கிற அருந் தொண்டுகளை, ஏற்படுத்தியிருக்கிற புரட்சிகர உணர்ச்சிகளை, ஓடவிட்டிருக்கிற அறிவுப் புனலை தமிழகம் இதுவரை என்றுமே கண்டதில்லை. இதற்குப் பிறகும் இப்படிப்பட்ட மாபெரும் புரட்சி வேகத்தை நாம் காணப்போவதில்லை. வரலாற்றில் பொறிக்கத் தக்க புதிய வரலாறு எனக் கருதும் நிலைமையை அவர் தம்முடைய பொதுத்தொண்டின் மூலம் நமக்கு அளித்திருக்கிறார்.

என்னுடைய நினைவுகள் பல எண்ண அலைகளை நெஞ்சில் ஓட விட்டுக் கொண்டிருக்கின்றன. எத்தனை இரவுகள், எத்தனை பகல்கள், எத்தனை காடுமேடுகள், எத்தனை சிற்றூர்கள், எத்தனை பேராறுகள், எத்தனை மாநாடுகள் என எண்ணிப்பார்க்கிற நேரத்தில், ஒரு போர் வீரன் களத்திற்புகுந்து, 'இந்தப் படையை முறியடித்தேன்! அந்தப் படையை வென்றேன்!' எனக் காட்டி, மேலும் மேலும் செல்வதைப்போல, வாழ்நாள் முழுவதும் அவர் களத்தில் நிற்கிற ஒரு மாபெரும் போராட்டமே நம் முன் காட்சி அளிக்கிறது.

# பேரறிஞர் அண்ணா

முதற் போராட்டம், அவர் உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும். செல்வக் குடியிலே பிறந்த அவர், தம்முடைய செல்வத்தை-செல்வாக்கைக் கொண்டு ஊரை அடக்கி, போக போக்கியத்தில் மிதந்து மகிழ்ந்திருக்கலாம். அப்போதிருந்த பலரும் அப்படிப்பட்ட வாழ்க்கையில் தான் இருந்தனர். அப்படிப்பட்ட வாழ்க்கையில் இருந்து தம்மைத் தனியாக்கிக் கொண்டு, தம்மைப் பிரித்துக் கொண்டு 'என்னுடைய செல்வம் எனக்கில்லை; என்னுடைய செல்வத்தைக் கொண்டு, போக போக்கியத்தில் நான் திளைக்கப் போவதில்லை; பொது வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன்' என்று எண்ணிய நேரத்தில், அவருக்கிருந்த செல்வமும், அவருடைய குடும்பத்துக்கிருந்த செல்வாக்கும், அதனால் அடையக்கூடிய சுகபோகங்களும் அவர் மனத்தில் ஒரு கணம் நிழலாடியிருக்க வேண்டும். அப்போது அவர் உள்ளத்தில் நிச்சயமாக ஒரு போராட்டம் எழுந்திருக்க வேண்டும்.

'செல்வத்தில் புரளலாமா, அல்லது வறுமையில், அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு என்னை நான் ஒப்படைப்பதா?'' என்ற போராட்டத்தில் தொண்டுள்ளம் வெற்றியடைந்தது. 'செல்வத்திற்காக அல்லேன் நான். சுகபோகத்திற்காக அல்லேன் நான். என்னிடத்திலுள்ள அறிவு, உழைப்புத்திறன், என்னிடத்தில் அமைந்திருக்கிற பகுத்தறிவு அனைத்தும் தமிழக மக்களுக்குத் தேவை. தமிழகத்திற்குமட்டுமல்ல - இயன்றால் இந்தியா முழுவதற்கும் தேவை; வசதிப்பட்டால் உலகத்திற்கே தேவை. வீட்டை மறப்பேன்; செல்வத்தை மறப்பேன்' என்று



அவர் துணிந்து நின்று அந்தப் போராட்டத்தில் முதலில் வெற்றி பெற்றார்.

'இதில் பிரமாதம் என்ன இருக்கிறது?' என்று எண்ணக்கூடும், செல்வம் இல்லாதவர்கள். ஒருவர் கையில் ஒரு பலாப்பழத்தைக் கொடுத்து ஒரு மணிநேரம் அவர் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்றால் வைத்திருப்பவர் வாயில் நீர் ஊறும்; நேரம் செல்லச் செல்லப் பலாச்சுளையில் மொய்த்துக் கொண்டிருக்கிற ஈக்களோடு

தமிழரசு
16-9-78
மலர் 9 * இதழ் 6

# என்றும் இளையார்!

—பாவேந்தர் பாரதிதாசன்

வயதில் அறிவில் முதியார்—நாட்டின்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்.
உயர்எண் ணங்கள் மலரும் சோலை
ஓதும் இராமசாமிப் பெரியார் வாழ்க.

சமய வெறி தணிக என்றார்
சாதி வெறி தணிக என்றார்
சகோதரர்போல் அமைகஎன அறிவித்தார்
பெண்களெல்லாம் நல்லுரிமை அடைக என்றார்
எமைஅகத்தும் புறத்தும் திருத்துதற்கே
எம்பெருமான் சொன்ன தெல்லாம்
இமயமலை இல்லைஎன்று சொன்னதுபோல்
எண்ணினோம் பின் தெளிந்தோம்

பயிர்போன்றார் உழவருக்குப், பால்போன்றார்
குழந்தைகட்குப் பசும்பொற் கட்டித்
தயிர்போன்றார் பசித்தவர்க்குத் தாய்போன்றார்
ஏழையர்க்குத் தகுந்தவர்க்குத்
செயிர்தீர்ந்த தவம்போன்றார் செந்தமிழ்
நாட்டிற்பிறந்த மக்கட் கெல்லாம்
உயிர்போன்றார் இங்குவந்தார் யாம்கொண்ட
மகிழ்ச்சிக்கோர் உவமை யுண்டோ.

—புதுவைக்குப் பெரியார் போந்தஞான்று
பாவேந்தர் எழுதிய வரவேற்புப் பாடலிலிருந்து...

சேர்த்துச் சாப்பிடுவாரே தவிர, பார்த்துக் கொண்டேயிருக்க மாட்டார்.

பெரியார் குடும்பத்தின் நிலை எப்படிப்பட்டது? எந்தப் பக்கம் திரும்பினாலும் வாணிகத்தில் ஆதாயம், நில புலன்கள், வீடு வாசல்கள். இவை எல்லாவற்றையும் பார்த்து 'இவை எனக்குத் தேவை இல்லை' என்றார். 'என் நாட்டு மக்களுக்கு-நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப் போய்க்கிடக்கும் மக்களுக்கு-வேறு ஒரு செல்வத்தைத் தருவேன்; அறிவுச் செல்வத்தைத் தரப்போகிறேன்; சிந்தனைச் செல்வத்தைத் தரப்போகிறேன்; பகுத்தறிவுச் செல்வத்தைத் தரப் போகிறேன்—இவற்றை ஏற்று நடக்கத் தக்க துணிவைத் தரப் போகிறேன். இதைத் தடுக்க எவரேனும் குறுக்கிடுவாரானால் அவர்தம் ஆற்றல்களையும் முறியடிப்பேன். இதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள்' என்று அவர் கிளம்பினார். அதுதான் வாழ்க்கையின் முதற் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி. அதற்குப் பிறகு அவர்



சந்தித்த ஒவ்வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது.

அவர் முக்கியமாய்க் கருதுவது 'தமிழ்நாட்டு மக்களிடையே மனிதத்தன்மை வளர வேண்டும். அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித்தனமான கொள்கைகள் - நாட்டைக் காடாக்கத்தக்க கொள்கைகள்—மனிதனை மிருகமாக்கத்தக்க கொள்கைகள் - வெளியுலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப்பட்ட உருப்படியற்ற கொள்கைகள்-மறைய வேண்டும். இவை நீக்கப்பட்டு, தமிழக மக்கள் துல்லியமான மனத்துடன், தூய்மையான எண்ணத்தில், செயல் திறனில், பகுத்தறிவாளர்களாய், பண்பாளர்களாய்த் திகழ வேண்டும்; அதற்கோர் அறிவுப் புரட்சி தேவை' என்பதே. அவரது நாட்டமெல்லாம் இதிலேயே அமைந்திருக்கிறது. இந்த நாட்டத்தின் உருவந்தான் பெரியார் என்றால், அது மிகையாகாது.

இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபதே ஆண்டுகளில் அவர் செய்து முடித்திருக்கிறார். ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக்கொண்டால், நாட்டினுடைய விழிப்பிற்கு ஐம்பது ஆண்டுகள், ஆட்சி முறையை மாற்றுவதற்கு ஐம்பது ஆண்டுகள் என்ற அளவில், பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக வால்டேர், ரூசோ, இப்படித் தொடர்ச்சியாய்ப் பலர் வந்து வந்து, இரண்டு மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டதால்தான் பகுத்தறிவுப் பாதையிலே அந்த நாடுகள் செல்ல இயன்றது.

இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டுமென்று கிளம்பினார்; திட்டமிட்டார்; அத்திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார். ஆங்கிலத்தில் சொல்வார்கள். 'Putting Centuries into Capsules' என்று. பல மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே தருவது போல பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து, தம் வாழ்நாளிலேயே சாதித்துத் தீர வேண்டுமென-வெற்றி பெற்றுத் தீர வேண்டுமென-அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சின் ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பதைக்கூட இரண்டாம் தரமாக வைத்துக்கொண்டு, எந்த அளவு முன்னேறுகிறோம் என்ப

ணதைக் காண்பதிலேயே வாழ்க்கை முழுவதும் அவர் போராட்டக் களத்தில் நின்றிருக்கிறார்.

அந்தப் போராட்டக் களத்தில் அவர் நின்றிருந்த நேரத்தில், சில பகுதிகளில் நான் உடனிருந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சி அடைகிறேன். கல்லூரியை விட்டு வெளியே வந்ததும் முதலில் நான் அவரிடந்தான் சிக்கிக் கொண்டேன். கல்லூரியில் படித்த படிப்பையும் அதன் மூலம் என்னென்ன எண்ணங்கள் ஏற்படுமோ அவைகளையெல்லாம் நான் காஞ்சிபுரத்தில் உதறித் தள்ளிவிட்டு, ஈரோட்டில் போய்க் குடியேறினேன். இது எனக்கு நன்றாய் நினைவிருக்கிறது. இது பற்றி அப்போது என் பாட்டியார், அவரையொத்த மூதாட்டிகளோடு பேசும்போது அடிக்கடி சொல்லுவார். ஆறுமாதம் அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை நான் காஞ்சிக்குச் செல்கிற நேரங்களில் அவர் என்னைப்பற்றி மற்றவர்களிடம் சொல்லும்போது, 'யாரோ ஈரோடிலிருந்து வந்த ஒருவன், என் பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய்விட்டான்' எனப் பேசுவார். ஒருமுறை காஞ்சிபுரத்தில் ஆடிசன்பேட்டையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பெரியாருடைய பேச்சைக் கேட்ட பிறகு அதே பாட்டியார் சொன்னார் என்னைப் பார்த்து, 'நீ ஈரோடிலேயே இரு' என்று. இத்தனைக்கும் பாட்டியாருக்கு அதிகமாய்ப் படிப்பறிவு இல்லை.

எதனால் இதைச் சொல்கிறேனென்றால், தொடக்கத்தில் பெரியாரிடத்தில் இருந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல இருக்கின்றன. என்னுடைய வாழ்நாள் முழுவதும் எண்ணியெண்ணி மகிழத்தக்கவை அவை. இப்போது எனக்குத் கிட்டியிருப்பது, இனி எனக்குக் கிட்டக்கூடியது என எந்தப் பட்டியலைக் காட்டினாலும் நான் ஏற்கெனவே பெற்றிருந்ததைவிட இவற்றுள் எதுவும் மகிழ்ச்சியிலோ பெருமையிலோ நிச்சயமாக அதிகமானதாய் இருக்கவியலாது.

வீரமிக்க காரியங்களை-வேறு யாரும் எண்ணிப் பார்க்க இயலாத காரியங்களை-நடத்திக் காட்டி, அதில் தாம் பெற்ற வெற்றிகளை நம்மிடம் பெரியார் ஒப்படைத்திருக்கிறார். அவர் சாதித்த காரியங்கள் மிகப் பெரியவை என்றாலும், அவருக்கிருந்த துணிவோடு நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஒரு பெரிய மலை பிளக்கப்பட்டிருக்கிறது. கற்பாறைகள் எல்லாம் கீழே




உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் பக்குவப்படுத்தி அவைகளை எந்தெந்த வடிவத்தில் நாம் செதுக்க வேண்டுமோ அதில் நம்மை நாம் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பெரியார் அழைக்கின்ற அழைப்பைக் கேளாத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர் கூப்பிடும் குரலுக்கு ஓடி வரத் துடியாத இளைஞர்கள் இருந்தது இல்லை.


30 ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்தில் பேசுவதற்குக் கூச்சப்பட்டுக் கொண்டிருந்தவைகளை இன்று நமது எட்டு வயதுச் சிறுவன் வெகு தாராளமாகப் பேசுகிறான். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே நம் மனத்திலே பயந்து கொண்டிருந்த தத்துவங்கள், இன்றைய தினம் கேலிக்குரியனவாகுமென நாடே சொல்கிறது. இரண்டு நூற்றாண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய பகுத்தறிவுப் புரட்சியை இருபது ஆண்டுகளில் அவர் சாதித்துக் கொடுத்ததால், அது நமக்கெல்லாம் எளிதாய் இருக்கிறது; எல்லாம் சுலபமாக இருக்கின்றன.

பகுத்தறிவு வாதம் என்பது, அடிப்படை உண்மைகளை, நெறிகளை மறுப்பதாகாது; எதையும் காரணங் கண்டு, ஆராய்ந்து உண்மை காண்பதாகும். போலித்தனமான எண்ணங்களை—செயல்களை அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு ஆகும்.

அறிவின் எந்தவொரு துறையேயாயினும் அதில் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. நம்முடைய வாழ்க்கை முறைகள் அழியாதவை என நாம் கொண்டாடலாம். ஆயினும், அந்த முறைகளை இளமை குன்றாது, தீவிரத் தன்மையோடு கூடியனவாய் வைத்திருக்க வேண்டுமானால், மாறுதலை ஏற்றுக் கொள்ளத்தக்க—புதிய கருத்துகளை ஏற்றுக் கொள்ளக் கூடிய—இளமை இதயத்தைப் போல நமது இதயம் பசுமையானதாய் விளங்க வேண்டும்.

நாம் நெடுங்காலமாய்ப் பழைய முறைகளிலேயே ஊறி, அவற்றைத் தாங்கி, அவற்றிற்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறி, காலத்தைக் கழித்திருக்கிறோம். இதே காலத்தில், உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தமது இடைவிடா ஆராய்ச்சி, சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தியவுடன் உயர்வும் பெற்றுள்ளனர்.





நாமோ, பழம் பெருமையில் அமர்ந்திருப்பதில் திருப்தி அடைகிறோம்; நம்மையறியாமல் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவராய் இருந்து வந்துள்ளோம். இந்த வகையில், புரையோடிய சமூகக் கருத்துக்களைச் சாடடிக்கும் வீரப் பெரியாரைக் குறை கூறத் துணிவதில் சிறிது கூட அறிவுத் தெளிவு இல்லை. பழம் பெருமை பேசிக் கொண்டு, மூடப் பழக்கங்களில் ஆழ்ந்து அடிமைப் பட்டிருக்கும் சமுதாயத்தைச் சீர் திருத்தி, புரையோடிய சமுதாயக் கருத்துகளை ஒழிக்கப் போராடும் வீரரான பெரியாரைக் குறை கூறிப் பெறும் பயன் என்ன?

பகுத்தறிவே எல்லாருடைய உள்ளங்களையும் தங்கு தடையின்றி ஆளவேண்டும். சாதி ஒழிந்த சமத்துவச் சமுதாயம் அமைக்கும் போர் வீரராக எல்லாரும் முன் வர வேண்டும்; பகுத்தறிவு மூலம் சமுதாயத்தினைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ இயலாத மூடப் பழக்கங்களுக்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டும்.



தமிழகத்தில் இன்று அவரால் ஏற்பட்டுள்ள இந்த நிலையை இந்தியாவில் வேறு எங்கும் காண வியலாது. மற்றப் பகுதியினர் இதுபற்றிக் கேள்விப்படும்போது வியர்த்துப் போகின்றனர்; 'அப்படியா! இயல்கின்றதா? நடக்கின்றதா?' எனக் கேட்கின்றனர். சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு, அரித்துவாரம், கல்கத்தா, பாட்னா, கான்பூர், காசி, இலாகூர், அலகாபாத், அமிர்தசரசு போன்ற பல நகர்களில் என்னையும் உடனழைத்துக் கொண்டு பெரியார் சுற்றுப் பயணம் செய்தபோது, ஒவ்வோர் ஊரிலும் இதைப் போலவே கேட்டனர். யார்? அந்த ஊர்களிலே உள்ள பகுத்தறிவு வாதியார்!

அந்த இடத்துப் பகுத்தறிவு வாதிகள் படிப்பார்கள், பெரிய பெரிய ஏடுகளை; எழுதுவார்கள், அழகழகான கட்டுரைகளை; கூடிப் பேசுவார்கள், சிறிய மண்டபங்களில், போலீசின் பாதுகாப்புப் பெற்றுக் கொண்டு! இங்கோ?

இங்கா? இவர் பேசாத நாள் உண்டா? இவர் குரல் கேளாத ஊர் உண்டா? இவரிடம் சிக்கித் திணறாத பழைமை உண்டா? எதைக் கண்டு இவர் திகைத்தார்? எந்த மூடநம்பிக்கை இவரது தாக்குதலைப் பெறாதது?

'ஏ, அப்பா! ஒருவரே ஒருவர்! அவர் நம்மை அக்கு வேறு ஆணி வேராக எடுத்தெடுத்து வீசுகிறாரே!' என்று இந்நாட்டை என்றென்றும் விடப் போவதில்லை. என்று எக்காளமிட்டுக் கொண்டிருந்த பழைமை அலறலாயிற்று! புதுப் புதுப் பொருள் கொடுத்தும், பூச்சு மெருகு கொடுத்தும் இன்று பழைமையின் சில பகுதிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்றாலும், விழுந்த அடியால் அடித்தளம் நொறுங்கிப் போய்விட்டிருக்கிறது என்பதனை அறியாதார் இலர்.

எனவேதான்,

**பெரியாருடைய பெரும்பணியை, ஒரு தனி மனிதரின் வரலாறு என மட்டுமின்றி, ஒரு சகாப்தம்—கால கட்டம். —ஒரு திருப்பம்**


எனவும் நான் கூறுவது வழக்கம். அக்கிரமம் தென்படும்போது, பெரும்பாலோர்க்கு, 'அது நம்மைத் தாக்காதபடி தடுத்துக் கொள்ள வேண்டும்' என்னும் எண்ணமும் 'ஒதுங்கிக் கொள்வோம்!' என்னும் பாதுகாப்பு உணர்ச்சியுமே தோன்றும்'. 'எதிர்த்து நிற்க வேண்டும்' என்னும் எண்ணம் எளிதில் எழுவதில்லை.

அக்கிரமம் எங்கு இருக்கக் கண்டாலும், எந்த வடிவிலே காணப்படினும், எத்துணைப் பக்க பலத்துடன் வந்தாலும் அதனை எதிர்த்துப் போரிடத் தயங்குவதில்லை பெரியார். அவர் கண்ட களங்கள் பல! பெற்ற வெற்றிகள் பலப்பல! அவர் தொடுத்த போர் நடந்தபடியே இருக்கிறது. அந்தப் போரிலே ஒரு கட்டத்தில் அவருடன் இருந்திருக்கும் வாய்ப்பினைப் பெற்ற நாள்களையே நான் 'வசந்தம்' என்று குறிப்பிட்டேன்.

பெரியாரால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி, எளிதில் நிற்கப் போவதில்லை. அது போக வேண்டிய தூரத்திற்குப் போய் அடைய வேண்டிய சக்தியை—இலக்கைத் தொட்ட பின்புதான் நிற்கும். எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணையின் வேகம், பாய வேண்டிய இடத்தில் பாய்ந்தேதான் நிற்குமோ, அப்படியே அவரிடத்திலிருந்து பிறந்த அறிவுக் கணை, எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ, அதை அடைந்தே தீரும்; இதில் யாருக்கும் ஐயம் இல்லை.

—அறிஞர் அண்ணா தமிழக முதல்வராய் இருந்தபோது எழுதப்பட்ட கட்டுரை.

# பெரியார் ஒரு மகத்தான தத்துவம்





## மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர்

'பெரியார்' ஒரு தனி மனிதரின் பெயரல்ல. ஒரு நாட்டின் நூற்றாண்டு வரலாறு. மனித சமுதாயத்தின் ஒரு மகத்தான தத்துவம்.

உலகில் தோன்றி மறையும் கோடானு கோடி மனிதர்களில், மிகச் சிலரே இப்படி வரலாறாக, வாழ்க்கையின் தத்துவமாக வாழ்ந்து மறைகின்றனர்.

இத்தகைய ஒரு பெருஞ் சிறப்பு, பெறற்கரிய பேறு, தமிழ் மண்ணிற்குக் கிடைத்தது. இந்த மண்ணிலேதான் பெரியார் பிறந்தார். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'' என்று முழங்கினார் பாரதியார். அந்தத் தமிழகம்தான், இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளரை, விடுதலை வீரரை, பகுத்தறிவுப் பகலவனை, புத்துலகச் சிற்பியை—தந்தை பெரியாரை —உலகிற்கு வழங்கியது.



ஆனால், துரதிருஷ்டவசமாக, அவர் தமிழகத்திலே பிறந்து விட்டதால், உணர வேண்டிய அளவிற்கு உலகம் அவரை உணரவில்லை. ஏன்—இந்தியத் துணைக் கண்டமே முழுமையான பெரியாரை, இன்னும் உணரவில்லை. உணரவில்லை என்பதை விட, திட்டமிட்டு மறைத்தார்கள் என்றே கூறலாம். என்றாலும்,

''காரிருளால் சூரியன்தான் மறைவ துண்டோ,
கறைச்சேற்றால் தாமரையின் வாசம் போமோ,
பேரெதிர்ப்பால் உண்மைதான் இன்மை யாமோ,
பிறர்சூழ்ச்சி செந்தமிழை அழிப்ப துண்டோ
சீரழகே, தீந்தமிழே பெரியோய் உன்னைச்
சிறையிட்டு மறைத்துவிட்டால் அழிந்தா
போவாய்?''

என்று பாவேந்தர் பாரதிதாசன் கேட்டதைப்போல், பெரியாரின் ஆற்றலை, அறிவை, அவர் உருவாக்கிய தத்துவத்தை முழுவதுமாக அழிக்க—அல்லது மறைக்க —அவர்களாலே முடியவில்லை. ஆனால், முழுமையான பெரியாரை, தமிழகத்தின் நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலவை, உலகம் அறியச் செய்யும் முயற்சியில் இந்த ஆண்டில் தமிழக அரசும், தமிழ் மக்களும் ஈடுபட இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசியலிலே நுழைந்த அவர், அரசியற் பணியின் அறுவடை, அரசுப் பதவிதான் என்று எண்ணி, அதிலே ஈடுபட்டிருந்தால், இன்று நாடு முழுவதும் இன்னும் அதிக அளவிலே அறிமுகமாகி இருப்பார் ; பாராட்டும் புகழும் பல மடங்கு பெருகியிருக்கும். ஆனால் அவர் வாழ்க்கையை ஒரு போராட்டக் களமாக மாற்றி, வாழ்நாள் முழுவதும் சமூக அநீதிகளை எதிர்க்கும் போராட்ட வீரராகவே விளங்கி மறைந்தார்.



சீமான் வீட்டுப் பிள்ளையாகப் பிறந்தார்; சீமான்கள், செல்வாக்குப் பெற்றவர்கள் மட்டுமே, சொந்தமாக்கிக் கொண்டிருந்த நகராட்சி மன்றத்திலேதான் பொது வாழ்வைத் தொடங்கினார்; ஆனால், அரசியல் அவரை ஈர்த்தபொழுது, அஞ்சாநெஞ்சம் படைத்த விடுதலை வீரராய் நுழைந்தார்; போராட்டக் களங்களிலே தலைமை ஏற்கும் தளநாயகனாக விளங்கினார். ஆம்—பெரியார் ஒரு பிறவித் தலைவர்!

ஆனால் விடுதலை இயக்கம், ஒரு காட்டாற்று வெள்ளம் போல் கரை புரண்டு ஓடியபொழுது, அந்த வெள்ளத்திலே அடித்துச் செல்லப்பட்ட ஆயிரமாயிரம் உண்மைத் தொண்டர்களுக்கு மத்தியிலே, குறுகிய உள்ளம் படைத்தோர் சிலரும் இடம்பிடித்து, தூய இயக்கத்தை தங்களின் சுயநலத்திற்குப் பயன்படுத்தும் தீய செயலைக் கண்டு, கொதித்தெழுந்தார்; கொடுமைகளைக் களைந்தெறியப் போர்க்கோலம் பூண்டார்; புரட்சிக் கனலாக மாறினார்.

மென்மையாக உடலைத் தீண்டி, மெய்சிலிர்க்க வைக்கும் தென்றல் காற்றல்ல பெரியார்; சுழன்றடிக்கும் சூறாவளி.

சல சல வென்று ஒலி எழுப்பி, கண்களுக்கு விருந்தாய், கானிலே வளைந்தோடும் சிற்றாறல்ல பெரியார்; பொங்கிப் பாயும் கங்கை நதி.

காண்போர் மனம் கவரும் வெள்ளிப்பனிமலையல்ல பெரியார்; வெடித்துச் சிதறும் எரிமலை.




ஆம்! அவர் சித்தார்த்தனாகத்தான் பிறந்தார். ஆனால் புத்தராக மாறவில்லை;

போர்க் கோலம் பூண்டார்;

சமூக அநீதிகளை, அக்கிரமங்களை அழிக்கப் புறப்பட்டார்.

கொடுமைகளைக் கண்டு அஞ்சுவது கோழைத்தனம், ஒதுங்குவது ஈனத்தனம் என்று வீர முழக்கமிட்டார்.

ஒரு நூற்றாண்டுக்கால வீர வரலாறு படைத்தார்.

கொடுமைகள், அநீதிகள், ஆட்சியிலே இருந்தாலும் சரி—அரசியலில் இருந்தாலும் சரி—சமுதாயத்தில் இருந்தாலும் சரி—தனி மனித வாழ்க்கையில் இருந்தாலும் சரி—எதிர்த்து ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்று முழங்கினார்.

சமுதாயத்திலே உள்ள அநீதிகளுக்கு எல்லாம் அஸ்திவாரம், சாதி, சமய பேதங்கள்—மூடநம்பிக்கை முறைகள் என்று உணர்ந்தபொழுது அந்த அஸ்திவாரத்தையே தகர்க்கப் போரிட்டார்.

இப்படி வாழ்நாள் முழுவதும் போராட்ட வீரராகவே தன்னை மாற்றிக் கொண்டார். எடுத்துக் கொண்ட முயற்சிகள் எதிலுமே, தனக்கென்ன இலாபம் என்று எண்ணிப் பார்க்காததால்; யாருடைய தயவுக்கும் தாட்சண்யத்திற்கும் அவர் காத்து நிற்கவில்லை; அவருடைய சிந்தனை முழுவதும் தமிழ் நாட்டைப் பற்றியே இருந்தது ; தமிழ் மக்களைப் பற்றியே இருந்தது ; பொதுவாக மனித இனத்தைப் பற்றியே சுழன்றது.



மலைகளைப் பிளந்து, காடுகளை அழித்து நல்ல கழனிகளாக்கும் முயற்சியிலே ஈடுபட்டார்.

அதனால் பாறைகளைப் பிளக்க வெடி வைத்துத் தகர்ப்பதைப் போல், காடுகளை அழிக்க, புதர்களை, மரங்களை வெட்டி வீழ்த்துவது போல், அவர் கையாண்ட வழி முறைகளும் இருந்தன. அந்த வழி முறைகளைக் கண்டு மருண்டவர்கள் பல பேர்.

ஆனால், அவர் அடித்தளம் அமைத்துக் கொடுத்ததற்குப் பிறகுதான் இன்றைக்கு நாம் கட்டிடம் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். அவர் பாறைகளை அகற்றிப் பாதை அமைத்ததற்குப் பிறகுதான், நாம் பயணம் செய்து கொண்டிருக்கிறோம்.

இவ்வளவும் ஏற்படுத்திக் கொடுத்த அவர், அந்த மாளிகையில் வாழ நினைக்கவில்லை; அந்தப் பாதையில் சொகுசான பயணம் செய்ய விரும்பவில்லை. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எப்பொழுதோ, யாரோ சொன்ன வார்த்தைகட்கு உயிரளித்தார்; அதற்கு ஒரு இலக்கியமாய் வாழ்ந்தார்.

"பெரியார் மட்டும் பிறக்காவிட்டால்?" என்ற கேள்வியை எண்ணிப் பார்க்கவே, இதயம் நடுங்குகிறது. பெரியார் இல்லையானால், பேரறிஞர் அண்ணா நமக்குக் கிடைத்திருக்க மாட்டார். பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும் இல்லையானால், இருண்டு கிடந்த தமிழ்நாட்டிற்கு ஒளி கிடைத்திருக்காது.

இன்றைக்குத் தமிழ்நாடு, தமிழ்ச் சமுதாயம், தமிழ் மொழி என்று எக்காளத்




தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவினை ஒட்டி, பெரியாரின் பிறந்த நாளான 17-9-1978 அன்று ஈரோட்டில் நடைபெறும் விழாவில் மைய அரசு வெளியிடவிருக்கும் பெரியார் அஞ்சல் தலை


தோடு பேசுகிறோமே, இவைகளெல்லாம் ஊமையன் கண்ட கனவாக, கேட்பாரற்று மங்கி, மறைந்து போயிருக்கும். விடுதலைப் போராட்ட வெள்ளத்திலே அடித்துச் சென்று, தமிழ் இனம்—மொழி—கலை—கலாச்சாரம், என்ற சுவடே தெரியாமல் அழிக்கப்பட்டிருக்கும்.

**"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே.."**

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்**
**இனிதாவ தெங்குங் காணோம்"**

**''கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே**
**வாளொடு முன்தோன்றி மூத்த குடியினர்"**

என்ற இலக்கியப் பெருமைகளெல்லாம், காற்றோடு கலந்து, காலத்தோடு மறைந்திருக்கும். அதனால்தான் 1967-ஆம் ஆண்டு தமிழகத்திற்கு, அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வரானவுடன், நன்றி மறவாமல், ''இந்த அரசையே பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறேன்'' என்று அறிவித்தார்கள்.





ஆனால் நமக்காக, இவ்வளவு பெருமைகளையும் காப்பாற்றுவதற்காக அறுபதாண்டுக் காலத்திற்கு மேல் உழைத்தார்; போராடினார். அந்தப் போராட்டத்தில் வெற்றி பெற்ற வீரராக, வெண்தாடி வேந்தர் பெரியார் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அந்த வரலாற்று நாயகனுக்கு, தத்துவத்தின் தந்தைக்கு, பகுத்தறிவுப் பகலவனுக்கு இந்த ஆண்டு செப்டம்பர் 17-ஆம் நாள் நூறாவது ஆண்டு துவங்குகிறது. வாழ்நாளெல்லாம் நமது நல்வாழ்வுக்காகப் போராடிய அந்த மாவீரனுக்கு, தமிழகம் விழா எடுக்கத் திட்டமிட்டிருக்கிறது.

## 1978 தந்தை பெரியார் நூற்றாண்டு விழா 1979

**பேரறிஞர் அண்ணா அவர்கள் காணிக்கையாக்கிய தமிழக அரசு, இப்பொழுது அமைந்துள்ள "அண்ணாவின் அரசு", அதிகாரபூர்வமாக, ஆண்டு முழுவதும் விழா எடுக்க எண்ணியுள்ளது. விழாவோடு நின்று விடாமல், பெரியாரின் இலட்சியங்களை—சாதி, மதமற்ற, சமத்துவ சமுதாயத்தை—ஏழை பணக்காரன் என்ற பேதமற்ற சமதர்ம சமுதாயத்தை அமைக்கும் பணிகளை—நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற செய்தியைத் தமிழக அரசின் சார்பில், தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக்குகிறேன்.**

# அவர்தாம் பெரியார்



அவர்தாம் பெரியார்—பார்
அன்புமக்கள் கடலின் மீதில்
அறிவுத் தேக்கம் தங்கத் தேரில்..... (அவர்)

மக்கள் நெஞ்சில் மலிவுப் பதிப்பு
வஞ்ச கர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும் படையின் தொடுப்பு..(அவர்)

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகுதொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்.... (அவர்)

தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும்தலை மேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமை அவரின் போருக் கொப்படை... (அவர்)

*(குயில் 26—8—58)*



பாவேந்தர்
**பாரதிதாசன்**

# தலைசிறந்த சீர்திருத்தவாதி



-மாண்புமிகு
சட்டமன்ற மேலவைத் தலைவர்
சிலம்புச் செல்வர்
ம. பொ. சிவஞானம்



இருபதாம் நூற்றுண்டில் இந்தியாவில் தோன்றிய சமூக சீர்திருத்தவாதிகளிலே தலைசிறந்தவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி.

இவருடைய சீர்திருத்த இயக்கமானது மனிதாபிமானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். மனிதாபிமானத்திற்குக் கீழ்ப்பட்ட அபிமானம் எதனையும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

95 ஆண்டுகள் முடிவுபெற்ற நிலையிலே பெரியாரின் வாழ்க்கை முடிவுற்றது. பூதவுடல் மறைந்த பின்னும், அவர் இந்திய மக்களின் இதயத்திலே இன்னமும் புகழுடல் கொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்; இனியும் வாழ்வார்.

பெரியார் ஈ. வெ. ரா, காந்தியடிகளின் தலைமையைப் பெற்றிருந்த நேரத்திலே பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போரிலே இரண்டறக் கலந்தார் சட்டத்தை மீறி பலமுறை சிறை புகுந்தார். ஆம்; இந்திய தேசியத்தின் வழியாகத்தான் பெரியார் ஈ. வெ. ரா. சமூக சீர்திருத்த இயக்கத்தைத் தோற்றுவித்தார். அவரையும், அவரது அருமை மனைவியார் திருமதி நாகம்மாளையும் காந்தியடிகளே பாராட்டியது உண்டு. பெரியார் பிறவிச் சீர்திருத்தவாதி. விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த காலத்திலேயே புரட்சிகரமான சமூதாய சீர்திருத்தக் கருத்துக்களைத் தாம் கலந்து கொண்ட அரசியல் மாநாடுகளிலே வெளிப்படுத்தினுர்.

பெரியாருக்கு முன் தமிழகத்தில் தோன்றிய சமூக சீர்திருத்தவாதிகள் எல்லாம் தங்களுடைய கொள்கைகளை நீதிபோதனைகளாகச் சொன்னதோடு நின்றுவிட்டார்கள். பெரியார் ஈ.வெ.ரா அதற்கென ஓர் இயக்கத்தையே படைத்தார். அந்தப் பேரியக்கத்திலிருந்து வேறு பல இயக்கங்களும் கிளைவிட்டுத் தழைத்ததையும் கண்டார். அத்தனை இயக்கங்களுக்கும் சேர்த்து சரித்திரம் தந்துள்ள பொதுப் பெயர் திராவிடர் இயக்கம் என்பதாகும் அதன் தந்தைக்குத்தான் இன்று நூற்றுண்டு விழா நடக்கிறது.

ஈ. வெ. ரா. பல்கலைக் கழகப் பட்டதாரி அல்ல. ஆனுல், பட்டதாரிகள் எல்லாம் கேட்டு வியக்குமளவிற்கு அவர் பகுத்தறிவு வாதம் புரிந்தார். அவர் கடைப்பிடித்த நடைமுறைகளில் கருத்து வேற்றுமை காட்டியவர்கள்கூட அவர் கொண்டிருந்த சீர்திருத்தக் கொள்கைகளை விரும்பி, அதற்காக அவரிடம் மதிப்புக் காட்டி வந்தனர். அவர்களிலே நான் ஒருவன்.

அவர், பகுத்தறிவு இயக்கம் வேறு; தமது வாழ்க்கை வேறு என்று வாழ்ந்தவர் அல்ல. பகுத்தறிவு இயக்கத்தையே தமது வாழ்க்கையாக அமைத்துக் கொண்டவர். அவர் நடத்தி வந்த பகுத்தறிவு இயக்கமானது வேறு எங்கிருந்தும், எவரிடமிருந்தும் இரவல் பெற்றது அல்ல. அவரே படைத்து, அவராலேயே வளர்க்கப்பட்டதாகும். சரியாக அரை நூற்றுண்டுக் காலம் சமுதாய சீர்திருத்த இயக்கத்தைக் கட்டி வளர்த்து அது தமிழ் மண்ணில் ஆழமாக வேரூன்றச் செய்து விட்டார். தன்னுடன் கருத்துவேற்றுமை கொண்ட தனி நபர்களிடமும் பெருமதிப்புக் காட்டிப் பழகும் பண்பினை அவர் பெற்றிருந்தார். அதனை அவரிடம்போல வேறு எவரிடமும் நான் கண்டதில்லை.

பெரியார் நூற்றுண்டு விழாவை மாண்புமிகு எம். ஜி. ஆர். தலைமையைப் பெற்றுள்ள தமிழக அரசு முன்னின்று கொண்டாடுவது வரவேற்கத்தக்கதாகும். ஈரோடு நகரிலேயே அந்த விழாவைத் தொடங்குவது பெரியார் பிறந்த மண்ணுக்குப் பெருமை தருவதாகும்.

பெரியாரின் நூற்றுண்டு விழாவையொட்டி அவரது நினைவாக அஞ்சல் தலை வெளியிடுவதன் மூலம் இந்தியப் பேரரசும் இந்த விழாவில் பங்குகொள்வது தமிழருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருவதாகும்.

வாழ்க, பெரியார் புகழ்!



# காலத்தையே மாற்றிய கர்மவீரர்



தமிழகத்தில் எத்தனையோ பெரியோர்கள் வாழ்ந்து இருக்கிறார்கள். ஆனால் பெரியார் என்று சொல்லுகிறபோது அது ஈரோடு ராமசாமி அவர்களைத்தான் குறிக்கும் என்கிற அளவுக்கு மகத்தான சாதனைகள் புரிந்த ஒருவராகப் பெரியார் திகழ்ந்து இருக்கிறார். பெரியார் என்ன சாதித்தார் என்று கேட்டு விடுவது கலபம். சாதாரண சாதனைகளாக இருந்தால் ஒரு பட்டியல் போட்டு இவைதான் அவருடைய சாதனைகள் என்று சுலபத்தில் சொல்லிவிட முடியும். அப்படிப் பட்டியல் போட்டுக் காட்டும் சாதனைகள் புரிந்தவர் அல்ல பெரியார்.

காலத்தின் போக்கையே மாற்றிய கர்மவீரர் அவர். சமூகத்தின் அடித்தளத்தையே பெயர்த்து புதிய சமூகம் அமைப்பதற்கு அஸ்திவாரம் போட்டவர். அந்த அஸ்திவாரத்தின் மீது கண்கவரும் மாளிகைகள் இன்றைக்கு எழுந்து இருக்கலாம். ஆனால் கண்ணுக்குத் தெரியாத அஸ்திவாரத்தின் மேல்தான் அந்த மாளிகை நிற்கிறது என்பதை யாரும் மறந்து விட முடியாது.

பெரியாரைப் போல, பிற நாடுகளிலும் எத்தனையோ பேர் சமூகச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர். அவர்கள் தங்கள் பணியின் முழுப் பலனையும் தங்கள் வாழ்நாளிலே பார்த்தார்களா என்றால், இல்லை, என்கிற பதில்தான் கிடைக்கும். ஆனால் பெரியார் தன்னுடைய எண்ணங்கள் வெற்றி பெறுவதைத் தன்னுடைய வாழ்நாளிலேயே கண்டு களிக்கும் பேறு பெற்றவர்.



மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி**

உலகச் சீர்திருத்தக்காரர்கள் பலர், சீர்திருத்த எண்ணங்களை எண்ணத்தில் வடித்து இருப்பார்கள்; பேச்சில் வெளியிட்டு இருப்பார்கள். ஆனால் பெரியாரைப் பொறுத்த வரையில் எண்ணங்களைச் சொல்லுகிற சிந்தனையாளராக மட்டும் இல்லாமல், எண்ணங்களை நடைமுறைப்படுத்தத் துணிந்து போராடுகின்ற போராட்ட வீரராகவும் இருந்தார்.

'எண்ணத்தைச் சொல்லி விடுவோம்; சமூகம் ஏற்றுக் கொண்டு மாறும்போது மாறட்டும்' என்கிற சிந்தனையாளர்களும் இருக்கிறார்கள். பெரியாரைப் பொறுத்தவரையில் செயல் திட்டம்தான் அவருடைய குறிக்கோள். கடைசி மூச்சு உள்ள வரையில் தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் பம்பரமாகச் சுழன்று தன்னுடைய கருத்துக்களை மக்களிடையே பரப்பி வந்தார்.

நாத்திகப் பிரச்சாரம் செய்த பெரியார், கருத்துக்களை சொன்னதோடு நின்று விடாமல், சிலைகளை பொது இடங்களில் வைத்து உடைத்து நாத்திகக் கருத்தினையே செயல் வடிவமாக்கி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தினார். பெரியாரின் முறைகள் சற்றுக் கடுமையானவைகளாக இருந்து இருக்கலாம். ஆனால் அவருடைய நோக்கம் தூய்மையானது.

ஒரு காலத்தில் பெரியாரையே தீண்டத் தகாதவர் மாதிரி எண்ணி இருந்த சமுதாயம், இன்றைக்குப் பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடி அவரைக் கௌரவித்துக் கொண்டு இருக்கிறது. பெரியாரின் எண்ணங்கள் முழுமையாக நிறைவேற காலதாமதம் ஆகலாம். ஆனால் வரலாற்றில் பெரியாரின் பாத்திரம் என்ன என்பதை சமூகம் அங்கீகரித்து விட்டதற்கு இது ஒரு அடையாளம்.

வாழ்க பெரியாரின் தொண்டு!

வெல்க அவரது எண்ணங்கள்!






# தேசியச் செம்மல்


கார்கா லத்துக் கறுத்த மேகங்கள்
மண்ணிடைப் பொழியும் மழைபோல் காட்டில்
சீர்திருத் தத்தைத் திறம்படச் சொன்னவர்
செந்தமிழ் எழுத்தில் திருத்தம் செய்தவர்
மதுவிலக் கென்பதை மனதால் விரும்பி
மனையின் தென்னை மரங்களை வெட்டி,
செயலில் காட்டிய திறமிகு தலைவர்
கடைகளி லிருந்து கதருடை எடுத்து
தெருவினில் விற்ற தேசியச் செம்மல்
சரியோ தவறோ தனக்குள் பட்டதை
புட்டுப் புட்டுப் புகன்றதோர் நேர்மையர்
எதிர்ப்பில் பிறந்து எதிர்ப்பில் வளர்ந்து
இறுதி வரைக்கும் இயங்கிய சாரணர்
கருத்து மாற்றங்கள் காணினும் அவரை
ஒப்புக் கொண்டனர் ஒவ்வொரு தலைவரும்!
தனக்கென என்றுத் தனிவழி வகுத்து,
வந்தவர் கணக்கோ வாராதவர் கணக்கோ
பாராது சென்ற பழந்தமிழ்த் தலைவர்
பெரியார் தமது பிறந்தநாள் இன்று!
நுவலற் கரிய நூற்றாண்டு விழாவை
தான்கொண் டாடும் தமிழக அரசு
வான்கொண் டாடும் மதியென வாழ்கவே!

—அரசவைக் கவிஞர் திரு. கண்ணதாசன்







# பெரியாரைத் துணைக்கொள்!

திரு ஏ. பி. சனார்த்தனம், எம்.பி.

சாக்ரடீஸ், பெர்ட்ராண்டு ரசல் போன்ற உலக சிந்தனையாளர் வரிசையில் பெரியார் நிலைத்து விடுவார்.

அவர் பல பெயர்களில், பல வடிவங்களில் ஐம்பதாண்டுகளுக்கு மேல் தமிழகத்தில் பம்பரம் போல் பணியாற்றி, தமிழனுக்குத் தன்மான உணர்வை ஊட்டி தலை நிமிரச் செய்தார்.


துணிச்சலுடன் சிறந்த கருத்துக்களை பசுமரத்தாணி போல், எளிய தமிழில் எடுத்துக் காட்டியதால் அவர் இரண்டாம் வள்ளுவராகிறார்.

அனைவரும் போற்றிக் கடைப்பிடிக்கக் கூடிய சில உயர் பண்புகளை அவரிடம் கண்டேன்.

*1934* முதல், கடைசி வரை நான் அவரது பித்தனாகவே இருந்ததால் இந்தப் பண்புகளைக் காண வாய்ப்புக்கள்—ஏராளம், ஏராளம்!

தமிழர்கள், தன் மனிதர் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டிய அந்தச் சிறப்புக்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

பெரியார் 60 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்தார்! கடுமையாக உழைத்தார்! பம்பரம் போல் பணியாற்றினார். இந்தப் பகுதிகளில் அவர் போகாத இடமே இல்லை. ரஷ்யா, பிரிட்டன், மலேயா, பர்மா போன்ற வெளிநாடுகளிலும் சுற்றியிருக்கிறார். இடைவிடாத சுற்றுப் பயணங்கள், பத்திரிகைக்கு எழுதுதல், இலட்சக்கணக்கான உறுப்பினர் கொண்ட இயக்கங்களுக்குத் தலைமை தாங்குதல், இடைவிடாத கிளர்ச்சிகள், பன்முறை கடுஞ்சிறை! இராட்டினத்தைத் தோளில் சுமந்து கொண்டு கதர்ப் பிரச்சாரம் செய்த நாள் முதல், மூடநம்பிக்கைகளை எதிர்த்து தனது 94 வயதிலும் சிங்கக் குரல் தந்த நாள் வரை அவரது உழைப்பு இணையற்றது. பசி நோக்காமல், கிடைத்ததைத் தின்று, கண் துஞ்சாமல், தவறாமல் ஒப்புக் கொண்ட ஊர்களுக்குச் சென்று, தன்னை விடப் பல மடங்கு வயது குறைந்த இளைஞர்களை உறக்கத்தினின்று தட்டி எழுப்பிய சிங்கம் அவர்! தமிழர் உரிமைகளுக்குச் சிலிர்த்து எழுந்து முழக்கமிட்ட ஈரோட்டுச் சிங்கம்!



பெரியார் எதில் இறங்கினாலும் எதைப் பேசினாலும், எதில் ஈடுபட்டாலும், அதில் இரண்டறக் கலந்து விட்டார். வேறு எந்த நோக்கமோ, விருப்போ, வெறுப்போ இல்லாமல் தனக்குச் சரி என்று பட்டதற்கு முழுமூச்சுடன் ஈடுபட்டார். இந்த ஈடுபாடு (Dedication) அவரை, மடமை மலைகளுக்கு வேட்டு வைக்கும் எதிர் நீச்சல் பணியில் உந்தித் தள்ளியது. தன்னையே நம்பி, தன்னால் தான் தன்மான உணர்ச்சி ஊட்ட முடியும், தன்னால்தான் அதற்குரிய விலை தர முடியும் என்ற அபார நம்பிக்கையுடன் இலக்கு நோக்கிக் கண்ணும் கருத்துடன் நடைபோட்டார்! வென்றார்!


பெரியாரின் துணிச்சல் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் காணக்கூடிய துணிச்சல்! ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக திசை மாறிவிட்ட, பாசி படர்ந்து விட்ட, அச்சம் நிறைந்து விட்ட, கூனி வளைந்து ஆமை ஊமையாகி, விட்ட, பிறவி அடிமைத்தனம் இரத்தத்தில் ஊறி விட்ட, மக்களுக்குக் கசப்பான உண்மைகளை உணர்த்தினார். பெரிய பெரிய ஆதிக்க வர்க்கங்களின் இரும்புப் பிடிகளை உடைக்க முனைந்தார். உற்றார், உறவினர், ஊரார் இடையே ஊறிவிட்ட அழுக்குக் குட்டையை அகற்றிவிடப் பாடுபட்டார். எத்தனை எத்தனை மிரட்டல்கள்! எத்தனை எத்தனை எதிர்ப்புகள்! இத்தனையும் அவரது உறுதியைக் குலைக்கவில்லை! அவர் துணிந்து தொண்டாற்றியிரா விட்டால் தமிழகத்தில் தெளிவில்லை, மானமில்லை, உணர்வில்லை! பாமரராய் விலங்குகளாய் அஞ்சி அஞ்சி வாழ்ந்த மக்களைத் தட்டித் தட்டி எழுப்பிய பெரியாரின் துணிச்சல் உலக வரலாற்றிலேயே ஒரு பென்னேடு!

பெரியாருக்கு எதிலும மயக்கம் கிடையாது. 'ஏன்' என்ற கேள்வி போட்டு, பிரச்சினையின் வேரைக் கண்டு பிடிப்பதில் அவர் இணையற்ற சிந்தனையாளர். எதையும் கண்ணை மூடி ஏற்காமல், இவர் சொன்னார், அவர் சொன்னார் என்பதற்காக எதையும் நம்பி விடாமல், பகுத்தறிவின் துணைக் கொண்டு உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும் என்பதே பெரியாரின் உள்ளம். 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற குறள், பெரியாரின் பகுத்தறிவு உரைகல்லுக்கு அடிப்படை. இதனால்தான் பெரியாரை நாம் 'தென்னாட்டு சாக்ரடீஸ்' என்றழைக்கிறோம்.

பெரியாரின் சிக்கனமும் எளிமையும் எல்லோரையும் கவர்ந்தன. செல்வம் அவரிடம் குவிந்திருந்தபோதிலும், மிகவும் சிக்கனமாக இருந்தார். தன் தொண்டர்கள் பகட்டுக்கு இரையாகி விடக் கூடாது என்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். பல இடங்களில், வலிய வந்த வசதிகளை உதறி விட்டு மிக எளிய முறையில் வாழ்ந்தார். ஏழைத் தொண்டர், குடிசையில் தந்த கூழையும் மகிழ்ச்சியுடன் ஏற்கும் பக்குவம் பெற்றிருந்தார். சிக்கனத்தில் கடைந்தெடுத்த காந்தியம் அவரைப் பற்றிக் கொண்டது. தான் சிக்கனமாக இருந்ததோடு மற்றவர்கள் செலவழித்தாலும் கடிந்து கொண்டார். எறும்பைப் போல் உழைத்து, தேனீ போல் செல்வம் குவித்து, அனைவரும் போற்றும் நாணயத்துடன் வாழ்ந்தார். ஊருக்கு உபதேசித்ததைத் தானே முன் நின்று கடைப்பிடித்ததில் அவர் தென்னாட்டுக் காந்தியாகிவிட்டார்.

பெரியார், காலந் தவறாமல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தவர்களை அவர் என்றுமே தவிக்க விட்டதில்லை. 'போய் மேடையில் உயிரை விடலாம், எவ்வளவு பாடுபட்டுக் கூட்டம் நடத்துகிறார்கள்' என்று தொண்டர்களின் துடிப்புகளை எங்களுக்கு உணர்த்தினார். வாக்குறுதிகளை அப்படியே காப்பாற்றினார்.

உதட்டில் தேன்—உள்ளத்தில் நஞ்சு, இவை பெரியாரிடம் அறவே கிடையாது. பட்டதை அப்படியே சொல்லி விடுவார். பாகுமொழி பேசி விட்டுப் பள்ளம் பறித்ததில்லை. தன்னை விட்டு யார் பிரிந்தாலும் அவர்களைப் பழி வாங்கி அழிக்க வேண்டும் என்ற அற்பத்தனம் அவரிடம் அறவே இருந்ததில்லை. சிறு நரியாக இருந்ததில்லை! சிங்கமாகவே இருந்தார்! பெரியாரின் இத்தகைய சிறப்பியல்புகள் கருத்து வேறுபட்டவர்களாலும் பாராட்டப் பட்டவை. அவைகளை இந்த நூற்றாண்டு விழா நேரத்தில் குறிக்க வாய்ப்பளித்த 'தமிழரசு'க்கு நன்றி!



## தந்தை பெரியார் குறித்தும், பகுத்தறிவு இயக்கம் குறித்தும் ஆராய்ச்சி செய்துள்ளோர் விவரம்

1. திருமதி சாந்தி நாகநாதன், எம்.ஏ., எம்.லிட்.,

பொருளாதார விரிவுரையாளர், எதிராஜ் மகளிர் கல்லூரி, சென்னை-8

பொருள் : பெரியார் ஈ.வெ.ரா. அவர்களின் சமூக, பொருளாதார சிந்தனைகள்.

Socio-Economic Thoughts of Periyar E. V. Ramasami

(1977ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகம் எம்.லிட்., பட்டத்திற்கு)

2. திரு. நா. கா. மங்கள முருகேசன், எம் ஏ.,

வரலாற்று உதவிப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை.

பொருள் : தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கமும், தந்தை பெரியாரின் பங்கும்.

"Self-Respect Movement in Tamil Nadu with Special Reference to Periyar E.V.R."

(1977ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் எம்.லிட். பட்டத்திற்குத் தயார் செய்யப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரை)

3. எஸ். சரஸ்வதி.

பொருள் : தமிழ் நாட்டில் சிறுபான்மையினர்.

"Minorities in Madras State—A Study Group of Interests and Their Organisation in Madras."

(சென்னைப் பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டத்திற்கு ஆராய்ச்சிக் கட்டுரை).

4 R. L. Hardgrave

Sub : The Dravidian Movement—Bombay, 1965.

5. திரு. ஈ. சா. விசுவநாதன்

பொருள் : பெரியாரின் அரசியல் வரலாறு : 1929—1937.

"The Political Career of Periyar — E.V. Ramasami Naicker—1929-1937

(கேன்பெரா தேசிய பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா, 1973).

6. Irsehick, Eugene

பொருள்: தென் இந்தியாவில் அரசியல், சமுதாயப் போராட்டம். பிராமணரல்லாதார் இயக்கம் — தமிழ்ப் பிரிவினை, 1916—1929.

"Politics and Social Conflict in South India : The Non-Brahmin Movement and Tamil Separatism—1916-1929."

(1969, ஆக்ஸ்போர்ட், லண்டன் )

7. Christopher John Baker

பொருள் : தென் இந்தியாவில் அரசியல் (1920—1937).

"The Politics of South India."

விக்காஸ் பப்ளிஷிங் ஹவுஸ், பிரைவேட், புது டெல்லி, *1976*.

8. **டாக்டர் ஆர். பாஸ்கரன்**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் அரசியல் துறைத் தலைவர், பேராசிரியர்.

பொருள் : அரசியல் தலைமை —பெரியார்—காமராஜ் ஓர் ஒப்புநோக்கு— ஜெனிவாவில் *1963*ல் நடைபெற்ற சர்வதேச அரசியல் மாநாட்டில் படிக்கப்பட்ட கட்டுரை.

"Leadership in Madras State — A Comparative Study of Periyar and Kamaraj—Paper read before the International Political Conference at Geneva—1963."

9. **டாக்டர் கே. ஆர். ஹனுமந்தன்.**

பொருள் : தமிழ் நாட்டில் தீண்டாமை.

"Untouchability in Tamil Nadu."

(சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''டாக்டர்'' பட்டத்திற்கான ஆராய்ச்சிக் கட்டுரை)

10. **திரு. டி. பழனி, எம். ஏ.,**

சமூக இயல் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்.

பொருள் : மிண்டோ—மார்லி சீர் திருத்தங்களுக்குப் பிறகு தமிழ் நாட்டில் சமூக, அரசியல் கருத்துக் களின் வளர்ச்சி.

"Socio-Political Ideas in Tamil Nadu Since Minto-Morley Reforms."

(சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு டாக்டர் பட்டத்திற்கான 1977ல் அனுப்பப்பட்ட ஆராய்ச்சிக் கட் டுரை)

11. **டாக்டர் சி. ஏ. பெருமாள்**

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரசி யல் துறைத் தலைவர்—பேராசிரியர்

பொருள் : தமிழ்நாட்டில் பிராமண ரல்லாதார் இயக்கம்'' பல்கலைக் கழக மானியக்குழு விரிவாக்க உரைகள்—1976ல் கர்நாடகப் பல்கலைக் கழகம் வெளியிட்டது.

"The Non-Brahmin Movement in Tamil Nadu"—UGC Extension Lectures, Published by the Karnataka University—1976.

12. **திரு. வி. சேஷாசலம், எம்.ஏ.,**

துணைப் பேராசிரியர், (தத்துவ இயல்) பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பொருள் :

"Logical Analysis of the Social and Atheistic Principles of Thanthai Periyar."

*(1975ல் பிப்ரவரியில் டாக்டர் பட்டத் திற்குப் பதிவு செய்யப்பட்டது).*

13. **டாக்டர் கே. நம்பி ஆரூரன்**

பொருள் : தமிழ் மறுமலர்ச்சியும் — திராவிடத் தேசியமும்—*1905-1944*

"Tamil Renaissance and Dravidian Nationalism with Special Reference to the work of Maraimalai Adigal." 1905—1944.

School of Oriental and African Studies, University of London, for Doctorate.

## தந்தை பெரியார் மற்றும் சுயமரியாதை இயக்கம் பற்றி ஆராய்ச்சி செய்துகொண்டிருப்போர் விவரம்:

1. **விமலா ஆர். சேத்தி, எம்.ஏ.,**

ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், புது டெல்லி.

"Caste Associations"

2. **திரு. ஆர். கே. சுவாமிநாதன்,**

"Centre for Social Research (Dravida Khazhagam among Peasantry), 1944—1949.

3. **திரு. பி. எஸ். சுந்திரபாபு, எம். ஏ.,**

வரலாற்றுத் துறை,
சென்னைக் கிறித்துவக் கல்லூரி,
தாம்பரம்.

பொருள் : சுயமரியாதை இயக்கத்துக்கு இருந்த சமூக எதிர்ப்புகளும், தமிழ கத்தில் அதன் விளைவுகளும்.

"Social Protest and its impact in Tamil Nadu with Special Reference to Self-Respect Movement—1925-49."

4. **திரு. வி. ஆர். கிருஷ்ணசாமி, எம். ஏ.,**

கர்நாடகப் பல்கலைக் கழகம்.

"Socio Economic Justice—Since 1967—An Analysis.

# சுவையான நிகழ்ச்சிகள்

முத்தமிழ்க் காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

**1931**-ல் நானும் பெரியாரும் பல ஊர்களுக்குச் சென்று ஈரோடு சந்திப்பு நிலையத்திற்கு வந்தோம். நான் திருச்சி வண்டி ஏறியதும், வழியனுப்பிய அவரைப் பார்த்து ''நீங்கள் சுகமாக வீட்டுக்குப் போகிறீர்கள், நான் வீடு போய்ச் சேர இன்னும் பல மணி நேரமாகும்'' என்று கவலையோடு சொன்னேன். பெரியார் அதற்கு, ''ஐந்து நாட்களாக ஒரு கவலையும் இல்லாது உங்களோடு சுற்றுப் பயணம் செய்தேன். இப்போது வீடு போய்ச் சேருவதுதான் எனக்குக் கவலை'' என்றார். ''ஏன் அப்படி?'' என்றேன். ''வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் செலவுக்குப் பணம் கேட்பார்கள். குடியரசுப் பத்திரிகை ஆபீஸில் பேப்பர்காரன் பணத்திற்குக் காத்திருப்பான். கம்பாஸிடர்களும், வேலையாட்களும் பணம் பணம் என்று என்னை அரிப்பார்கள். என்ன செய்வது?'' என்று கவலையோடு சொல்லிச் சென்றார்.

எனக்கு அப்போது வீடு போய்ச் சேருவது மகிழ்ச்சியாகவும், வெளியில் அலைவது துன்பமாகவும் இருந்தது. ஆனால் பெரியாருக்கு வெளி அலைச்சல் இன்பமாகவும் வீடு போய்ச் சேருவது துன்பமாகவும் இருந்தது எனக்கு வியப்பைத் தந்தது.



## பொது ஜனம் :


1935ல் பெரியாரின் இல்லத்தில் மாடியில் கூட்டத்தில் வசூலித்த காசுகளை நான் எண்ணிக் கொண்டிருக்க, பெரியார் ஏதோ எழுதிக் கொண்டு வேலையுடன் இருந்தார். திடீரென்று ஒருவர் ஓடிவந்து திரு சி. ஆர். உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று பெரியாரிடம் சொன்னார். உடனே பெரியார் தன் மேல் சால்வையை எடுத்து, இடுப்பில் கட்டிக் கொண்டு, ஓடிப் போய் அவரை வரவேற்று மாடிக்கும் அழைத்து வந்து உட்காரச் செய்து, ''ஏது இவ்வளவு தூரம், வீடு தேடி வந்தீர்கள்?'' என்று கேட்க, திரு சி. ஆர். அவர்கள் அருகில் இருந்த என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். குறிப்புணர்ந்த பெரியார், ''இவர் நம்மவர்தான். சொல்லக் கூடியதைக் கூசாமல் சொல்லுங்கள்'' என்றார். அதற்கு சி.ஆர். ''ஒன்றுமில்லை, ஒரு ஆலோசனை கேட்டுப் போகலாம் என்று வந்தேன்'' என்றார். பெரியார் உடனே, ''என்ன? கேலி பண்ணுகிறீர்களா? ஆலோசனையா ? அதுவும் தாங்களா? என்னிடமா! இது நன்றாய் இல்லையே!'' என்று (அடுக்கடுக்காக) மெதுவாகச் சொன்னார். திரு சி. ஆர். பதில் அளிக்கையில் ''இல்லை நாயக்கரே, பலநாள் யோசனை செய்தேன். சிக்கலாக இருந்தது. கடைசியாக உங்களை ஆலோசனை கேட்கலாம்'' என்ற முடிவுக்கு வந்தேன் என்று, பிரச்சினையை முன் வைத்தார்.

அந்தச் செய்தி அருகில் இருந்த எனக்கும் கூடச் சிக்கலாகவே தோன்றியது. ஆனால் சி. ஆரின் பிரச்னைக்கு அவர் சொல்லி முடிக்கு முன் பெரியாரும் ''நீங்கள் இப்படிச் செய்யலாமே! இது உங்களுக்குத் தெரியாததா?'' என்று எளிதான யோசனையையும் சொன்னார். அதற்கு சி.ஆர். 'நானும் அப்படிச் செய்யலாமென்றுதான் எண்ணினேன். ஆனால் பொது ஜனங்கள் நம்மைப் பற்றித் தப்பாக நினைப்பார்களே என்று அச்சப்பட்டேன்' என்றார். அதற்குப் பெரியார் சிரித்துக் கொண்டே, ''மற்றவர்கள் ''பொது ஜனங்கள்'' என்று சொன்னால் அர்த்தம் இருக்கிறது. தாங்களும் நானும் ''பொது ஜனங்கள்'' என்று சொல்லலாமா?'' என்று திருப்பிக் கேட்டார். உடனே சி. ஆரும் ''அப்ப சரி'' என்று கூறி எழுந்து போய் விட்டார்.

''நாம் தான் பொது ஜனங்களையே உண்டு பண்ணுகிறவர்கள்'' என்ற இப்புதிய கருத்து எனக்கு அன்றுதான் விளங்கியது.

## துணிவு :


1932-ல் பெரியாருடன் திருநெல்வேலி மாவட்டத்தில் சில பொதுக்கூட்டங்களில் பேசிவிட்டு மதுரை மாவட்டத்திலுள்ள பட்டிவீரன்பட்டி டபிள்யூ. பி. சௌந்திர பாண்டியன் அவர்களின் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தோம். வழி நெடுகிலும் பெரியாருக்கு வயிற்று வலி. திரு டபிள்யூ. பி. எஸ். வீட்டுக்குள் நுழைந்ததும் எங்கள் இருவருக்கும் விருந்து. வலி மிகுதியால் வழியில் டாக்டரிடம் காண்பித்தபோது, மருந்து கொடுத்த டாக்டரோ அசைவ உணவை ஒரு வாரம் சாப்பிடக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தார். திரு டபிள்யூ.பி.எஸ். வீட்டிலோ எனக்கு வழக்கம் போல சைவ உணவும் பெரியாருக்கு அசைவ உணவும் காத்திருந்தது. வாளை மீன் பொரியலையும் வறுத்த கறி





லையும் சுவைத்துச் சுவைத்து உண்ட பெரியாரை நானும் தடுக்கவில்லை. விருந்து முடிந்து டபிள்யூ.பி.எஸ். காரிலேயே ரயில் நிலையம் வந்தோம். வண்டி ஏறிய பின்னர் வலியும் வந்து விட்டது. திண்டுக்கல் முதல் மணப்பாறை நெருங்கும் வரையில் அவர் பட்டபாடு சொல்ல முடியாத துன்பத்தை எனக்குத் தந்தது.

நான் பெரியாரைப் பார்த்து ''மணப்பாறைவரை பொறுத்துக் கொள்ளுங்கள். மீண்டும் டாக்டரிடம் காண்பிப்போம்'' என்றேன். அவர் என்னிடம் ''கொஞ்சம் பொறுங்கள்; சரியாகப் போய்விடும்'' என்று பதில் சொன்னார். எனக்கு வியப்பாக இருந்தது. வண்டி மணப்பாறை நெருங்க, நெருங்க வலி மிகுதியால் ''அப்பா! அம்மா'' என்று வாய் விட்டே அலறினார். மணப்பாறையும் வந்தது. வண்டி நின்றபின் ''இறங்குங்கள் சீக்கிரம், டாக்டரிடம் போவோம்'' என்று வலியுறுத்தினேன். அப்போதும் அவர் ''கொஞ்சம் சும்மா இருங்கள்; சரியாய்ப் போய்விடும்'' என்றார். வண்டியும் அதற்குள் புறப்பட்டு விட்டது. அவர் வலியைப் பொறுக்கும் வரை பொறுத்திருந்து முடியாமற் போகவே, வண்டி ஓடும்போது ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வாயில் விரலை விட்டு சாப்பிட்ட அனைத்தையும் வாந்தி எடுத்தார். பின்னர் வாயைக் கொப்பளித்து விட்டு என் அருகில் உட்கார்ந்து கொண்டே, ''இப்பொழுது எல்லாம் சரியாய்ப் போயிற்று'' என்றார். என் பயமும் ஒருவாறு தெளிந்தது. ''டாக்டர் சொல்லியும் கூட அசைவ உணவை ஏன் சாப்பிட்டீர்கள்'' என்று சிறிது கோபத்தோடு கேட்டேன். அதற்குப் பெரியார் ''வைத்தியர் அதை மட்டுமா சொன்னார்? புளியும், மிளகாயும் கூட சாப்பிட வேண்டாம் என்றார். இவைகளையெல்லாம் சாப்பிடாமல் நடைப்பிணமாக இருந்து எதற்காக உயிர் வாழ வேண்டும்? சாவு வருவதானால், அது எப்போதும் வரட்டும். அதற்காகப் பயந்து நாம் நம் தேவையைக் குறைத்துக் கொள்ளக் கூடாது'' என்று சொன்னார். இத்தகைய துணிவைப் பெரியாரிடமின்றி வேறு எவரிடமும் நாம் எதிர்பார்க்க முடியாது.



## முதல் சுயமரியாதைத் திருமணம் :


நாற்பத்தெட்டாண்டுகளுக்கு முன்பு இராமநாதபுரம் மாவட்டம் அருப்புக் கோட்டையைச் சேர்ந்த சுக்கில நத்தம் கிராமத்தில் துரைசாமி ரெட்டியார் மகனுக்கு சுயமரியாதைத் திருமணம் செய்து வைக்க பெரியாரும், நானும், அப்போதைய விடுதலை ஆசிரியர் ஜெ.எஸ். கண்ணப்பரும், காரைக்குடி முருகப்பாவும், சிதம்பரம் என். தண்டபாணிப் பிள்ளையும் ஆக ஐந்து பேர் சென்றிருந்தோம். மண மேடையில் மணமகன் வந்து உட்கார்ந்ததும், மாப்பிள்ளையின் இருபுறமும் இரண்டு பெண்களை அலங்காரத்துடன் அழைத்து வந்து உட்காரச் செய்தார்கள். ரெட்டியாரும் எங்களிடத்தில் வந்து திருமணத்தை நடத்தி வையுங்கள் என்றார். நான்பெரியாரைப் பார்த்து. ''இது என்ன ஒரு மாப்பிள்ளைக்கு இரண்டு பெண்கள்?'' என்று கேட்டேன். பெரியாரும் ரெட்டியாரைப் பார்த்து ஏன் இப்படி? என்று கேட்டார். அதற்கு ரெட்டியார், ''ஒன்று மாமன் மகள். . ஒன்று அத்தை பெண் ; இரண்டிலும் ஒன்றை விட்டு ஒன்றைச் செய்தால் குடும்பத்தில் குழப்பம் வரும். . .அதனால் இப்படிச் செய்கிறேன்' என்றார். பெரியார் இதைக் கேட்டதும், எங்களிடம், ''எப்படியோ போகட்டும்! ஐயர் இல்லாமல் கல்யாணம் செய்ய ரெட்டியார் சம்மதித்தாரே! அது போதும். 'அதுவே பாதி சுயமரியாதை'' என்று சொல்லி, திருமணத்தை நடத்தி வைத்தார். நாங்களும் வாழ்த்தி வந்தோம். இதுதான் நாங்கள் நடத்திவைத்த முதல் சுயமரியாதைத் திருமணம்!

## ஆழமான உள்ளம் :

ஒரு தடவை நாங்கள் எல்லோரும் ஒரு மாநாட்டுக்குப் போக, பெரியாரின் இல்லத்தில் கூடினோம். அப்போது பெரியார் தாடி வைத்திருப்பது பற்றிய சர்ச்சை கிளம்பியது. ''பெரியார் புதியதாக தாடி வைத்திருப்பது ஏன்?'' என்று ஒருவர் கேட்க, மாயவரம் நடராஜன், ''தாடி வைத்திருப்பது முகத்துக்கு அழகு தருகிறது அதனால்தான் நான் தாடி வைத்திருக்கிறேன்'' என்று பெரியார் தன்னிடம் சொன்னதாகச் சொன்னார். உடனே எஸ். வி. லிங்கம் ''இல்லை ...இல்லை! ரஷ்யா சென்று வந்ததும், ரஷ்ய அறிஞர்கள் அனைவரும் தாடி வைத்திருப்பதைப் பார்த்துத் தானும் அவ்வாறு தாடி வைத்துள்ளதாக'' பெரியார் தன்னிடம் சொன்னதாகச் சொன்னார். உடனே மூவலூர் ராமாமிர்தம் அம்மாள் சொன்னார்கள் : ''இல்லவேயில்லை, நாள்தோறும் நாலணா சவரக் கூலி எனக்கு மிச்சமாகிறது அதனால் தாடி வளர்கிறேன்'' என்று என்னிடம் சொன்னார். இதைக் கேட்ட பட்டுக்கோட்டை அழகிரிசாமி, ''அதெல்லாம்

ஒன்றுமில்லை! பெரியாரிடம் நான் இதுபற்றிக் கேட்டு விட்டேன் கொஞ்ச நேரம் என்ருலும் இன்னெருவரிடம் போய் தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்து இருப்பது மானக் கேடாக இருக்கிறது என்பதால் தான் தாடி வளர்க்க ஆரம்பித்தேன்'' என்று என்னிடம் சொன்னுரென்ருர். அருகில் இருந்த பூவாளூர் பொன்னம்பலனுர் ''அப்படியா சேதி! நான் அவரிடம் ஏன் தாடி வளர்க்கிறீர்கள் என்று கேட்டதற்கு, மேடையில் ஏறிப் பலரைத் தாக்கித் திட்டிப் பேசினுல், ''போனுல் போகிருன் கிழவன்! எதையாவது சொல்லிவிட்டுப் போகிருன்'' என்று விட்டுவிடுவார்கள் என்பதற்காகவே நான் தாடி வளர்க்கிறேன், என்றல்லவா சொன்னுர், என்ருர். எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த எனக்கும் எது உண்மை என்று அறிய ஆவல் ஏற்பட்டு விட்டது. ''எல்லோரும் படுங்கள். நாளை நான் எது உண்மை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்று சொல்லி, தூங்க வைத்தேன். மறுநாள் மாநாட்டுக்குப் போகும் வழியில் பெரியாரிடம் நான் சரியான காரணத்தைக் கேட்டேன். சிரித்தார்; ... பிறகு என்னிடம் ''நாள் தோறும் முகத்தைச் சவரம் செய்ய பத்து நிமிடங்கள் வீதம் மாதம் 300 நிமிடங்கள் வீணுகச் செலவாகின்றன. நேரத்தை நல்ல காரியங்களைச் செய்ய செலவிடலாமே என்று நினைத்து விட்டு விட்டேன். தாடி தானுகவே முளைத்து விட்டது. வேறென்றும் இல்லை'' என்று மீண்டும் சிரித்துக் கொண்டே கூறினுர். அதன் பின்னர் எல்லோரையும் கூட்டி நான் இதுதான் உண்மை என்று கூறினேன். என்னேடு இருந்த காருகுடி சின்னையாப் பிள்ளை ''இன்னும் யாராரிடத்தில் என்னென்ன சொல்லியிருக்கிருரோ? அவைகளையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் ஒரு முடிவுக்கு வர வேண்டும்'' என்று சொல்லிச் சிரிப்பு மூட்டினுர். உடனே மாயவரம் லிங்கம், 'சும்மா இருங்கள். . . இன்னும் எத்தனை பேரைக் கேட்டாலும் பெரியாரின் உள்ளத்தில் உள்ளதை எவராலும் அறியமுடியாது. அவரது உள்ளம், அவ்வளவு ஆழமானது'' என்று கூறினுர்.

ஆம்! அவரது உள்ளம் ஆழமானது மட்டுமல்ல. அரிய உள்ளமும் பெரிய உள்ளமும் ஆகும். இதிலிருந்து அவர் தன்னைப்பற்றியும் தன் செயலைப்பற்றியும் எவரிடமும் எதுவும் கூற விரும்பாத பெருமனம் படைத்தவர் என்று நமக்கு நன்கு தெரிகிறது.




**சா**தி முறைதான் நமது நாட்டிற்கு மிகக் கொடிய தீங்கினை இழைத்து வந்திருக்கிறது ; கோடானு கோடி மக்களைப் பிரித்து வைத்துச் சிறுமைப்படுத்தித் தாழ்த்தியது சாதி முறை தான். அந்தச் சாதிக் கொடுமையினை அறவே ஒழித்திட தீவிரமாகப் போரிட்டு வருபவர் பெரியார் இராமசாமி. மத மூட நம்பிக்கைகளையும், சமூகக் கேடுகளையும், கடந்த அரை நூற்ருண்டுக்கும் மேலாக எதிர்த்து வருபவர் பெரியார் ; அவர் பல களங்களில் வெற்றி கண்ட வெற்றி வீரராய்த் திகழுகிருர். அவர் ஓர் ரட்சகர்.

—திரு ஜகஜீவன் ராம்.

(மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர்)





# அண்ணா கண்ட பெரியார்

திடீரென்று ஒரு தினம் பம்பாயிலிருந்து எனக்கோர் தந்திவந்தது; ''உடனே கிளம்பி ஹரித்துவாரம் வந்து சேரவும்'' என்று. தந்தி தந்தவர் பெரியார்; அவர் ப்பம்பாய்ப் பகுதி சென்று அங்கிருந்து ஹரித்துவாரம் சென்று விட்டு வட நாட்டிலேயே வேறு பல ஊர்கள் போகத் திட்டமிட்டு இருந்தார் போல் இருக்கிறது; எனக்கென்ன தெரியும், யாருக்குத் தான், எப்போதுதான் அவர் போடும் திட்டம், அவராகச் சொல்லு முன் தெரிகிறது!

'ஹரித்துவாரம் வந்து சேர்'—எனக்கு இப்படி ஒரு தந்தி.

என் சுபாவம், உனக்குத் தெரியும், ஏன், ஏறக்குறைய கழகத் தோழர்கள் அனைவருக்கும் தெரிந்ததுதானே! பக்கத்திலே உள்ள ஆர்க்காடு போவதானாலும், நாலு நண்பர்கள் கூட வேண்டுமே எனக்கு, அப்படிப் பழகிப் போன என்னை, ஹரித்துவாரம் வரச் சொல்கிறார்; என்ன செய்வது? கிளம்பினேன்; தோழர் குருசாமி இரயிலடி வந்திருந்ததாக நினைவு.

பத்து நாட்கள் ஹரித்துவாரத்தில் இருந்தோம், ஒரு ஐயர் வீட்டில்.

அவர் காலஞ் சென்ற பேரறிஞர் எம். என். ராய் அவர்களின் இயக்கத்தவர். எனவே, எங்களை அன்புடன்தமது இல்லத்தில் வைத்து உபசரித்தார்.



**பேரறிஞர் அண்ணா எழுதிய 'தம்பிக்கு' எனும் நூலிலிருந்து...**

உங்களில் பலருக்குத் தெரிந்திராது தம்பி! பெரியார் அங்குதான், வால்மீகி இராமாயணம் பற்றிய குறிப்புரைகள் தயாரித்தார். அவர் சொல்லச் சொல்ல நான் எழுதின கவனம் இருக்கிறது.

அந்த ஹரித்துவாரம், ''சாதுக்களின் கோட்டை! எந்தத் தெருவுக்குச் சென்றாலும், சந்நியாசிகள்! எவ்வளவு ''கம்பீரமாக'' நடந்து செல்கிறார்கள் தெரியுமா! அவர்களும் சரி. கொழுத்துக் கிடக்கும் பெரிய பெரிய பசுக்களும் சரி. ஹரித்துவாரத்து வீதிகளிலே நடமாடும் உரிமை தமக்கே என்ற தீர்மானத்துடன் இருப்பது போலத்தான் தோன்றும்.

கங்கை — நடுப்பகல் இரண்டு மணிக்குக் கால் வைத்தாலும் ''ஐஸ்'' போல இருக்கிறது, கொட்டுகிறது.

ஹரித்துவாரத்தில், ஆற்றோரத்தில் அழகான சோலைகள்—பழ முதிர் சோலைகள்! சோலைகளை வேலிகளாகக் கொண்டே பெரிய மடங்கள் — ஒவ்வொரு மடத்திலும் நூற்றுக்கணக்கான சாமியார்கள்; உலக மாயையை மிக நன்றாக உணர்ந்து உலகோர்க்கு உபதேசம் செய்யும் ''புனிதத் தொண்டு'' புரியும் அவர்களுக்காக நாள்தோறும் மூட்டை மூட்டையாகக் கோதுமை மாவும், டின் டின்னாக மணம் கமழும் நெய்யும்! இந்த இடங்களில் ஒரு குறையும் இருத்தல் ஆகாது என்பதற்காக ஏராளமான ''சொத்து'' சாசனப்படுத்தப் பட்டிருக்கிறது.

மாலை வேளைகளிலே பெரியார் உலாவச் செல்வார். சாலையில் உடன் நான் செல்வேன். வெண்ணிற தாடி; பொன்னிற மேனி; ஆரஞ்சு நிறச் சால்வை. நான் கொட்டும் குளிருக்குப் பயந்து முரட்டுத் துணிச் சட்டை போட்டுக் கொண்டு அதற்குள் கரங்களை விட்டுக் கொண்டு கை கட்டிய வண்ணம் அவர் பின்னால், சாது சந்நியாசிகளைக்

காண்பதையே வேலையாகக் கொண்ட அந்த நாட்டு மக்கள், ஹரித்துவாரம் இதுவரை காணாத, மகிமை பொருந்திய குரு மகான், தன் பிரதம சீடனுடன் செல்கிறார் என்று எண்ணிக் கொண்டு, பக்தியுடன் கைகூப்பித் தொழுவர். இப்போதும் மனக் கண் முன்னால் அக்காட்சியைக் காண முடிகிறது.

—தம்பிக்கு—கடிதம், 12—8—1955.

**ஆறு பிஸ்கட்டுகள்!**

'ஆறு நூறு அபராதம்; கட்டத் தவறினால் நாலு மாத சிறைவாசம்'' என்று தீர்ப்பளிக்கப்பட்டது; அபராதம் செலுத்தவில்லை! சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன், திருச்சியில்; எனக்கு கிடைத்த வாய்ப்பு எப்படிப்பட்டது, தெரியுமா தம்பி? பெரியாரும் அதே நாளில் அதே விதமான தண்டனை பெற்று அதே சிறைக்கு வந்தார். இருவரையும் ஒரே போலீஸ் வேனில்தான் ஏற்றிச் சென்றார்கள்

''ஆரிய மாயை'' எனும் ஏடு தீட்டியதற்காக எனக்குச் சிறை!

''பொன்மொழிகள்'' தீட்டியதற்காகப் பெரியாருக்குச் சிறை.

திருச்சி கோர்ட்டாருக்கு இப்படி ஒரு காட்சியைக் காண வேண்டுமென்று ஆசை போலும், இரண்டும் தனித் தனி வழக்குகள்; தனித் தனியாகத்தான் விசாரணைகள்; எனினும் 'தீர்ப்பு' மட்டும் ஒரே நாளில், ஒரே நேரத்தில் அளிக்கப்பட்டது.

பிரிந்து நெடுந்தூரம் வந்து விட்ட என்னை, அன்று அந்தக் கோர்ட்டில் பெரியாருக்குப் பக்கத்திலே நிற்கச் செய்து, வேடிக்கை பார்த்தது வழக்கு மன்றம்! போலீஸ் அதிகாரிகள் அதைத் தொடர்ந்து, ஒரே வேனில் ஏற்றிச் சென்றனர்; அதைத் தொடர்ந்து திருச்சி மத்திய சிறையிலே இருந்த அதிகாரி, பெரியார் கொண்டு வந்திருந்த சாமான்களைக் கணக்குப் பார்த்துச் சரியாக இருக்கிறதா என்று கூறும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். என் வாழ்க்கையில் நான் மறக்க முடியாத சம்பவம்; எனக்கு உள்ளூரப் பயந்தான்!

பக்கத்துப் பக்கத்து அறை; பகலெல்லாம் திறந்துதான் இருக்கும்; பலர் வருவார்கள்; இங்கு சிறிது நேரம், அங்கு சிறிது நேரம், இன்னும் சிலர் கூர்ந்து கவனித்தபடி இருப்பார்கள், நாங்கள் இருவரும் பேசிக் கொள்கிறோமா என்று.' அவர் அறைக்குள் உள்ளே இருக்கும்போது நான் வெளியே மரத்தடியில்! அவர் வெளியே வர முயற்சிக்கிறார் என்று தெரிந்ததும், நான் அறைக்கு உள்ளேசென்று விடுவேன்!

இப்படிப் பத்து நாட்கள்!

நாயக்கர் நல்ல வேலைகளைச் செய்துள்ளார். தீண்டாமையைத் தொலைக்க, வைக்கத்தில் சத்தியாக்கிரகம் செய்து சிறைப்பட்ட பாக்கியம் பெற்ற தமிழ்த் தலைவர், நாயக்கர் ஒருவரே யாவர்.

—டாக்டர் பி. வரதராஜுலு

நாளைய தினம் எங்களை விடுவிக்கிறார்கள் — முன் தினம் நடுப்பகலுக்கு மேல், ஒரு ருசிகரமான சம்பவம் நடைபெற்றது.

பெரியாருக்கு வேலைகள் செய்து வந்த 'கைதி' என் அறைக்குள் நுழைந்து, ''ஐயா! தரச் சொன்னார்'' என்று சொல்லி, என்னிடம் ஆறு பிஸ்கட்டுக்கள் கொடுத்தான். கையில் வாங்கியதும், என் நினைவு பல ஆண்டுகள் அவருடன் இருந்தபோது, கண்ட காட்சிகளின்மீது சென்றது.

மறுநாளே திடீரென்று 'விடுதலை' கிடைத்தது.

அந்த வேடிக்கையையும் கேள் தம்பி!


எங்களை விடுதலை செய்யப் போகிறார்கள் என்ற செய்தி, உள்ளே எங்களுக்குத் தெரிவதற்கு முன்பே, வெளியே தெரிந்து விட்டிருக்கிறது. எனவே, எங்களை அழைத்துச் செல்ல நண்பர்கள் வெளியே 'முஸ்தீபு' செய்யத் தொடங்கியிருந்தனர். நமது கழகத்தார் முஸ்தீபுகளிலே மும்முரமாக ஈடுபட்டு நேரத்தை மறந்துவிட்டனர்; எனவே, சிறைக்கதவு திறக்கப்பட்டு எங்களை வெளியே அனுப்பியதும், வாசற்படி அருகே, பெரியாரை அழைக்க வந்தவர்கள் கொண்டுவந்த, 'மோட்டார்' தான் இருந்தது. அதற்கு என்னையும் அழைத்துச் சென்றனர்; இது போதாதென்று, 'போட்டோ' எடுப்பவர் ஒருவர் ஓடிவந்தார்; இருவரும் அப்படியே, நெருக்கமாக, நில்லுங்கள் என்று போட்டோ எடுப்பவர்களுக்கே உரித்தான சாமர்த்தியத்துடன் கூறி, போட்டோவும் எடுத்துவிட்டார்; அது வெளியிடப்படவில்லை; வெளியிடாதிருந்தது நல்லதுதான் என்றே சொல்லுவேன்; அவ்வளவு திகைப்பு என் முகத்தில் இருந்தது, அவர் எப்படி இருந்தாரோ, எனக்குத் தெரியாது. வேதாசலம் அவர்கள் வீடு வரையில் சென்று அவர் இறங்கிக் கொண்டார். நான் அதே மோட்டார் வண்டியில் சாம்பு இல்லம் சென்றேன்.

—தம்பிக்கு—கடிதம், 31—7—1955.

பெரியாருக்கு இன்று உள்ள பெரும் செல்வாக்கு சாமான்யமானதல்ல. அவருக்கு இன்றுள்ள செல்வாக்கும் இதனை ஈட்டிட அவராற்றியுள்ள அரும் பெரும் பணியும் அபாரம். எதற்கும் அஞ்சுபவரல்ல! எதிர் நீச்சலில் பழகியவர்! அவருடைய சுபாவமே அத்தகையது. அந்தக் குறுகுறுப்பான கண்களிலே நான் பல சமயங்களில் கோபம் கொந்தளிக்கக் கண்டிருக்கிறேன். அடிக்கடி அலட்சியத்தை கொட்டக் கண்டிருக்கிறேன், சில வேளைகளில் பரிவு, பச்சாதாபம் தோன்றிடக் கண்டிருக்கிறேன். ஒரு போதும் அந்தக் கண்களிலிருந்து பயம் கிளம்பக் கண்டதில்லை. நானென்றும், தம்பி, பத்து கெஜத் தொலைவிலே இருந்து அவரைப் பார்த்துப் பூரித்திடும் இரசிகனல்ல; பக்கத்திலேயே பத்தாண்டுகளுக்கு மேலாக இருந்தவன், அவரைப் பல கோணங்களிலே பார்த்தவன்—பல பிரச்சினைகள் குறித்த அவருடைய பிரத்தியேகக் கருத்துக்களை அறிந்தவன்—'மேஸ்திரி' வேலையல்லவா பார்த்திருக்கிறேன்!

தம்பிக்கு—கடிதம்,

7—8—1955.





# முதல் சந்திப்பு



"தொளாயிரத்துப் பத்தொன்பதுன்னு ஞாபகம்..."

## தந்தை பெரியார்—மூதறிஞர் ராஜாஜி

"**ரா**ஜாஜியோடு தங்களுக்குப் பழக்கம் ஏற்பட்டது எப்போது?"

"அதுவா? அந்தக் காலத்துலே ஈரோட்லே ரொம்ப பி. சி. நரசிம்மய்யர்னு எனக்கு வேண்டிய வக்கீல் ஒருத்தர் இருந்தாரு. ஈரோட்லே நான் சேர்மனா இருந்தப்போ குடியானவங்க வழக்கெல்லாம் என்கிட்டே நிறைய வரும். அந்தக் கேசெல்லாம் அவருக்கு அனுப்புவேன்; யாருக்கு — நரசிம்மய்யருக்கு! நான் சேர்மனா வர்ரது சில பேருக்குப் பிடிக்கலே. பொருமையினாலே எம் பேரிலே கலெக்டருக்குப் 'பெட்டிஷன்' எழுதிப் போட்டாங்க. சேர்மன் பதவின்னா இப்ப மாதிரி எலெக்ஷன்லே ஜெயிச்சதும் நேராப் போயி சேர்லே உட்கார்ந்துட முடியாது. கலெக்டர் சிபாரிசு செய்யணும்னு வச்சிருந்தாங்க. அந்தச் சமயத்துலே ஸர் பி. ராஜகோபாலச்சாரிங்கறவர் சப் கலெக்டரா இருந்தாரு. அவருக்கு என்னைப் பத்தி நல்லாத் தெரியுமானதாலே, பெட்டிஷனைப் பொய்யென்று தள்ளிட்டு என்னைச் சேர்மனாக்கிட்டாரு."

"ஆமாம். அந்த மாதிரி 'பெட்டிஷன்' எழுதிப் போட்ட ஆசாமி யாரு?"


"சீனிவாச முதலியாருன்னு ஒரு வக்கீல். 'நான்பிராமின்' வக்கீலாயிருக்காரே முன்னுக்குக் கொண்டாருவோம்னு நான்தான் அவரை முன்னுக்குக் கொண்டுவந்தேன். ஆனால், அவரே என் பேரில் பெட்டிஷன் கொண்டு வந்தாரு. அப்ப ராஜகோபாலாச்சாரி சேலத்துலே வக்கீல். கெட்டிக்கார வக்கீல்னு சொல்லுவாங்க. அதனால் என் கிட்டே வர கேசெல்லாம் அவருக்கு அனுப்பி வைப்பேன். அந்தப் பழக்கத்துலே அவர் வர, போக இருந்தாரு. எங்க வூட்டுக்கு அடிக்கடி வருவாரு. அவரும் அப்ப சேலத்துலே சேர்மன்."

"எந்த வருஷம் அது?"

"தொளாயிரத்துப் பத்தொன்பதுன்னு ஞாபகம் ..".

[பெரியாரோடு பேட்டி]

நன்றி: 'ஆனந்த விகடன்'



# பெரியார் பெருமை




எனக்கும் நாயக்கருக்கும் நெருங்கிய பழக்கம் 1923-ஆம் ஆண்டின் துவக்கத்தில் ஏற்பட்டது. இரங்கோனில் ஓராண்டிருந்துவிட்டு நான் அப்போதுதான் கோவைக்குத் திரும்பியிருந்தேன். கோவையில் நானும், எனது நண்பர் சுப்ரி அவர்களும், செட்டிப்பாளையம் அய்யாசாமிக் கவுண்டரும் தீவிரமான காங்கிரஸ் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தோம். அடிக்கடி நாய்க்கரோடும் சேர்ந்து பல ஊர்களுக்குச் செல்வோம். அவ்வாறு செல்லும்படியான இடங்களுக்குக் கதரும் கொண்டு போய் விற்போம். நாயக்கர் அப்போது தமிழ்நாடு கதர் போர்டின் தலைவராக இருந்தார். கதர் விற்பனை செய்வதற்காக அவரிடம் ஒரு நாள் ஐநூறு ரூபாய்க்குக் கதர் கடனாகத் தரும்படி நானும் அய்யாசாமிக் கவுண்டரும் கேட்டோம். ரொக்கம் செலுத்தினாலன்றிக் கொடுக்க முடியாதெனச் சொல்லி விட்டார். புரோநோட்டு எழுதித் தருவதாகவும் சொன்னோம். அதற்கும் அவர் இசையாத கொடாக்கண்டராக விளங்கினார். முடிவில் ரொக்கம் செலுத்திக் கதர் எடுத்து வந்தோம்.

வைக்கத்துப் போர்க்காலத்தில் நாயக்கரும் நானும் மோட்டாரிலும், படகுகளிலும் திருவாங்கூர் முழுவதும் பிரயாணம் செய்தோம். கோட்டாறு டாக்டர் எம்பெருமாள் நாயுடு தமது காரிலேயே எங்களுடன் பிரயாணம் செய்தார். சிட்டேடத்தில் சங்குபிள்ளை என்பவரும் எங்களுடன் வந்திருந்தார். நாயக்கர் கையில் எப்போதும் பாரதியாரின் பாட்டுப் புஸ்தகம் இருக்கும். மோட்டாரில் போய்க்கொண்டே, வந்தே மாதரம், வாழ்க செந்தமிழ், மறவன் பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவைகளை உரக்கப் பாடுவார். படகுகளில் போகையில் கரையோரத்தில் விற்கும் முந்திரிக் கொட்டை, காரவடை, அவித்த முட்டை, இளநீர் ஆகியவைகளை நான் வாங்க வாங்க அவர் வயிற்றை நிரப்பிக் கொண்டே வருவார். நாங்கள் கன்னியாகுமரி வரை சென்று திரும்புகையில் திருவனந்தபுரத்தில் எங்கள் நால்வருக்கும் தடையுத்தரவு வழங்கப்பட்டது. அதை யார் மீறுவது என்று சீட்டுப் போட்டுக் குலுக்கி எடுக்க என் பெயர் வரவே, சிரயங்கீழ் என்ற ஊரில் நான் கைதாகிச் சிறை சென்றேன்.

1924-ல் பெல்காமில் மகாத்மா காந்தியின்கீழ் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டு முகாமில் ஒரு வீட்டில் தங்கியிருந்தோம். டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அந்த ஜாகையை நூறு ரூபாய் வாடகைக்குப் பேசி அமர்த்தியிருந்தார். தருமபுரி ஜமீன்தார் நடேசன் செட்டியார் புதுப்பாளையம் மிட்டாதாரர் ரத்தினசபாபதி கவுண்டர், வரதராஜுலு நாயுடு, நாய்க்கர், சுரேந்திரநாத் ஆரியா, சர்க்கரைச் செட்டியார், பவானிசிங், டாக்டர் தர்மலிங்கம் இன்னும் பல பேர்கள் அங்கே தங்கியிருந்தோம். ஒரு நாள் இரவு நாங்கள் எல்லோரும் சாப்பிடுவதற்குப் புறபட்டோம். "எனக்குப் பசியில்லை; நீங்கள் போய்வாருங்கள்'' என்று சொல்லி நாயக்கர் தங்கிவிட்டார். நாங்கள் திரும்பி வருகையில் கிலாபத் மகாநாட்டு ஓட்டலிலிருந்து நான் ஒன்றரை ரூபாய்க்குப் பிரியாணி வாங்கிக் கட்டிக் கொணர்ந்து, படுத்து உறங்கிக் கொண்டிருந்த நாயக்கரின் தலைக்குப் பக்கத்தில் வைத்து விட்டேன். பிரியாணியிலிருந்து அடித்த மணம் நாயக்கரின் தூக்கத்தைக் கலைத்தது மல்லாமல் அவர் பசியையும் கிளறிவிட்டது. எழுந்து, உட்கார்ந்து, கட்டை அவிழ்த்து, "உம், நான் பசியில்லை என்று எவ்வளவு சொல்லியும் கேட்டார்களா? இனி நான் இதைத் தின்றுதான் தொலைக்க வேண்டும்'' என்று

கோவை
அ. அய்யாமுத்து



சொல்லிக்கொண்டே எல்லாவற்றையும் காலி செய்துவிட்டார். காசு கொடுத்து வாங்கியதை வீணாக்க நாயக்கரால் என்றும் முடியாது.

குற்றாலத்தில் நீர்வீழ்ச்சிக்கெதிரே ஒரு லாந்தர் கம்பம் இருக்கிறது. அக் கம்பத்துக்கு ஆதரவாக ஒரு சிறிய மேடை. அம் மேடைமீது நாயக்கர் உட்கார்ந்து கொண்டு நீர்வீழ்ச்சியையும், அவ்வீழ்ச்சியின் அடியே நின்று, குளிப்போர் காட்சியையும் கவனித்துக் கொண்டிருக்கிறார். இது 1941-ஆம் ஆண்டில் என்ற ஞாபகம். நான் அவரையே சற்று நேரம் கவனமாகப் பார்த்திருந்துவிட்டு, அவருடன் பேசினேன். இருவரும் அருவியில் குளித்தபின்னர், அவர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்றேன். ஐந்தருவி ரோட்டில் திருநெல்வேலிப் பிரமுகர் ஒருவர் தமது பங்களாவை நாயக்கருக்குக் கொடுத்திருந்தார். சமையலுக்கு வேண்டிய அரிசி, பருப்பு, விறகு முதலான பண்டங்களும், பாத்திரங்களும் கொடுத்திருந்தார் என்று எண்ணுகிறேன். நாயக்கரா சமைத்துச் சாப்பிடுகிறவர்? சமையல் செய்தால் அவருடைய ஜாகை சத்திரமாகிவிடுமல்லவா? அவ்வளவு இலேசாக நாயக்கர் ஏமாந்தால் உலகம் என்னாவது?

குற்றால நாதரின் கோவிலுக்கெதிரே ஒரு சைவ சாப்பாட்டுக் கடை, ஒரு "தனித்" தமிழனால் நடத்தப்படுவது. ஆள் ஒன்றுக்கு வேளை ஒன்றுக்கு நான்கணா. எடுப்புச் சாப்பாடாக இருந்தால் ஐந்தணா. இந்தக் கடையிலிருந்து நாயக்கருடன் இருந்த சமையற்காரன் அன்றாடம் பகல் பன்னிரெண்டு மணிக்கு ஒரு எடுப்புச் சாப்பாடு எடுத்துப் போவான். அதில் பாதியை நாயக்கரும் அவனுமாகச் சாப்பிடுவார்கள். மீதியைப் பத்திரமாக மூடி வைத்திருந்து இரவில் உண்பார்கள். காலையில் இரண்டணாவுக்கு எட்டு இட்டிலிகள் வாங்கிவந்து இருவரும் சாப்பிட்டுவிடுவார்கள். இவ்வாறாக நாளொன்றுக்கு ஏழு அணாக்களில் ஒரு செல்வந்தரும் வேலைக்காரனுமாகத் திருக்குற்றாலத்தின் சீசனை அனுபவித்து வந்தார்கள். இத்தகைய சிக்கனத் துறையில் எங்கள் நாயக்கரை அணுக இவ்வுலகில் எவராலும் முடியாது. மகாத்மா காந்தியாலும் முடியாது. அவரைப் படைத்ததாகச் சொல்லப்படும் ஆண்டவனாலும் முடியாது.

('நான் கண்ட பெரியார்' என்ற நூலிலிருந்து)



## பெரியாரின் நகைச்சுவை

பெரியார் ஈ. வெ. ராவின் பிறந்தநாளையொட்டி அவரைச் சந்திக்க வந்த நண்பர் ஒருவர் பெரிய 'கேக்' ஒன்றைக் கொண்டு வந்தார்.

"ஐயா, எல்லோரும் பிறந்த நாளில் கேக் வெட்டுகிறார்கள். நீங்கள் இதுவரை அப்படிச் செய்ததாக நினைவில்லை. அதற்காகத்தான், கேக் கொண்டு வந்தேன்" என்று தெரிவித்த அந்த நண்பர், "பிறந்த நாளில் கேக் வெட்டுவது சடங்கா? சம்பிரதாயமா?" என்று பெரியாரைக் கேட்டார்.




அதற்குப் பெரியார் சிரித்துக் கொண்டே "அது எதுவும் தெரியாதுங்க, கேக்கை தின்னத்தான் தெரியும்" என்று கூறிவிட்டு, தன் எதிரே வைக்கப்பட்டிருந்த கேக்கை வெட்டாமல் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார். பின் திடீரென்று "ஏன்யா கேக்கை வெட்டணும்? யாராவது வாங்கிக்கிட்டா விற்று விடலாமே" என்றார்.

மற்றவர்கள் வற்புறுத்தவே பெரியார் அரை மனத்துடன் கேக்கை வெட்டி ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். பெரியதாக இருந்த கேக் சிறியதாகி விட்டது! சுற்றியிருந்தவர்களை ஒரு மாதிரியாகப் பார்த்தார்.

'கேக்' கொண்டு வந்தவரின் நண்பர்களும் மகனும், மானேஜரும் பெரியாரிடம் வாங்கிய 'கேக்' துண்டைக்கையில் வைத்துக் கொண்டு நின்றனர். அவர்கள் எல்லாரையும் ஒரு பார்வை பார்த்து முடித்துவிட்டு கேக் கொண்டு வந்த நண்பரிடம் இப்படிக் கேட்டார் பெரியார்: "ஏன்ய்யா கேக் வாங்கிக்கிட்டு வரும்போதே தின்பதற்கும் கூடவே ஆள் கூட்டி வந்து விட்டீர்களா?"

-ஆதாரம்: ஆனந்த விகடன்.



# இவர்தான் பெரியார்

—திரு க. ராஜாராம்
தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி

பெரியாரின் பெருந் தொண்டினை எல்லோரும் எண்ணிப் பார்க்கும் வகையிலும், இளைய தலைமுறை பெரியாரைப் பற்றி உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் அவரது நூற்றாண்டு விழாவினைத் தமிழக அரசு கொண்டாடுகிறது.

தந்தை பெரியாரை நான் எனது இளமைப் பருவம் முதல் நன்கறிவேன். மறைந்த எனது தந்தையார் திரு கஸ்தூரி அவர்களும், பெரியாரும் 1914ஆம் ஆண்டு முதல் நல்ல நண்பர்களாக இருந்தவர்கள். எனவே, பெரியார் அவர்கள் எங்களது குடும்ப நண்பராகவே இருந்ததனால், எங்கள் வீட்டிலேயே தங்குவார்.

**கலைக்களஞ்சியம் :**

எனது இளமைப் பருவத்தை நான் தருமபுரியில் கழித்தேன். எங்கள் வீட்டிற்குப் பெரியார் வந்து தங்கி விட்டால், பலதரப்பட்ட கருத்துக்களைக் கொண்ட நண்பர்கள் அவரோடு உரையாட வந்துசேர்ந்து விடுவார்கள். கடவுள், மதம், புராணம், கல்வி, நரகம், மோட்சம், அன்றைய அரசியல் எல்லாம் வந்து உரையாடலில் அலைமோதும். எல்லாவற்றிற்கும், அய்யாவுடன் உரையாடல் பேசத் தொடங்கிவிட்டால், நகைச்சுவைக்குப் பஞ்சமே இருக்காது. அதிலும் புராணக் கருத்துக்களைப் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டால் கேட்கவே வேண்டியதில்லை.

ஒரு கலைக் களஞ்சியத்திலிருந்து எப்படிப் பல பொருள்களுக்கு, வினக்களுக்கு விடை காண முடியுமோ அது போல் அய்யா அவர்களிடம் பல்வேறு பட்ட பிரச்சினைகளுக்கு உடனடியாக விடை காண முடியும். வந்தவர்கள் வியந்த வண்ணம் திரும்பிச் செல்வதை நான் பல முறை கண்டிருக்கிறேன்.

**'சித்திரபுத்திரன்' யார்?**

பெரியார் அவர்கள் மிகச் சிறந்த சிந்தனையாளர். தனது கருத்துக்களை மிகவும் கடினமாகவும் உறுதியாகவும் பொதுக்கூட்ட மேடைகளில் பேசுவார். அதுவும் கேள்விகள், கேட்கத் தொடங்கியவுடன் அனல் கக்கப் பேசுவார். தனது எண்ணங்களைத் தாங்கி நடைபோடும் ஏடாக, ''குடி அரசு'' வார இதழையும், "விடுதலை'' நாளிதழையும், பல்வாண்டுக் காலம் நடத்திவந்தார்.


'குடிஅரசு' அந்தக் காலத்தில் பச்சை அட்டையுடன் ஈரோட்டிலிருந்து வெளிவரும். 'குடிஅரசு' இதழில் 'சித்திர புத்திரன்' என்றொரு எழுத்தாளர், வாரம் ஒரு கட்டுரை எழுதுவார். அக்கட்டுரைகள் முழுவதும் உரையாடலாகவே இருக்கும். கட்டுரை முழுவதும், கேலியும் கிண்டலும் நையாண்டியும் நிறைந்ததாக இருக்கும். அந்த எழுத்துக்கள், கொஞ்சம் ஜீரணிப்பதற்குக் கடினமாக இருக்கும். ரொம்பக் காலம், இந்த 'சித்திர புத்திரன்' என்ற எழுத்தாளர் யார் என்றே தமிழகத்திற்கே தெரியாது. பலர் அந்தக் கட்டுரை பற்றி மகிழ்ச்சியாக அய்யாவிடம் எடுத்துக் கூறுவார்கள். அய்யாவும் அகமகிழ்ந்து அதனைக் கேட்பார்கள். நீண்ட காலத்திற்குப் பிறகுதான், 'சித்திர புத்திரன்' என்கிற பெயரில் உரையாடல்களை நாடக பாணியில் எழுதிக் குவித்தவர் நம் அய்யாதான் என்பது தெரிந்தது!

**சுயமரியாதைக் கொள்கை**

அய்யா அவர்கள் சுய சிந்தனையாளர். எவருக்கும் உதிக்காத கருத்துக்கள் அவருக்கு உதிப்பதை நாடு பல முறை கண்டிருக்கிறது.

தமிழர் சமுதாயத்தை எப்படியாவது உயர்ந்த சமுதாயமாக்க வேண்டும் என்பதில் அவருக்குக் கடைசி வரை தளராத உறுதி இருந்தது. தாட்சண்யத்திற்காக





எதையும் விட்டுக் கொடுக்கும் தன்மை அவரிடம் மிகுதியாக உண்டு. ஆனால், ஒன்றிலே மட்டும் அவர் தனது எண்ணத்தைச் சற்றும் விட்டுக் கொடுத்ததேயில்லை. அது அவர் கண்ட சுயமரியாதைக் கொள்கையாகும்.

நமது சமுதாயம் முழுவதும் படித்து விட வேண்டும் என்ற பேராசை கொண்டவராகவே பெரியார் திகழ்ந்தார். தனது நாட்டில் இன்னமும், பல பேர் கல்வி அறிவற்றவர்களாக நடை போடுகிறார்களே என்பதற்காக வெட்கப்பட்டார், வேதனைப்பட்டார். தொண்ணூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்தார் என்றாலும், ஒவ்வொரு சொல்லும், செயலும், நாட்டிற்காகவே எண்ணிப் பணியாற்றியவர் அவர்.


**வைரமென ஒளிவிட.....**

உலகத்தில் எத்தனையோ சிந்தனையாளர்கள், பகுத்தறிவுவாதி தோன்றியதுண்டு. ஆனால், பெரியாரைப் போல் முழு நேரம் உழைத்தவர்களை உலகில் காண்பது அரிது. எவராவது தன்னிடத்தில் கிடைத்தால், அவரிடத்தில் உள்ள திறமைகள் அனைத்தையும், ஆற்றல் அத்தனையையும், பல்வேறு வேலைகளிலே புகுத்தி, அவரை வைரமென ஒளிவிடச் செய்து விடுவார்.

அவரிடம் பயில்வதே ஒரு தனி அனுபவம். ஒருவர் நல்லபடி நாட்டுக்குப் பயன்படுவார் என்று அவர் கருதினால், பொது மக்கள் மத்தியில் தாராளமாக அறிமுகப் படுத்தி விடுவார். தமிழ் நாட்டில் இன்றுள்ள தலைவர்களில் பெரும்பாலோர் அவராலே அறிமுகப் படுத்தப்பட்டவர்கள்தான்.

**ஏழை வைத்த விருந்து!**

பொது வாழ்க்கையில் ஒரு கட்டுப்பாட்டை வைத்திருந்தார். தன்னை உபசரிப்பவன் ஏழையாயிற்றே என்று எவரையும் அவர் கருதியதில்லை. மற்றவர்கள் முகங் கோணாதபடி பார்த்துக் கொள்வதில் அவருக்கு நிகர் அவர்தான்.



ஒரு முறை புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள கிராமம் ஒன்றில் தாழ்த்தப்பட்ட ஒருவர், அய்யாவை மதிய உணவுக்கு அழைத்தார். அவர் வாழ்ந்த இடமோ ஒரு குடில்—பக்கத்திலே உள்ள மாட்டுக் கொட்டகையில், மாட்டுச் சாணம் தெளித்துத் தரையைச் சுத்தம் செய்து வைத்திருந்தார்.

பெரியாருடன் மறைந்த திரு என். வி. நடராசனும் உடன் போயிருந்தார். தரையில் இலை போட்டு அய்யாவுக்கு அரிசிச் சாதத்தைப் போட்டார். நல்ல வரமிளகாய்க் குழம்பைச் சாதத்திலே ஊற்றினார். பெரியார் மிக்க மகிழ்ச்சியுடன் சாதத்தைப் பிசைந்து சாப்பிடத் தொடங்கினார். உடன் வந்தவர்கள், காய்கறிகள் ஏதேனும் வரும் என்று எதிர்பார்த்தார்கள். அய்யா அவர்கள் மற்றவர்களைச் சாப்பிடுங்கள் என்று உற்சாகப் படுத்தினார். குழம்போ மிகவும் காரமானது. பெரியாரோ ஏகக் களிப்பில் சாப்பிடுகிறார். ஒவ்வொருவரும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்த வண்ணம் சாப்பிட்டார்கள். ஏழை வீட்டில் குழம்பிற்கு அப்புறம் வேறேது இருக்க முடியும்? விருந்து தந்தவரையும், அந்த ஏழைத் தாயையும் மனதார வாழ்த்தினார், புறப்பட்டார்; வண்டி புறப்பட்டதும், ஒவ்வொருவரும் தாங்கள் காரத்தால் பாதிக்கப்பட்டதை எடுத்துச் சொன்னார்கள். பெரியாரோ அவர்களுக்கு நேர்மாறாகக் காட்சி அளித்தார்.

"தனது பல நாள் கூலியில் மிச்சம் பிடித்தல்லவா அந்த ஏழை தனக்கு விருந்துவைத்தார்? அதைப் பொது வாழ்க்கையிலே உள்ள நீங்கள் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்" என்று கடிந்து கொண்டார் அவர். இது போல் எத்தனையோ சம்பவங்களைச் சுட்டிக் காட்ட முடியும்.

**காலமெல்லாம் ஒளி வீசி.**

பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், தமிழ்நாட்டு நகரங்களிலும், கிராமங்களிலும் வயதான தாய்மார்கள், தெருவோரங்களில் அடுப்பு மூட்டி, இட்டிலி சுட்டும், புட்டு அவித்தும் விற்பார்கள். பெரியார், பேரறிஞர் அண்ணா, சிந்தனைச் சிற்பி சி.பி. சிற்றரசு, திரு. பொன்னம்பலனார், திரு எஸ். வி. லிங்கம் போன்றோரோடு பயணம் செய்வார். காலை நேரங்களில் இப்படிப்பட்ட கடை அருகே காரை நிறுத்தி, அந்த அம்மையாருடன் ஏதாவது கதை பேசிக் கொண்டே நன்கு சாப்பிட்டு விட்டு வருவார். தன் உடன் வந்தவர்களிடம் தான் சாப்பிட்ட டிஃபனின் மகிமையைப் பற்றிப் பேசிக் கொண்டே வருவார்.


அவரது வாழ்வில், எளிமையும், சிக்கனமும், எவரையும் மதிக்கும் தன்மையும் காலமெல்லாம் ஒளி வீசிப் பிரகாசித்துக் கொண்டே இருந்தன.


வாழ்க பெரியார் புகழ்!

# நியூயார்க்கிலிருந்து

# பேரறிஞர் அண்ணா பெரியார் அவர்கட்கு எழுதிய கடிதம்







பேரன்புடைய பெரியார் அவர்கட்கு, வணக்கம்.


என் உடல் நிலை [illegible] வருகிறது. [illegible]

[illegible]

நியூயார்க்
10/10/68.

அன்பு வணக்கம்.

தங்கள் அன்புள்ள
அண்ணாதுரை.



# பகுத்தறிவுப் பனிமலை

**நெ. து. சுந்தரவடிவேலு**

பெரியார். எவர் பெரியார்? செயற்கரிய செய்பவர், பெரியார். செயற்கரிய செய்தவர் பலர் அல்லர்; சிலரே. அவர்களில் பெரியவரையே, நாம் 'பெரியார்' என்று பெருமிதத்தோடு அழைக்கிறோம்.

எத்தனையோ காந்திகள் இருந்தாலும், 'கத்தியின்றி இரத்தம் இன்றி சுதந்திரம் பெற்றுத் தந்த அண்ணல் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியையே 'காந்தி' என்று சுட்டுகிறோம். சிந்தனையில் சிறந்தவர்கள் சிலர், முயற்சியில் முன்னிற்பவர்கள் சிலர், இருந்தாலும் தூங்கிக் கிடந்த கோடி கோடி மக்களை—சிந்திக்க அஞ்சிய மக்களை உலுக்கு உலுக்கென்று, உலுக்கி, விழிப்புறச் செய்த, சிலவேளையாவது பகுத்தறிவைப் பயன்படுத்தும் நிலைக்கு இழுத்து வந்த, தந்தை ஈ.வெ. ராமசாமியையே பெரியார் என்று அழைக்கிறோம்.



'பெரியார்' என்னும் பெயர், சிந்தனை பொங்கும் சுனை. எழுச்சியூட்டும் சொல்; நம்பிக்கையூட்டும் ஞாயிறு. தமிழர் எங்கிருந்தாலும் எழுச்சியூட்டும் பெரும் பெயர். தமிழர்களுக்கு மட்டுமா விழிப்பூட்டும் ஞாயிறு? அன்று, அன்று, 'எவனோ சொன்னான்; எண்ணற்றவர்கள் வழிவழி சொல்லுகிறார்கள்; ஆகவே நம்பித்தான் ஆகவேண்டும். அதற்கு அப்பால் சிந்திப்பது குற்றம்; பெருங்குற்றம்' என்னும் மந்தைப்போக்கில் போகும் மக்கள் கூட்டம் எங்கிருந்தாலும் அதன் சிந்தனை ஊற்றுக்கால்களை — பகுத்தறிவுக் கண்களைத் திறந்துவிடும் நல்ஞாயிறாக 'பெரியார்' விளங்கினார்; விளங்குகிறார்; என்றென்றும் விளங்குவார்.

உயிர் இனங்களிலே சிறந்தது மக்கள் இனம். இவ்வினத்தைச் சேர்ந்த நமக்கே ஆறாவது அறிவாகிய பகுத்தறிவு உண்டு. இதைப் பயன்படுத்தியபோதெல்லாம் மானுடம் முன்னேறியுள்ளது; கிடைத்ததைத் தின்று பிழைத்திருந்த மனிதர், பயிரிட்டு உண்ணக்கற்றது, அறிவின் சாதனை. பருவமல்லாத காலத்திலும் கண்ணாடி வீட்டுக்குள் பல்வகைப் பயிர்களை வளர்த்துக் காய்கறிகளைப் பயிரிட்டுக் குவிப்பது, வேளாண்மை அறிவின் முன்னேற்றம். கால்களையே நம்பியிருந்த மக்களில் ஒருவன், சக்கரத்தைக் கண்டுபிடித்தது, செயற்கரிய சாதனை. அதை வண்டியாக்கிப் பயன்படுத்தியது ஒரு கூட்டம் முழுவதும் பெற்ற அறிவு வளர்ச்சியாகும். தரைமேல் நடமாடி, வானத்தைப் பார்த்து, வாயைப் பிளந்து, நெடுங்காலம் வியந்து நின்ற மானுடம், துணிந்து முயன்று, விண்வெளிப் பயணத்தில் வெற்றி கண்டுவிட்டது. நுட்பத் திறன் பயின்ற மனிதர்கள், நூறு நாட்கள், விண்வெளியிலேயே சுற்றிக் கொண்டிருந்த பின்னர், நலமே, ஞாலம் திரும்பியது இக்காலச் சாதனை. மக்கள் இனவளர்ச்சி மேலும் மேலும் நீளும். ஏன்? முன்னோர் சொன்னவற்றிலிருந்தும் எழுதியவற்றிலிருந்தும் விடுபட மானுடம் கற்றுக் கொண்டதால், துணிந்து, சாதனை பலபுரிய துணைநிற்கும் பெரும் அமைப்புகள் உருவாகியுள்ளதால், 'தனக்குத் தனக்கு' என்னும கடுகு உள்ள நிலையிலிருந்து வளர்ந்து, 'நமக்கு, நமக்கு' என்னும் மக்கள் இன உணர்வுக்கு வளர்ந்துவிட்டதால்.

இப்பெரும் நிலைகளுக்கு, மக்கள் இனத்தைத் தள்ளிக் கொண்டு சென்ற சீரிய சிந்தனையாளர்கள் சிலர்; அதை உலகறிய வெளியிட்ட உரவோர் சிலர்; நீண்ட வாழ்நாள் முழுவதையும் சமுதாயப் புரட்சிக்கே செலவிட்ட பெரியார்கள் சிலரே. அத்தகையோர் வரிசையில் ஒளிவிடும் பகுத்தறிவுப் பகலவன், சுயமரியாதைச் சுடர், தந்தை பெரியாரைப் பார்ப்போம்.

நிலவளத்தையும் நீர்வளத்தையும் அறிவு வளத்தையும் ஆற்றல் வளத்தையும் பயன்படுத்த வேண்டியவகையில் பயன்படுத்தினால், மானுடம், மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். வாழப் பிறந்த மக்கள் இனத்தில், கூடி வாழவைக்கப் பிறந்த மக்கள் இனத்தில், ஒரேவேளை பல சொத்தைகள் தோன்றினார்கள். வாயடியும் கையடியும் மிகுந்த அவர்கள் பிற பிரிவினர்களைக் கொன்று, அடக்கி ஆள்வதில் வெற்றி கண்ட அவலங்களையே, நாம் வரலாறாகப் படிக்கிறோம்.

அரசியல் அடிமைத்தனத்தைப் போன்றே, சமுதாய அடிமைத்தனம் என்னும் நோய், மக்கள் இனத்தை நெடுநாளாக வாட்டிவரும் கொடுமையாகும். மக்களுக்குள் உறங்கிக் கிடக்கும் ஆதிக்க வெறியின் அலங்கோலமே 'வறியோர் பலர்; வாழ்வோர் சிலர்' என்னும் அவலநிலை; 'ஆணுக்குப் பெண் அடிமை' என்பதும் அகந்தையின் கோர உருவமே.

தொன்று, என்று, எப்படி வாழ்ந்திருந்தாலும், நாம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தநிலை என்ன? அரசியல் அடிமை, பொருளியல் அடிமை; சமுதாயத்தில்? பிறவி இழிவு விலங்கு.

இம்மூன்று விலங்குகளையும் உடைத்து நொறுக்கினால், மக்கள் மானத்தோடு சம உரிமையோடு, சோற்றுக் கவலையற்று வாழ முடியும். அரசியல் விடுதலைக்கு உழைத்தவர்கள் உண்டு. பொருளியல் மாற்றத்திற்குப் போராடியவர்கள் உளர்.



நாகம்மையார்

சமுதாய சமத்துவத்திற்காகச் சமர் புரிந்தவர்கள், புரிகிறவர்கள், அங்கும் இங்கும் உள்ளார்கள். அவர்களிடையே 'எவரெஸ்ட்' சிகரமாக உயர்ந்து நிற்கிறார், நம் தந்தை பெரியார்.

அழுக்காறே சொத்தாக உள்ள நாம், முன்னாட்டை இழந்தோம்; முத்தமிழை மறந்தோம்; முக்காலமும் அடிமை என்னும் நிலைக்குத் தள்ளிக் கொண்டோம். புலிநிகர் தமிழர்கள், பூனைக் கஞ்சும் கோழைகளாயினோம். ட்ண்பட்ட மூத்த மக்களாகிய நாம், ஒற்றுமைக் குறைவால், அளவுக்கு மீறிய மோதல்களால், நாடிழந்தோம்; வாழ்விழந்தோம். ஆறாப் புண்பட்டு, நஞ்சு கலந்த குருதியோடு, நாளை எண்ணி, ஏங்கிக் கிடந்தோம். 'முனைப்பு நோய்' இந்தியா முழுவதையும் தொற்றிற்று. விளைவு? இந்தியா, ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டது. பொது மக்கள் கையைப் பிசைந்து கொண்டு எதை எதையோ வேண்டி வணங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளை? இந்திய விடுதலைக்குரல், கணீரென ஒலித்தது; புரியும் குரலாக ஒலித்தது. காந்தியடிகளின் தலைமையில், விடுதலை இயக்கம், மக்கள் இயக்கமாக வளர்ந்தது. நாட்டின் நாலா பக்கங்களிலும் பரவிற்று.

காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம், அன்றைய ஈரோட்டின் நகரவைத் தலைவர் சீமான் ஈ.வெ. ராமசாமியைக் கவர்ந்தது. அரசு சுகத்தைத் துறந்த சித்தார்த்தரைப் போன்று ஈ. வெ. ரா., போகத்தை, பெருமையை, புகழை, பதவிகளைத் துறந்தார். காந்தியப் போராட்டில் குதித்தார்.

ஒத்துழையாமை, தீண்டாமையொழிப்பு, மதுவிலக்கு, கதரைப் பாப்புதல் ஆகிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் ஈ.வெ.ரா. முனைந்தார். சொல்லும் செயலும் ஒத்த சான்றோர், ஈ.வெ.ரா. எனவே, தமக்குச் சேரவேண்டிய பெரும் பணத்தைப் பெறுவதற்கும் ஆங்கிலேயருடைய வழக்குமன்றம் செல்ல மறுத்துவிட்டார்.

மக்களை, நெருங்கக்கூடாதவர்கள், தீண்டக்கூடாதவர்கள், உடனிருந்து உண்ணக்கூடாதவர்கள், புழங்கக் கூடாதவர்கள் என்று முத்திரை குத்தித் தள்ளி வைத்தல் கொடிது; இக்கொடுமை தன்னாட்சி செலுத்திய காலம் நெடுங்காலம். இக்கொடுமையின் அடையாளங்களில் ஒன்று; 'இன்ன தெருவில் இன்ன சாதியார் நடக்கக்கூடாது' என்னும் சட்டமாகும்.

கேரளத்தைச் சேர்ந்தவைக்கம் என்னும் ஊரில், பெரிய சாதிக்காரர்கள் குடியிருக்கும் தெருவில்'ஈழவர்'கள் நடக்கக்கூடாது. இந்த அநீதியை எதிர்த்து, கேரளவர்கள் சிலர் சத்தியாக்கிரகம் தொடங்கினார்கள். முன்னின்ற பதின்மூவரையும் கொத்தாகக் கைது செய்துவிட்டார்கள். அப்போது தமிழ்நாட்டு காங்கிரசின் தலைவராக விளங்கிய ஈ.வெ. ராமசாமிக்கு அவசர அழைப்பு வந்தது. விரைந்து சென்றார்; தலைமை ஏற்றார்; சிறைப்பட்டார்; இருமுறை சிறைப்பட்டார்; வெற்றி பெற்றார். உரிமையைப் பெற்றுத் தந்தார். வைக்கம் வீதிகளில் எல்லாச் சாதியாரும் நடக்கலாம் என்னும் உரிமையைப் பெற்றுத் தந்தார். வைக்கம் வீரராக, வெற்றி வாகை சூடிவந்தார்.


மதுவிலக்கு இயக்கம் கள்ளுக்கடை மறியலாக உருவெடுத்தது. ஈ.வெ.ரா. அதில் முழுமூச்சோடு ஈடுபட்டார். அதுமட்டுமா? மனைவி நாகம்மையாரையும் தங்கை கண்ணம்மாவையும் மறியலில் பங்கு கொள்ளச் செய்த பெருமை, ஈரோட்டுச் சிங்கத்தைச் சாரும். மற்றோர் பெரிய விலையைக் கொடுத்தார். என்ன விலை? அவருடைய தென்னந்தோப்பு மரங்களை கள்ளிறக்கக் குத்தகைக்கு விட்டிருந்தார். மதுவிலக்கு இயக்கத்தில் ஈடுபட்ட ஈ.வெ.ரா. குத்தகையை ரத்து செய்ய முயன்றார். குத்தகைக்காரர் ஒப்பவில்லை. மரங்களை வெட்டிச் சாய்க்க ஏற்பாடு செய்துவிட்டார் ஈ.வெ.ரா. காய்க்கும் மரங்கள் நூற்றுக் கணக்கில் வெட்டப்பட்டதால், ஈ.வெ.ராவிற்கு ஆண்டுக்கு இருபதாயிரம் ரூபாய் போல் தொடர் இழப்பு. கொள்கைக்காக எதையும் துறக்கத் துணிந்தவர் பெரியார்.

சீமான் வீட்டுப் பிள்ளை ஈ. வெ. ரா. நகரவைத் தலைவராக விளங்கிய ஈ. வெ. ரா. கதர் மூட்டைகளை தானே சுமந்து சென்று பட்டிதொட்டியெல்லாம் பரப்பினார். கதர் இயக்கம் தமிழ்நாட்டில் பரவியதற்கு மூல காரணம், ஈ. வெ. ரா. வைப் போன்றவர்களின் உண்மைத் தொண்டாகும்.

ஈ. வெ. ரா. இயற்கையிலேயே இணையற்ற சுய சிந்தனையாளர். ஏன், எதனால், என்று எல்லாவற்றையும் ஆய்ந்து பார்க்கும் இயல்பு அவருடைய மூச்சு. தன்னேரில்லாத தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவராக விளங்கிய ஈ. வெ. ரா. அப்பெருமைப் போதையில் மூழ்கி விடவில்லை. நம் சமுதாயத்தின் பல்வேறு கூறுகளின் மேலும் கவனத்தைச் செலுத்தினார்.

'இந்தியச் சமுதாயமும் தமிழ்ச் சமுதாயமும் ஒன்றுபட்டால் தான் வலிமை பெறும்; ஒன்றுபட முடியாமல் தடுப்பது சாதி உணர்வுகள்; சாதிகளைக் களைந்தெறிய வேண்டும். சாதியற்ற சமுதாயமாகும்போதே வளமும் வலிமையும் பெறுவோம். சாதியொழிப்பு, நீண்ட மருத்துவம், இடைக்கால சாந்தி மாத்திரையும் தேவை. வகுப்புவாரி உரிமை வலி தணிக்கும் மாத்திரை' இம்முடிவிற்கு வந்தார் ஈ. வெ. ரா. எனவே, தேர்தல் பதவிகளிலும் நியமனப் பொறுப்புகளிலும் பல சாதியினருக்கும் வாய்ப்புகள் கிடைக்கும் வகையில், வகுப்பு உரிமைக் கொள்கையைக் காங்கிரசின் முன் வைத்தார். ஏற்கச் சொன்னார். மூன்று நான்கு ஆண்டுகள் முயன்றும் பலனில்லை. வகுப்புரிமைக் கொள்கையைத் தீண்டத்தகாததாகத் தள்ளிவிட்டது, காங்கிரசு.

அரசியல் விடுதலையை மட்டுமே கருதும் காங்கிரசினால் பொது மக்களுக்குப் பிற துறைகளில் பலன் விளையாது என்ற முடிவுக்கு வந்தார் ஈ. வெ. ரா. தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைமையில் இருந்த ஈ. வெ. ரா. புகழ் ஒளியில் வெற்றி உலா வந்த ஈ.வெ.ரா அத்தனையும் துறந்து, காங்கிரசை விட்டு வெளியேறினார். சுயமரியாதை இயக்கத்தைக் கண்டார் வகுப்புரிமைக்குச் சமுதாயச் சமத்துவத்திற்கும் பெருங் குரல் கொடுத்தார்.



பெருமரத்தில் தோன்றிய



"இந்தியாவில் மும்மணிகளாய் மூவர் திகழ்கின்றனர். தேசியக் கிளர்ச்சி உண்டு பண்ணி, மக்களிடையே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியவர் காந்தியடிகள். பொதுவுடைமைத் தத்துவத்தை தீர ஆராய்ந்து, அதன் உண்மையினை உணர்ந்து, அதன் நன்மையினை மக்கள் அடைய வேண்டும் என்று கூறினவர் ஜவகர்லால் நேரு. மதத்தினை ஆராய்ந்து, மூடக் கட்டுப்பாடுகளை அறுத்து, மனிதன் மனிதனுக உரிமையுடன் வாழச் சீர்திருத்த முயல்பவர், ஈரோட்டு வள்ளல் ஈ. வே. இராமசாமிப் பெரியார் ஆவர்.''

—பேராசிரியர் என். ஜி. ரங்கா

பிஞ்சு, முற்றி, செங்காயாகி, முழுக்கப் பழுத்த பிறகு, கிளையில் ஒட்டிக் கொண்டிருப்பதில்லை; தானே விழும்; பொத்தென்று விழும்; முழுப்பலன் கொடுக்க-பெரும் பலன் கொடுக்க-அதுவன்றோ வழி?

பொதுத் தொண்டில், சீரிய சிந்தனையில் பழுத்த பழமாகிய ஈ.வெ.ரா. காங்கிரசிலிருந்து விடுபட்டார். தன்மான இயக்கமாக முளைத்து, பகுத்தறிவு இயக்கமாகப் பரவி, சமதர்ம இயக்கமாகத் தழைத்துத் தொண்டாற்றினுர்; சளையாத தொண்டாற்றினுர். ஒருநாளா? சில நாட்களா இல்லை. இல்லை. ஓராண்டா? சில ஆண்டுகளா? இல்லை. அவற்றிற்கு மேலும் அரை நூற்ருண்டுகளுக்கு மேல்.

நாடிவந்தவர்களுக்கு அருளொளி வழங்கும் 'மகானு'க வாழ்ந்தாரா பெரியார்? இல்லை. பட்டி' தொட்டிகளைத் தேடிச் சென்று, உறங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பினுர். ஆழ் உறக்கத்தில் உளறிய தூற்றலகளை, உமிழ்ந்த மண்மாரிகளைப் பொருட்படுத்தாது., கடைசி மூச்சுவரை பாடுபட்டார், பெரியார்.



பெரியார், சிந்தித்துக் கருத்து வழங்காத மனித வாழ்க்கைத் துறை ஏதும் இல்லை. ஐம்பது, நூறு ஆண்டுகளுக்குப் பின்னுல் நிகழப்போகும் விஞ்ஞான விநோதங்களை முன்கூட்டியே சொன்ன பெருமை பெரியாருடையது ஆகும்.

இமயமலை நீண்டது; மிக நீண்டது; பரந்தது; மிகப் பரந்தது; உயர்ந்தது; வானுற உயர்ந்தது.

பெரியார், சிந்தனையில் இமயமென உயர்ந்தவர். சிந்தனைகளை வாரி வழங்கும் பொதுத் தொண்டில் இமயத்தைப் போல் நீண்டவர். மனிதத் தொண்டில் இமயத்தோடு போட்டியிடும் அளவு விரிந்தவர்.

சுருங்கச் சொல்லுவதானுல் தந்தை பெரியார் பகுத்தறிவுப் பனிமலை. ஆண், பெண் சமத்துவத்திற்காக, அறுபதாண்டுக் காலம் அயராது பாடுபட்ட பெருமலை. இல்லாரும் உள்ளாரும் அற்ற சமதர்மச் சமுதாயத்தைக் காண அரும்பாடுபட்ட செல்வர். சாதிபேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு, கல்லடியும் சொல்லடியும் ஏற்ற அறவோர்; வாழ்நாள் முழுவதும் ஏற்ற பொறுமை மலை.

அப்பெரியார் பண்பில் இமயத்தையும் மிஞ்சிய உயர்மலை. தன்னைக் காண வரும் அரும்பு மீசையும் காணுத இளைஞரையும் எழுந்து நின்று வரவேற்ற ஒரே மனிதர்; எல்லா மனிதர்களையும் சம மனிதர்களாகவே மதித்த மெய்யான மனிதர், பெரியார் ஆவார்.

பொது இயக்கத்தில் கால் எடுத்து வைக்கும் முன்பு வரை 'மைனராக' இருந்த ஈ.வெ.ரா. பொதுத்தொண்டு செய்யும் பேரியக்கங்களில் கலந்த பிறகு, பகைவரும் குறைகாண முடியாத அளவு ஒழுக்க நோன்பைக் கடைப்பிடித்த, பெரியாராக விளங்கினுர்.

உலகத்தின் பொதுச் செல்வமாகிய தந்தை பெரியாரின் பகுத்தறிவுப் பாதையில், சாதியற்ற, பொருளியல் ஏற்றத்தாழ்வற்ற, மூடநம்பிக்கையற்ற, ஆண், பெண் சமத்துவம் நிலவும் புதியதோர் உலகை நோக்கி முன்னேற உறுதி பூண்போமாக! செங்குத்தான, சறுக்கும் பகுத்தறிவுப் பாதையில் மெல்ல மெல்லக் காலூன்றி ஏறும்போதும் பண்பையும் ஒழுக்கத்தையும் கொண்டு செல்வோமாக!



# என் பழக்கங்கள்

— தந்தை பெரியார்

கேள்வி : தங்களைப் போல் 95 வயது வரையிலும் வாழ்வதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில் : எப்போதும் 'ஆக்டிவாக' (சுறு சுறுப்பாக) இருக்க வேண்டும்.

கேள்வி : இந்த வயதிலும், தாங்கள் பல மைல்கள் சுற்றுப் பயணம் செய்கிறீர்களே, உடல் நலம் பாதிக்காதா?

பதில் : வயதிற்கும், இதற்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லை. என்னைப் பொறுத்த வரை சும்மா இருக்கப் பிடிக்காது. சுற்றுப் பயணம் செய்தால்தான் நன்றாக இருக்கிறது.

கேள்வி : எத்தனை மணி நேரம் தூங்குகிறீர்கள்?

பதில் : சாதாரணமாக இரவு 8, 9 மணிக்குத் தூங்கிடுவேன். பொதுக் கூட்டங்கள், நிகழ்ச்சிகள் இருந்தால், இரவு 11 மணிக்கு, 12 மணிக்கு மேல் தூங்குவேன். எப்படியும், 8 மணி நேரம் தூங்கிவிடுகிறேன்.

கேள்வி : தங்கள் உணவுப் பழக்கம் என்னென்ன?

பதில் : எப்பொழுதும் காலை 6 மணிக்கு எழுந்து விடுவேன். 8 மணிக்கு 2 இட்டிலி, ஒரு வாழைப் பழம் சாப்பிடுவேன். முன்பெல்லாம் 3, 4 வாழைப் பழங்கள் சாப்பிட முடிந்தது. ஆனால், இப்போது ஒரு பழத்திற்கு மேல் சாப்பிட முடியவில்லை. அதன் பிறகு, பார்வையாளர்களைச் சந்திப்பேன். இடையிடையே சிறிது காப்பி, பால் அருந்துவேன். மதியம் 12, 1 மணிக்குள் ஒரு கரண்டி சாதம், சிறிதளவு மாமிசம், தயிர், குருமா, ஒரு வாழைப் பழம் இதுதான் ஆகாரம். மாமிசம் சாப்பிடாவிட்டால், அவ்வளவு திருப்திகரமாக இருக்காது.

கேள்வி : மாமிசம் சாப்பிடுவதால் ஜீரண சக்தி பாதிக்கப்படவில்லையா?

பதில் : என்னைப் பொறுத்த வரை, மற்ற உணவுப் பதார்த்தங்களைவிட மாமிசம் சாப்பிட்டால் ஜீரணமாகிவிடுகிறது. அதனால் எந்த விதத் தொந்தரவும் கிடையாது. மாமிசம் இல்லாவிட்டால் தான் தொந்தரவு. இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள் 2 இட்டிலி, ஒரு வாழைப் பழம், ஒரு டம்ளர் பால். அத்துடன் சரி, காப்பியும், பாலும்தான் முக்கிய உணவு.

கேள்வி : பொதுக்கூட்டங்கள், மற்ற நிகழ்ச்சிகள் உள்ள நாட்களில் என்ன செய்வீர்கள்?

பதில் : பொதுக் கூட்டங்கள், இரவு 10—11 மணிக்கு முடிந்ததும் அதன் பின்புதான் சாப்பிடுவேன்.

கேள்வி : ஒரு நாள் பொழுதை எப்படிக் கழிக்கிறீர்கள்?


பதில் : முன்பெல்லாம் நிறையப் புத்தகங்கள் படிப்பேன்; எழுதுவேன். ஆனால், இப்போது படிக்கக் கஷ்டமாக இருக்கிறது. எழுதுவதற்குச் சலிப்பாக இருக்கிறது.

யாராவது கட்டுரைகள் கேட்டால் எழுதித் தருவேன். அத்துடன் முன்பு மாதிரி மூளை தெளிவாக இல்லை. கஷ்டப்பட்டுச் சிந்திக்க வேண்டி இருக்கிறது. முன்பெல்லாம் ஒன்றைப் பற்றித் தொடர்ச்சியாக வரும். ஆனால், இப்பொழுது நினைவாற்றல் குறைந்து வருகிறது.

கேள்வி : மது அருந்தும் பழக்கம் பற்றித் தங்கள் கருத்து என்ன? தங்களுடைய அனுபவத்தை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

பதில் : இது நாள் வரை நான் மதுவை அருந்தியதேயில்லை.

—'மாலை முரசு' 16—9—1973.



# தந்தை பெரியாருடன்..



திரு எம்.ஜி.ஆர்

திரு ஜகஜீவன்ராம்

திரு காமராஜ்

திரு ராஜாஜி

திரு ஜின்னா திரு அம்பேத்கார்

திரு செல்வநாயகம்

திரு ஜி.டி.நாயுடு

திரு சி.பி.சிற்றரசு

திரு. பி.சி. ஜோஷி.




# பெரியாருக்குப் பிடித்த குறள்!

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்**

தமிழகத்தில் முன் தோன்றி மூத்த பெரியவர் திருக்குறள் தந்த திருவள்ளுவர். திருவள்ளுவருக்குப் பின் தோன்றிப் பெருமை பெற்றவர் நமது பெரியார். திருவள்ளுவர் சமுதாயத்திற்காகவே சிந்தித்தவர்; சமுதாயம் சிறப்புற்று இயங்க நூல் செய்தவர். பரந்த அளவிலான சமுதாயத்தைப் பகுதி பகுதியாக இயற்கையின் வழி வளர்த்துச் செழுமைப்படுத்தி, அவ்வழி சமுதாயத்தை முழுமைப்படுத்த வேண்டும் என்பது திருவள்ளுவரின் சிந்தனை ஆதலால், திருவள்ளுவரின் சிந்தனை தனி மனிதனிடத்தில் தொடங்கி, குடும்பத்தினைச் சார்ந்து குடி தழுவியதாகவும் அமைந்தது; உலகு தழுவியதாகவும் அமைந்தது. குடி என்பது ஒரு குருதி வழி, வழி வழியாகத் தொடர்ந்து வருவது. இங்குக் குருதி என்பது பண்பாட்டிற்குக் காரணமான செங்குருதி வளம் ஆகும். திருவள்ளுவர், பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப் பெறும் சாதி முதலிய வேற்றுமைகளைக் கடிந்து ஒதுக்குகின்றார். வழி வழிச் சிறந்து வரும் ஒழுக்கமைவு பொருந்திய குடி, குலம் ஆகியவற்றின் சிறப்பினை ஏற்றுக் கொள்கின்றனர். குடியும் குலமும் பிறப்பினால் அமைவதல்ல; கொண்டொழுகும் கொள்கையால், சீலத்தால் அமைவன. ''ஒழுக்கம் உடைமை குடிமை'' என்பார் திருவள்ளுவர். ஒழுக்கமைவு குன்றின் இழிகுடியினர் ஆவர் என்பதை ''பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்'' என்றும், ''இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும்'' என்றும் கூறி விளக்குகின்றார்.

ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தின் உறுப்பாகத்தான் வாழ்கிறான். அதனால் அவன், சமுதாயம் என்ற பேருறுப்புக்கு எழிலும் இயக்கமும் பயனும் தருகின்றவாறு வாழ்தல் வேண்டும். அதுபோலவே சமுதாயம், தனி மனிதனுக்குச் சிறந்த உணர்வுகளை வழங்கத் தக்கவாறு அமைய வேண்டும். சமுதாயம், தனி மனிதனின் அனைத்து உரிமைகளுக்கும் ஒப்புறுதி அளித்தும் பாதுகாத்து வளர்க்க வேண்டும். சமுதாய அளவில் தனி மனிதனுக்கு மறைமுகமான கடமைகளே அதிகம். நேரடியான கடமைகள், தனி மனிதனுக்கும் குடிக்குமுள்ள தொடர்பு அங்ஙனம் அன்று. தனி மனிதனுக்குக் குடி, நெருக்கமான உறவுடையது; அன்பின் பிணைப்பில், அரவணைப்பில் தழுவி நிற்பது. குடி தழுவி வாழ்வதென்பது எளிதான வாழ்க்கையன்று. மனித குலம் தோன்றி ஆண்டில் கோடிக்கணக்கானாலும் வளர்ச்சியின் வேகம் குறைவே! அதுவும் புறநிலை வளர்ச்சியே நிகழ்ந்துள்ளது. புறநிலை வளர்ச்சியின் வேகமே சமுதாயத் தேவையுடன் பொருந்தவில்லை. ஆதலால் உலகத்தில் வினாடிக்கு ஒருவர் உணவின்மையால் சாகின்றனர். வாழ்ந்தும் வாழாமல் வறுமையில் உழல்பவர் 60 விழுக்காட்டுக்கு மேல் உளர். இந்த நிலையில் அகநிலைப் பண்பாட்டு வளர்ச்சி எளிதில் அமையாது. நிலத்தின் வளம் நிறைந்தாலே பயிர் வளம் மிகுதியாகத் தோன்றும். பொலி காணும். குளத்தில் நிறைந்த நீர் வளம் இருப்பின் தாமரை வளமாக வளரும்; நீர்ப் பற்றுக் குறை இருப்பின் தாமரையின் வளர்ச்சியும் குன்றியே இருக்கும். ஆதலால் குற்றமுடைய சமுதாயமாகவே அமைந்துள்ளது. குற்றத்தைத் தூற்றிப் பயனில்லை. குற்றத்தை மறைத்துக் குடியின் பெருமையைக் காக்க வேண்டும். அஞ்ஞானம் மறைப்பதால் குற்றம் வளராதா என்று கேட்கலாம். குற்றம் மறைக்கும் முயற்சியுடன் திருத்தம் செய்யும் முயற்சியும் மேற்கொள்ளப் பெறும். அங்ஙனம் செய்யும் அறிவுத் திறன்,



> முறைசெய்யும் நம்பெரியார் கீழ்அறுப் பானைச்
> சிறைசெய்யும் செந்தமிழ் நாடு.
>
> —பாவேந்தர், குயில் (2—8—60)

அன்பின் ஆற்றல் சமுதாயத்தின் முன்னேடிகளுக்குத் தேவை. புண்ணை மறைத்துக் கட்டுப் போடுவது புரையோட அல்ல. புண் ஆறவே! உடல் மருத்துவரைவிட, சமுதாய மருத்துவருக்கு அதிக அறிவுத் திறனும் அன்பின் பெருக்கமும் செயற்பாடும் தேவை. குடியின் குற்றத்தை மறைத்து வாழ்தல் எளிதன்று. குடியின் குற்றத்தை மறைத்து வாழ முயற்சி செய்பவர்கள் அடையக் கூடிய இழப்பும் துன்பமும் பலப் பல.

''இடும்பைக்கே கொள்கலங்
கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு''

என்பது திருக்குறள். ஆனாலும், இடும்பையையே இன்பமாகக் கருதி அந்தத் தொண்டினை ஏற்றுக் கொள்பவர்கள் சமுதாய மருத்துவர்கள்; பெரியவர்கள்.

பெரியார் இந்தத் தொண்டினை ஏற்றுக் கொண்டதால் தொடக்கக்காலத்தில் அளவு கடந்த இழப்புக்களுக்கும் பழிப்புக்களுக்கும் ஆளானார். ஓயாது உழைத்ததனால் உடல் நலத்தையும் இழந்தார். தலைவர் பெரியார் தம்மை இழந்து தமிழ்க் குடியின் மானத்தைக் காப்பாற்றியதால் இன்று ''பெரியார்'' என்று பாராட்டப்படுகிறார். ஆதலால், தனி மனிதன் தான் வாழ்வதைப்போலவே தன்னுடைய குடியின் வாழ்க்கையை, வளர்ச்சியைக் கருத வேண்டும். குடி தழுவி வாழ்தல் வழி வேளாண்மை, சான்றாண்மை, பண்புடைமை ஆகிய அகநிலை வளர்ச்சியினைத் தனி மனிதன் பெற்று அகநிலையிலும் புறநிலையிலும் ஆக்கம் எய்துகின்றான். அதனால் ''குடி செயல் வகை'' என்றே திருவள்ளுவர் ஓர் ஆதிகாரம் கூறினார்.

1969ஆம் ஆண்டு ஒரு நாள் தலைவர் தந்தை பெரியார் அவர்களும் நாமும் ஒரே காரில் மதுரையிலிருந்து திருநெல்வேலிக்குச் சென்று கொண்டிருந்தோம். திருப்பரங்குன்றத்தைக் கடந்தவுடன் ஐயா அவர்கள் தமது சட்டைப் பையில் வைத்திருந்த திருக்குறள் மூல நூல் ஒன்றை எடுத்தார்கள். அதில் ''குடி செயல் வகை'' என்ற அதிகாரத்தை நம்மிடம் தந்து படிக்கும்படி சொன்னார்கள். அதில் அவர்கள் படிக்கச் சொன்ன குறள் இன்றும் நம் நினைவில் பசுமையாக இருக்கிறது.

''குடிசெய்வார்க்(கு) இல்லை
பருவம்; மடிசெய்து
மானம் கருதக் கெடும்''

என்பது அத்திருக்குறள். நாம் குறளைப் படித்து விட்டு ஐயா அவர்களின் முகத்தைப் பார்த்தோம். ஐயா அவர்கள் அதற்குப் பொருள் கேட்டார்கள். நாம் தயங்கினோம். ஐயா அவர்களிடமிருந்து பொருள் கேட்பதற்காக! அவர் கூறும் பொருள் நடைமுறைப் பட்டறிவிலிருந்து தோன்றி, பகுத்தறிவிற் சிறந்து விளங்குமல்லவா? அதற்காகத்தான்! ஐயா அவர்கள் சிரித்துக் கொண்டே பொருள் விளக்கம் கொடுத்தார்கள்.


''நமது தமிழ்க் குடியை வளர்க்க வேண்டும்; நாள் நட்சத்திரம் பார்க்காமல் விரைந்து தொண்டு செய்ய வேண்டும். தமிழ்க் குடியைத் தழைக்கச் செய்யும் தொண்டினை ''இன்று'' ''நாளை'' என்று ஒத்திப்போட்டுச் சோம்பல் செய்யக் கூடாது. தமிழர்கள் தமக்குள் மானம், அவமானம் என்ற அடிப்படையில் பழகக் கூடாது. மானம், அவமானத்தைக் கடந்தது தான் தமிழினத்திற்குச் செய்யக்கூடிய பணி. இந்த உணர்வோடு தொண்டு செய்தால்தான் தமிழ்க் குடி வளரும். ஏன்? காமராசர் என்னை ஒன்றும் அப்படிப் பெருமைப்படுத்தி விட வில்லை. என்னையும் என் இயக்கத்தையும் ஒரு விதமாகத்தான் பார்க்கிறார் ; உபயோகப்படுத்திக் கொள்ள முன்வருவதில்லை. இது அவருக்குள்ள சங்கடம். அவர் மதித்தால் என்ன? மதிக்காது போனால் என்ன? அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் நான் காமராசரை ஆதரிப்பதற்குக் காரணம் அவர் ஒரு தமிழர்; ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் தோன்றிய தலைவராக வளர்ந்து வந்திருப்பவர் என்பதே! காமராசரின் தலைமை நமது இனப் பகைவர்களுக்குப் பிடிக்காது. ஆனால் அவர் தலைமை தமிழ்க் குடியினருக்குக் கல்வியைத் தந்திருக்கிறது. பல நல்ல முன்னேற்றத்தைத் தந்து கொண்டிருக்கிறது. அதனால் அதைப் பாதுகாப்பது நமது கடமை!'' என்று சொன்னார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருக்குறளை, இன்றைய சமுதாய அமைப்போடு—பணியோடு இணைத்துச் சிந்தித்த பெரியாரின் திறம் பாராட்டுதலுக்குரியது.

பெரியார் அவர்கள் ஒரு காரியம் நல்லதா? கெட்டதா? என்று ஆராய்ந்ததற்கு வேறு எந்தக் காரணங்களையும்விட அது தமிழ்க் குடிக்குப் பயன்படுகிறதா? என்பதைத்தான் அடிப்படை அளவுகோலாக வைத்துப் பார்ப்பார்கள். அந்த அடிப்படையில் அவர்கள் தமது கொள்கைகளைக் கூட மாற்றிக் கொள்ள தயங்கமாட்டார்கள். தமிழ்க் குடியின் வாழ்வு சிறப்பதுதான் கொள்கையின் நோக்கம் என்ற மனப்பான்மையுடையவர்கள். கொள்கை மாற்ற இயலாதது என்ற வைதிக மனப் போக்குடையவர்களல்லர். இந்தக் கொள்கைப் பிடிப்பின் அடிப்படையிலேயே அவர் தீண்டாமை, சாதி வேற்றுமை முதலியவைகளைக் கடிந்தார்கள். இந்தத் தமிழ்க் குடி வளர வேண்டும் ; தமிழர்கள் எல்லா உயர் பதவிகளிலும் அமர வேண்டும் என்று கவலைப்பட்டார்கள். ஆர்வம் காட்டினார்கள்; அதற்காக வழக்காடி நாளும் எழுதினர்கள்; பேசினார்கள்; தமிழனத்தின் முன்னேற்றத்திற்காகவே வாழ்ந்தார்கள். தமிழரில் யார் எந்த நலம் பெற்றாலும் பெரியார் அவர்கள் தாமே பெற்றது போல மகிழ்ந்தார்கள். இத்தகு பெரியார் தொண்டு அவர் தம் நினைவாகத் தொடர்ந்து நடைபெற, புரட்சித் தலைவர், தமிழகத்தின் முதல்வர் மாண்பமை எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் முயற்சி செய்வது பாராட்டுதலுக்குரியது.

## "சோதிடம்"

"என் சோதிடத்தில் எனக்கு 67 வயது என்று குறித்து என் பெற்றோர்கள் அச்சுப் போட்டிருக்கிறார்கள். ஆனால், நான் இன்று 94 வயதில் சவுக்கியமாக இருக்கிறேன். என் சோதிடம் இன்னமும் இருக்கிறது. ஆனால், அது பொய்யாகிவிட்டது. அந்தக் காலத்தில் 100 வயது இருப்பதென்பது அதிகம் என்று கருதி, எனக்கு 67 வயது என்று சோதிடன் கணித்தான். அப்போது சராசரி வயது 10. அதனால் 67 என்று எழுதினான். இப்போது சராசரி வயது 52. இப்போது அப்படி எழுத மாட்டான்"

(பெரம்பலூர் வட்டம், ஒகளூரில் சொற்பொழிவு. 13—7—1973)





தனியாகவே பகையைச் சாடினார், போராடினார்!

# அழியாத ஓவியம்!

(கலைமாமணி உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்)


அவர் ஒரு வரலாற்றுக் காவியம்—நம்
அகத்தினில் எந்நாளும் அழியாத ஓவியம்!
(அவர் ஒரு)

எவர்எது சொன்னாலும் ஏனென்றே—உன்
எண்ணத்தில் பலகாலம் கேளென்றே
அறிவுரை செந்தீயை மூட்டினார்—நம்
தலைமுறை வாழவழி காட்டினார்
(அவர் ஒரு)

பயிரினைக் களைதின்ற போதிலே—உயிர்
பண்பினைக் காப்பதற்கு வந்தவர்
உயிரினை விடுகின்ற போதிலும்—கொள்கை
உறுதியில் தளராது நின்றவர்
(அவர் ஒரு)

தனியாகவே பகையைச் சாடினார்—நம்
தன்மானம் நிலைத்திடப் போராடினார்
பெரியார்என ஒருவர் இல்லையேல்—தமிழ்ச்
சமுதாய மறுமலர்ச்சி இல்லையே!
(அவர் ஒரு)





# விதவைகளின் துயர் துடைத்த பெரியார்


திருமதி வை. சு. மஞ்சுளா பாய்

ரஷ்யாவில் இருந்து திரும்பியவுடன் பல மங்கையருக்கு வாழ்வு கொடுத்த பெரியார், விதவைத் திருமணங்கள் பல செய்வித்தார் பெரியார், தோழர்கள் அன்னபூரணி ரத்தினசபாபதி, சிவகாமி, சிதம்பரனார், ரங்கம்மாள் சிதம்பரம், ரங்கநாயகி நாராயணசாமி, எங்கள் ஊர் கானாடுகாத்தானில் நாட்டுக்கோட்டைச் செட்டியார் வகுப்பில் பிறந்த கருப்பாயி ஆச்சி சிதம்பரம் இப்படியே பலப் பல விதவைத் திருமணங்கள் பெரியாரின் ஊக்கத்தினால் நடந்தன. மதிப்பிற்குரிய நாகம்மையார் அவர்கள், வரும் விருந்தினருக்கும். திருமணம் செய்து வரும் விருந்தினருக்கும், கனிவுடன் உபசாரம் செய்வார். உபசரிப்பில் அவர்களுக்கு இணை யாருமே இல்லை. நாகம்மையார் அவர்கள் ஒருபோதும் சலித்ததே இல்லை. வரும் விருந்தினருக்கு உணவு வழங்குவதுடன் மட்டும் அல்லாமல் அவர்கள் குளியல் அறையில் நுழைந்தால் அவர்களுக்குத் தேவையான உடைகளும் அங்கே இருக்கும்.

விதவைத் திருமணங்களுடன், பெரியாரால், நடத்தப்பட்ட கலப்புத் திருமணங்களும் ஏராளம். பெரியார் அவர்களின் துணைவியார் திரு ஈ. வெ. ரா. மணியம்மையார் அவர்கள் செல்வியாகப் பள்ளியில் படிக்கும் பொழுது அவர்களின் தந்தை 'நாட்டுக்கு உழைக்க நல்ல நங்கையாக ஏற்றுக் கொள்ளுங்கள்' என்று கூறியதற்கேற்ப மணியம்மையார் அவர்களைத் திருச்சியில் ஏழைக் குழந்தைகளுக்கு உணவு, உடை வழங்கி கல்விக் கண் திறக்க எல்லா முயற்சிகளும் செய்து வெற்றியாகப் பேணி வளர்த்தார். அவர்களால் படித்துப் பட்டம் பெற்றவர் பலர். இப்பொழுதும் திருச்சி பெரியார் மாளிகையில் சுமார் நூற்று அறுபது குழந்தைகளுக்கு உணவு, உடை, கல்விக் கண் திறக்க வேண்டிய எல்லா வசதிகளும் செய்த பின்னர் மறைந்து விட்டார்கள். இங்கு உள்ள குழந்தைகள் உணவு உண்ணும் பொழுது, 'அம்மா, நீ எங்கு சென்றாய்' என்று பாடும் பொழுது நம்மை அறியாமல் கண்ணீர் வருகிறது.

அய்யாவிற்கு உழைப்பு அறுபது ஆண்டுக்காலம் ஆன பிறகு தான் 50 சதவீதம் தோழர்களுக்குக் கண் திறந்துள்ளது. என் மனத்தில் வெறுப்பு ஏற்பட்டதன் காரணமாகப் புகலிடம் தோன்றாமல் காசி (வாரணாசி) சென்றேன். அங்கு நகரத்தார் விடுதியில் தங்கியிருந்தேன். அவர்கள் என்னை நன்கு உபசரித்தார்கள். சாதி வெறி, இன வெறி மறைந்தோடி, சகோதர மனப்பான்மை ஓங்கி வளருவதைக் கண்டேன். கோவிலுக்குள் சலவைத் தொழிலாளி, துப்புரவுத் தொழிலாளி யாவரும் பேதம் இன்றிக் கடவுளை வணங்கிச் செல்கிறார்கள். அய்யா அவர்களின் தொண்டை, மகளிர் சமுதாயம் குறிப்பாக விதவைகள் சமுதாயம் மறக்கவே முடியாது! வாழ்க பெரியார் நாமம்! நம் தாய்க்குலம் தழைத்தோங்கப் பாடுபட்ட நாகம்மையார், மணியம்மையார் அவர்களின் நாமமும் வாழ்க! வாழ்கவே!





# தந்தை பெரியார்

எந்த வகையில் பார்த்தாலும், எந்தக் கோணத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தாலும் பெரியார், பெரியார்தான். அறுபது ஆண்டுகளுக்கு மேலாக, சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் இடையருது பாடுபட்ட தனிப்பெரும் தமிழர் தலைவர் அவர். தமிழ் இனத்தின் தலை குனிவுக்கான காரணங்களைக் கண்டுபிடித்து, அதைப் போக்குவதற்கான பரிகாரங்களை உறுதியுடனும் உள்ளத் தெளிவுடனும் வாழ்நாளெல்லாம் வலியுறுத்தி வந்தார் அவர்.

இறைவனையே தம் பகைவனக்கிக் கொண்டு, தோல்விகளைக் கண்டு துவளாமல், இறுதி மூச்சுவரை போராடியவர் ஈ.வெ.ரா. சமுதாயத்தில் நிலவும் சாதி வேற்றுமைகளைக் கண்டு உள்ளம் குமுறி, எரிமலையாக அனல் கக்கியவர். மனிதன், மனிதனை அடிமைப் படுத்துவதற்கும் இழிவுபடுத்துவதற்கும் கடவுள் நம்பிக்கைதான் காரணமாக இருக்கிறது என்று முடிவுசெய்து அதை வேரறுக்க, பிரச்சாரத்தைத் தம் போர்க்கருவியாக ஆக்கிக் கொண்டவர். தம் பேச்சாலும் எழுத்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டி, தலை நிமிர்ந்து நடக்கச் செய்த சீர்திருத்தச் சிங்கம் அவர். அமைதியான முறையில் அதிசயிக்கத்தக்க சமுதாயப் புரட்சிக்கு வித்திட்ட ஜனநாயகவாதி. பேச்சில் அனல் தெரித்தாலும், வன்முறைக் குரல் கேட்டாலும், அவர் என்றுமே அராஜகவாதியாக இருந்ததில்லை. 'இந்தத் தனி மனிதரின் முயற்சியால், தமிழ் இனம் விழிப்புற்று, எழுச்சியுற்று, பீடு நடை போட்டது!' என்று வரலாற்று ஆசிரியர்கள் பெரியாரைப் பற்றிப் பெருமையுடன் எழுதத்தான் போகிருர்கள்.

உள்ளத்திலிருப்பதைக் கள்ளங்கபடமற்ற குழந்தையைப் போல் பேசியதால் அவர் பேச்சில் மழலை மிளிர்ந்தது. பிறர் பேசத் தயங்கியதை அவர் பச்சையாகக் கூறியதால், அம்மொழி சற்றுக் கொச்சையாகவும் இருந்தது. பெரியாரின் மேடைப் பேச்சுக்கு இணையாக வேருெருவர் பேச்சைக் கூற முடியாது. அதிலும் தனிவழி மருத்துவர் அவர். அந்தப் பேச்சு, தாக்கப்பட்டவர்களைப் புண்படுத்தியதைவிட, அதிகமாகச் சிந்திக்கவே தூண்டியது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஈ.வெ.ரா. மனிதப் பண்புகள் நிறைந்த ஓர் உயர்ந்த மனிதர். நல்லிதயமும், நகைச்சுவையும், நல்லொழுக்கங்களும் நிறைந்த ஒரு நிறை மனிதர்.

அரசியலோடு தொடர்பு கொண்டிருந்தாலும், உள்ளத்தில் ஒன்று வைத்து, உதட்டில் வேறென்று பேசியறியாதவர். மனத்தூய்மையுடன் கை சுத்தமும் மிக்கவர். பதவிகளுக்கு ஆசைப்படாதவர். அரசின் சட்ட திட்டங்களைத் துரும்பென மதித்தாலும், ஆட்சியிலுள்ளவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்க என்றுமே அவர் தவறியதில்லை.

பழமைவாதிகளுக்கும், பத்தாம்பசலிக் கொள்கைகளுக்கும், புரையோடிவிட்ட பழக்க வழக்கங்களுக்கும், சாதி வெறியர்களுக்கும், அரசியல் கபடவேடதாரிகளுக்கும் 'சிம்ம சொப்பன'மாக வாழ்ந்த பெரியார். தமது பேரியக்கத்தைப் பொறுப்பு உணர்ச்சியோடும், நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிக்காத வகையிலும் நடத்தி வந்ததை யாரும் மறுக்க முடியாது. சமுதாயத்தின் இழிவுகளைப் போக்க, அவர் கையாண்ட வழிமுறைகள் எல்லோராலும் ஒப்புக் கொள்ள முடியாமல் இருப்பினும், அவர் சுட்டிக் காட்டிய லட்சியமும், ஏற்றி வைத்த அறிவுச் சுடரும் படைத்துத் தந்த மறுமலர்ச்சியும் தமிழகத்திற்கு மட்டுமின்றி பாரதத்திற்கே வழிகாட்டிகளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அருமை நண்பர் ராஜாஜி மறைந்து சரியாக ஓராண்டு கழித்து, பெரியார் தமது நீண்ட பயணத்தை முடித்துக் கொண்டு விட்டது இயற்கையின் அதிசயங்களில் ஒன்ருகும். இந்த நூற்ருண்டில், தமிழகத்தின் அரசியலில், சமுதாய வரலாற்ருேடு பிரிக்க முடியாமல் பிணைக்கப்பட்டிருந்த இவ்விரு தலைவர்களும், வெவ்வேறு வகையில் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்திருந்தார்கள்.

இவ்விரு முதுபெரும் தலைவர்கள் இல்லாத தமிழ்நாடு, அனுபவமிக்க வயோதிகர் இல்லாத வீடாகக் காட்சியளிக்கிறது.



[பெரியார் மறைவின்போது, 'ஆனந்த விகடன்' தீட்டிய தலையங்கம்.]




22-ஆம் நாள்

திருச்சி: ஆபிஸர்ஸ் கிளப் சார்பில் அய்யா பிறந்தநாள் விழா.

23-ஆம் நாள்

பெரமங்கலம் 'துறையூர் சமீபம்' பெரமங்கலம் ஊராட்சி வரவேற்பு—மின்விளக்கேற்று விழா.

24-ஆம் நாள்

சேலம்: காலை திருமணம். மாலை—இராசிபுரம் திருவள்ளுவர் அரசினர் கலைக் கல்லூரி தமிழ்ப் பேரவை சிறப்புக் கூட்டம்.

# தந்தை பெரியார்—ஒருமாதச் சுற்றுப்பயணம் நவம்பர் 1971

4-ஆம் நாள்

சேலம்: வெள்ளி சிம்மாசனம் அன்பளிப்பு—அய்யா பிறந்தநாள் விழா.

6-ஆம் நாள்

திருவெறும்பூர் (திருச்சி) அய்யா பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம்.

7-ஆம் நாள்

குளித்தலை: காலை 10 மணி மூடநம்பிக்கை ஒழிப்புக் கல்வெட்டுத் திறப்பு விழா. காலை 11 மணி குளித்தலை ஊராட்சி ஒன்றிய வரவேற்பு. காலை 11.30 மணி குளித்தலை பேரூராட்சி வரவேற்பு பகுத்தறிவாளர் கழகக் கருத்தரங்க நிகழ்ச்சி. மாலை: அய்யா பிறந்த நாள் விழா-பொதுக் கூட்டம்.

8-ஆம் நாள்

இராசபாளையம்: அய்யா-அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்.

9-ஆம் நாள்

வேம்பத்தூர்: மாலை ஊராட்சி மன்ற வரவேற்பு இரவு: மானா மதுரை பகுத்தறிவாளர் கழகச் சார்பில் அய்யா-அறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா பொதுக் கூட்டம்.

10-ஆம் நாள்

சிவகங்கை: பொதுக்கூட்டம்.

11-ஆம் நாள்

கல்லல்: காலை 10 மணி அய்யா-அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் மாலை: தேவகோட்டை அய்யா பிறந்தநாள் விழா – பொன்மலர் முடிசூட்டு விழா-பொதுக்கூட்டம்.

12-ஆம் நாள்

இராமநாதபுரம்: பொதுக் கூட்டம்.

13-ஆம் நாள்

பறம்புக்குடி: காலை 9 மணி பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

பரமக்குடி: மாநில பார்க்கவ குல மாநாடு. மாலை-காரைக்குடி அய்யா-அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்.

14-ஆம் நாள்

பட்டுக்கோட்டை: காலை திருமணம் புதுக்கோட்டை: மாலை, பகுத்தறிவாளர் கழகத் துவக்க விழா.

19ஆம் நாள்

உடையார்பாளையம்: மாவீரன் வேலாயுதம் நினைவுநாள் பொதுக் கூட்டம்.

20-ஆம் நாள்

பொன்பரப்பி: சிந்தனையாளர் கழகச் சிறப்புக் கூட்டம்.

21-ஆம் நாள்

பொன்மலை: எஸ். ஆர். எம். யூ சார்பில் பொதுக்கூட்டம்.

25-ஆம் நாள்

அயோத்தியாப்பட்டினம் (சேலம் மாவட்டம்): அரசினர் உயர்நிலைப் பள்ளி முத்தமிழ் மாணவர் மன்றச் சிறப்புக்கூட்டம்.

27-ஆம் நாள்

திண்டிவனம்: காலை நீத்தார் நினைவு நாள். மாலை—பாண்டிச்சேரி அய்யா பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம்.

28-ஆம் நாள்

சென்னை: காலை, சென்னை மாவட்ட திராவிட மாணவர் கழகத் துவக்க விழா.

29-ஆம் நாள்

சென்னை (28-வது) என். வி. நடராசன் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம்.

[விடுதலை—தந்தை பெரியார் 94-வது பிறந்த நாள் விழா மலரிலிருந்து.]

*[தள்ளாத வயதிலும் சிங்கம் போல் பட்டி தொட்டிகளிலெல்லாம்பகுத்தறிவுப் பணி ஆற்றியவர் தந்தை பெரியார். ஓய்வு என்பதே இல்லாமல் பாடுபட்ட பகுத்தறிவுப் பகலவனின் ஒரு மாதச் சுற்றுப் பயண விவரப் பட்டியல் இதைத் தெற்றென விளக்குகிறது.]*



# எக்ரோமின் கண்கூடான பயனைத் தருகிறது...
# லாபம் 20 சதவீதத்திற்கு மேல் உயர்கிறது



## தாவர உணவுச் சத்துக்கள் சிலேடேட் வடிவில் அடங்கியிருப்பதனால் எக்ரோமின் பயிர் விளைச்சலைச் சிக்கனமான முறையில் 20% அல்லது அதற்கு மேலும் உயர்த்துகிறது.

- எக்ரோமின் இந்தியாவின் முதல் தாவர உணவு இலைத் தெளிப்பாகும். ஈரப்படுத்தவும், பரப்பவும் உதவும் ஊக்கி, கிரகிப்புத் தன்மையை மேலும் அதிகரிக்கிறது.
- எக்ரோமின் தண்ணீரில் கரைகிறது. மற்ற எக்ரோ கெமிக்கல்களுடன் இதை உபயோகிக்கலாம்.
- எக்ரோமின் முக்கியமான ரசாயன உரங்களின் உபயோகிப்புத் தன்மையை உயர்த்துகிறது.
- எக்ரோமின் பயிர்களின் மகசூலையும், தரத்தையும் செம்மையாக்குகிறது.




**நிச்சயமான பயனைத் தருவதற்கென எக்ரோமின் சிலேட் செய்யப்பட்டுள்ளது**

நியூட்ரியன்ட்கள் (ஊட்டச் சத்துக்கள்) படிப்படியாக முழுவதும் கிரகிக்கப்படுவதை சிலேஷன் உறுதி செய்கிறது ...



**நிரூபணம் இதோ:**

''நெல்... எக்ரோமின் மூலம் விளைச்சல் 20% அதிகரித்தது''

ஆண்டிப்பாளையம்
தமிழ்நாடு

அதிகப்படி விவரங்களுக்கு இந்த முகவரிக்கு எழுதவும்
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.
தபால் பெட்டி எண் 9417, பம்பாய் 400 093

Grant.82 TM

"நான் சாதாரண ஆள்தான் என்றாலும், உலகம் சுற்றியவன்; பூரண பகுத்தறிவுவாதி; சொத்து சம்பாதிக்க வேண்டிய அவசியமில்லாதவன்; சொந்தத்திற்கும் பணம் சேர்க்க வேண்டிய தேவையில்லாதவன்; சாதி உணர்ச்சி, சாதிப்பற்று இல்லாதவன்; என்ன செய்தாவது சாதியை ஒழிக்க வேண்டுமென்பவன்; 70 ஆண்டு உலக அனுபவம், 30 ஆண்டு வியாபார அனுபவம்.

1915, 16, 17, 18, 19 வரை ரிஜிஸ்தர் செய்யப்பட்ட ஈரோடு வியாபாரச் சங்கத் தலைவன்; தென் இந்திய வியாபாரச் சங்க நிர்வாகச் சபை அங்கத்தினனாக இருந்தவன்; 5 ஜில்லாவுக்கு இன்கம்டாக்ஸ் டிரிபியூனல் கமிஷனர்கள் மூவரில் ஒருவனாக இந்திய கவர்மெண்டாரால் நியமிக்கப்பட்டவன் ; ஈரோடு டவுன் ரீடிங் ரூம் செக்ரட்டரி; பிறகு தலைவர்; 1914ஆம் ஆண்டு நடந்த கோவை ஜில்லா காங்கிரஸ் மாநாடு செக்ரட்டரி; 10 ஆண்டு ஆனரரி மாஜிஸ்ட்ரேட்; ஈரோடு தாலுக்கா போர்டு பிரசிடெண்ட்; பல வருடங்கள் ஈரோடு முனிசிபல் சேர்மன்; ஜில்லா போர்டு மெம்பர்; வாட்டர் ஒர்க்ஸ் கமிட்டி செக்ரட்டரி; பிளேக் கமிட்டி செக்ரட்டரி ; கோவை ஜில்லா 3வது சர்க்கிள் தேவஸ்தான கமிட்டி செக்ரட்டரியாக 10 ஆண்டு பிறகு, 1929 வரை வைஸ்பிரஸிடெண்ட்; பிரசிடெண்ட்.

ராக டி.எஸ். எஸ். ராஜன், கே. சந்தானம், எஸ். ராமநாதன், கே. எம். தங்கப் பெருமாள், அய்யாமுத்து முதலியவர்கள் இருந்தார்கள்.

இவைகள் ஒருபுறமிருக்க, 1940, 1942ல், 2 வைஸ்ராய்கள், 2 கவர்னர்கள், என்னை அழைத்து மந்திரி சபை அமைக்க வேண்டினார்கள். ராஜாஜியும் வேண்டினார். நான் மறுத்து விட்டேன்.

1919 ஜூலையில் நான் ஜில்லா, தாலுக்கா போர்டு மெம்பர், சேர்மென் முதலிய பதவியை ராஜிநாமா கொடுத்த காரியம் பேப்பரில் வெளியானவுடன் லோகல் அண்டு முனிசிபல் போர்டு, கவுன்சில் மெம்பர் பி. ராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஈரோடு வந்து, ''என்ன ராமசாமி நாயக்கரே! இப்படி முரட்டுத் தனமான வேலை செய்து விட்டீரே! உமக்குப் புத்தியில்லையா?'' என்றார். அவர் பக்கத்தில் கெரோசின் ஆயில் டீலர்ஸ் ஏஜெண்ட் கோவிந்தாச்சாரி இருந்தார்.


உடனே நான் வணங்கி, ''நான் என்ன செய்துவிட்டேன்?'' என்று கேட்டேன். அவர் தனது மனைவியைப் பார்த்து, ''அம்மா இவருக்குச் சொல்லு'' என்று சொல்லிவிட்டு மௌனமாக இருந்து விட்டார்.



# பெரியார் பற்றி பெரியார்

1918ஆம் ஆண்டு உலக யுத்தத்தில் ஆனரரி ரெக்ரூட்டிங் ஆஃபீசர்; 1918ஆம் ஆண்டு யுத்தத்தில் தாலுக்கா, ஜில்லா அரிசி கண்ட்ரோலில் கவர்ன்மெண்ட்டாரின் நிர்வாகி; அரிசி வாகன்களின் ரசீதுகளை வாரம் ஒவ்வொரு தாலுக்காவிலிருந்தும் 15, 20 டன் வீதம் எனக்கே கொடுத்து, மற்ற வியாபாரிகளுக்கு விநியோகிக்கும்படி ஜில்லா கலெக்டர் கேட்டுக் கொள்ளும் டிஸ்ட்ரிபியூட்டிங் ஆஃபீசர்; கார்னேஷன் கமிட்டி செக்ரட்டரி; காங்கிரசிலும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி செக்ரட்டரி; தலைவர்; காதி போர்டு (ஃபவுண்டர்) அமைப்பாளராக இருந்ததோடு; 5 வருடம் தலைவராக இருந்தபோது எனக்குச் செயலாள

அந்த அம்மையார், ''அய்யர் உங்களுக்கு நீங்கள் உங்கள் முனிசிபாலிடியில் தண்ணீர்க் குழாய் ஏற்படுத்தியதற்காக ''ராவ் பகதூர்'' கொடுப்பது என்று சிபாரிசு பண்ணியிருக்கிறார். உங்கள் கலெக்டர் ''ராவ் சாகிப்'' தான் சிபாரிசு செய்தார். அய்யர் ''ராவ் பகதூர்'' என எழுதி கவர்னருக்கு ஃபைல் போய் இருக்கிறது. நீங்கள் இப்படி அய்யருக்கு அவமானம் செய்து விட்டீர்களே; இது சரியில்லை'' என்று சொன்னார்.



# பெரியாரின் நாட்டுப்பற்று !


ஈரோட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமி மது விலக்கு சம்பந்தமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில் அங்கு நடைபெற்ற மது விலக்குப் பணிகளை காந்திஜி பாராட்டியிருக்கிறார். ''சென்னையும், ஆந்திராவும் மெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. வங்கத்தைப் போன்று அங்கும் 1,500 பேர் கைதானால் நான் வியப்படைய மாட்டேன். மதுவிலக்கில் ஈரோடு மட்டும் அஞ்சாது பணியாற்றி வந்திருக்கிறது. அதனால் இராமசாமி நாயக்கருக்கு ஒரு மாதச் சாதாரணச் சிறைத்தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது. இந்தச் சிறிய ஊரில் மட்டும் ஏற்கெனவே 37 பேருக்குத் தண்டனை கிடைத்து விட்டது. இப்போது நாயக்கரின் மனைவி யாரும் அவருடைய சகோதரியும் மறியல் செய்யப் போகிறார்கள்'' என்று, அண்ணல் (2?.12.1921-ல் வெளியான) ''யங் இந்தியா' இதழில் எழுதினார்.

முக்கியமான தமிழக தேச பக்தர்கள் மீது வழக்குத் தொடரப் பெற்று வந்த காலம் 1924 ஜூன். அவ்வாறு வழக்குத் தொடரப் பெற்றவர்களில் பெரியார் ஈ. வெ. இராமசாமி ஒருவர். பம்பாய்க்குச் சென்றிருந்த ராஜாஜி, பெரியார் ஈ. வெ. இராமசாமி மீது தொடர்ந்த வழக்கு விசாரணை அக்டோபர் 18-ஆம் தேதியன்று வருகிறது என்பதற்காக, அவசரமாகத் திரும்பி வந்தார். தேவதாஸ் காந்தி, மேலும் ஒரு நாள் தங்கியிருந்து விட்டுப் போகுமாறு சொன்னதைக் கூட அவர் ஏற்கவில்லை. சென்னைக்கு நான் 18-ஆம் தேதி போயாக வேண்டும். அன்றுதான் இராமசாமி நாயக்கரின் வழக்கு இறுதி விசாரணை. அவர் மீது அரசத் துரோகக் குற்றம் சாட்டப் பெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு நீண்ட காலச் சிறைத் தண்டனை கிடைக்கலாம். எங்களுடைய காங்கிரஸ் நடவடிக்கைகளுக்குத் தீவிரம் நிறைந்த தலைவராக (Head and active master) அவர் இருந்து வந்திருக்கிறார்'' என்று ராஜாஜி இரயிலிலிருந்து 16.10.1924-ஆம் தேதி காந்திக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.



நான் பல காரணங்களைக் கூறி மறுத்து நான் காங்கிரசுக்கு விரோதி என்று ஆன பிறகும் கூட, ஆச்சாரியார் என் வீட்டிற்கு வந்தும் என்னை (காங்கிரசில் சேராமல், கதர் போடாமல்) சட்டசபைக்கு நாமினேஷன் போட ஃபாரம் நீட்டிக் கையெழுத்துக் கேட்டார். நான் மறுத்துவிட்டேன். 41ல் மந்திரி சபை அமைக்க ஒப்புக்கொள்ளும்படி சொன்னார். நான் கவர்னர், கவர்னர்-ஜெனரல் ஆகியவர்கள் இடமெல்லாம் மந்திரி சபை அமைக்க மறுத்துவிட்ட பிறகு, என்னை அழைத்து மந்திரி சபை அமைக்கும்படியும், நான் விரும்பினால் காங்கிரசு ஆதரவு தருவதாயும் சொன்னார். நான் மறுத்து விட்டேன்.

போதும், இவ்வளவு எடுத்துக் காட்டுவதற்கே நான் மிக மிக வெட்கப்படுகிறேன். இருந்தாலும் நான் ஏன் 'வெட்கம்' என்பதை விட்டு விட்டு இவ்வளவு எடுத்துக் காட்டுகிறேன் என்றால், அயோக்கியனாய் வாழ வேண்டிய அவசியம் எனக்கு எந்தக் கட்டத்திலும் வந்ததில்லை என்பதைக் காட்டவேயாகும்.




எல்லாத் துறைகளிலும் குறையாத அனுபவமும் திறமையும் உண்டு என்பதைக் கூறவுமேயாகும். ஒன்றை ஒப்புக் கொள்ளுகிறேன். அதாவது, நான் பல விஷயங்களில் அறிவுக் குறைவு உள்ளவனாக இருக்கக் கூடும்; பல தவறுகள் செய்திருக்கக் கூடும்; இன்றைய கருத்தில் இருந்து நாளை மாறுதல் அடையக் கூடும்; பல கருத்துக்களை மாற்றியும் இருக்கிறேன். இவைகள் எல்லாம் எனது கண்ணியமான அனுபவம், ஆராய்ச்சியைக் கொண்டே இருக்குமே தவிர, பணம் சேர்க்கவோ, பதவி பெறவோ, வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவோ, பெரிய ஆள் ஆகவோ, இழிவை மறைத்துக் கொள்ளவோ கடுகளவுகூடக் காரணம் கொண்டதாய் இருக்காது.

அதாவது, ஒரு பண்டம் கை நழுவி விழுந்து உடைந்து போவதற்கும், உடைக்க வேண்டுமென்றே கருதி கீழே போட்டு உடைப்பதற்கும் உள்ள பேதம் போன்றதாகும்.

இப்படிப்பட்ட என்னை இந்நாட்டு விடுதலைக்குக் குறுக்கே இருந்தவன், துரோகம் செய்தவன் என்று சொல்லும்போது எவ்வளவு மனம் உரம் இருந்தாலும் நிதானம் தவறத்தான் தூண்டுகிறது. அந்த நிதானம் தவறிய சொற்கள்தான் மேலே என்னைப் பற்றிக் குறிப்பிட்டவையாகும். பொறுத்தருள்க!

'தமிழர் தலைவர்' என்னும் நூலிலிருந்து

# தமிழ்ப் பெரியார்



— வ.ரா.

“பயபக்தியுடனிரு, பழக்கத்தை விடாதே, பெரியார் சொல் கேள்'' — இவைகள் நல்ல புத்திமதிகள்தான். ஆனால், இவைகள் தமிழர்களை எந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டன என்பதை, மனம் பதைக்காமல், எழுத்தில் எழுத முடியாது. தமிழர்கள் அனைவரும் ஒருகாலத்தில் ''இடித்த புளிகளாக'' விளங்கினார்கள் என்பதில் சந்தேகமே இல்லை. அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற ஏழைகளாய் ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தில் ''அடிதெரியும்படி'' கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாயக்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்....

நாயக்கரின் அழகு பிரசங்கத்தை, ஆணித்தரமான சொற்களை, அணியணியாய் அலங்காரம் செய்யும் உபமானங்களை, உபகதைகளை அவரது ''கொச்சை'' தமிழ் வார்த்தை உச்சரிப்பை, அவரது வர்ணனையை, உடல் துடிதுடிப்பை, பார்க்கவும் கேட்கவும் எவ்வளவோ தூரத்திலிருந்து ஜனங்கள் வண்டுகள் மொய்ப்பது போல, வந்து மொய்ப்பார்கள்!

இலக்கணம், சந்தி, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாயக்கர் அவர்களைக் கண்டு நடுங்கவேண்டுமே யொழிய, அவைகளை லட்சியம் செய்பவர் நாயக்கர் அல்ல. அவர் இயற்கையின் புதல்வன், மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாயக்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் போன்றது என்பதில் சந்தேகமில்லை....

எதற்கெடுத்தாலும், ''எங்களது தகப்பனார், எங்கள் பாட்டனார், எங்கள் மூதாதை'' என்று அசட்டு நாடகப் பாத்திரத்தைப் போல உளறிக் கொண்டிருந்தால், தமிழர்கள் ''இக்கரை கடந்து அக்கரை'' சேர்வது எக்காலம்? தனக்குத்தானே யோசிக்கும் பொறுப்பையும் திறமையும் தமிழர்களின் உள்ளத்தில் ஓரளவு (அதை பெரிய அளவு என்று கூடச் சொல்லலாம்) தூண்டிய ராமசாமி நாயக்கரை பெரியார் என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை....

தமிழ்நாட்டின் வருங்காலப் பெருமைக்கு நாயக்கர் அவர்கள் ''முன்னோடும் பிள்ளை'' தூதுவன். வருங்கால வாழ்வின் அமைப்பு அவர் கண்ணில் அரைகுறையாகப் பட்டிருக்கலாம். (எவர் கண்ணிலேனும் அது முழுமையாகப் பட்டிருக்கிறதா, யார் உறுதியாகச் சொல்ல முடியும்?) ஆனால் மலைகளையும் மரங்களையும் வேரோடு பிடுங்கி யுத்தம் செய்த மாருதியைப்போல, அவர் தமிழ் நாட்டின் தேக்கமுற்ற வாழ்வோடு போர்புரியும் வகையைக் கண்டு, நாம் வியப்படையாமலிருக்க முடியாது....

('தமிழ்ப் பெரியார்கள்' என்ற நூலிலிருந்து)

### 'பெரியார்' என்ற பெயர் எப்படி வந்தது?

1938-ஆம் ஆண்டு சென்னை பெத்துநாயக்கன் பேட்டையில் மகளிர் கழகம் நடத்திய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டத்தை வீராங்கனை டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் அவர்கள் பெரியாருக்குச் சூட்டினார்கள்.

தகவல் :
மயிலை. சிவ. மாசிலாமணி.





# முதல் சந்திப்பு

பெரியார் நிமிர்ந்து பார்த்தார். தமக்கு முன் வந்து நின்ற இளைஞனின் எழுச்சியையும் ஏதோ சொல்லத் துடிக்கும் ஆர்வத்தையும் கண்டு கொண்டார்.

"தம்பி, உன் பேரென்ன?"

"அண்ணாதுரை."


"என்ன செஞ்சிக்கிட்டிருக்கே?"

"கல்லூரியில் படிக்கிறேன்; பரீட்சை எழுதியிருக்கேன்."

"படிப்பு முடிஞ்சதும் உத்தியோகம் பார்க்கபோறியா?"

"ஆமாம். அதுக்குத்தான் படிக்க வச்சிருக்காங்க. வேறு எதுக்காகப் படிக்கிறதுங்க?' என்று அண்ணா திரும்பித் தம்மைக் கேட்பார் எனப் பெரியார் எதிர்பார்த்தார். ஆனால், பதில் வேறுவிதமாக வந்தது. "உத்தியோகம் பார்க்க விருப்பமில்லே!"

பதில் கேட்டு பெரியார் பிரமித்தார். விழிகளில் வியப்பு படர, பார்வையில் புதுமை மலர இளைஞர் அண்ணாவை அன்போடு நோக்கினார். "இந்த நாளில் இப்படி ஓர் இளைஞனா? படிப்பது உத்தியோகம் பார்ப்பதற்காக அல்ல என்று ஆணித்தரமாக அறிவிக்கிறானே? தெளிவாகத் தெரிவிக்கிறானே?"



அண்ணாவின் பேச்சும், துடிப்பும், குரலும் கேள்விக்குத் தங்கு தடையின்றி வருகிற பதிலும் பெரியாரை மிகவும் கவர்ந்தன. அன்று எத்தனையோ அலுவல்கள் அவருக்கு இருந்தும், அண்ணாவோடு மேலும் பேச வேண்டும் என்றே பெரியாருக்குத் தோன்றியது.

"அப்படியானா, படிப்பு முடிஞ்சதும் என்ன செய்யப் போவதா உத்தேசம்?"

"பொது வாழ்வில் ஈடுபடப் போகிறேன் ஐயா!"

அண்ணா அப்படிச் சொன்னதும் பெரியாரின் பற்கள் தாடிக்கு வெளியே வெள்ளையாகத் தெரிந்து முறுவல் காட்டின. அருகில் நின்றிருந்த அண்ணாவை அன்போடு இழுத்துத் தம்மோடு அணைத்துக் கொண்டார்.

"இங்கே 'செங்குந்தர் இளைஞர் மாநாடு' கூட்டியிருக்கேன். மாநாடு நடத்திய பலனை இப்பவே கண்டுட்டேன். தம்பி, ஒன்னைப் போல இளைஞருங்க தான் இப்படி வலியப் பொது வாழ்வுக்கு உற்சாக வெள்ளமாகப் புரண்டு வரணும். நீயும் வா! வா!" என்ற வாயார வரவேற்றார் பெரியார்.

1935-ஆம் ஆண்டில் திருப்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. எத்தனையோ தேசிய, அரசியல் எழுச்சிகளுக்கு இடம் கொடுத்த திருப்பூர், பெரியார்—அண்ணா சந்திப்புக்கும் காரணமாக இருந்தது. அந்தச் சந்திப்புதான் அண்ணாவின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் தந்தது. அன்று முதல் பெரியார்—அண்ணாவின் அரசியல் குருவானார்; தந்தையானார்; தலைவரானார்.

—'அண்ணாவின் கதை'
தினமணி கதிர்

# எங்கள் குடும்பத் தலைவர்



திருமதி ஈ. வி. கே. சுலோசனா சம்பத்

பெரியார் எங்கள் குடும்பத்தின் 'சம்பந்தி' ஆவதற்கு முன்பே என்னுடைய தந்தைக்கும் (மறைந்த வழக்கறிஞர் திரு ஜி. சாமி நாயுடு) அவருக்கும் நெருங்கிய 'சம்பந்தம்' உண்டு. எப்படியென்றால் எனது தந்தை வட ஆர்க்காடு மாவட்டத்தில் நீதிக் கட்சிப் பிரமுகர். பெரியார் நீதிக் கட்சித் தலைவராக எங்கள் திருப்பத்தூருக்குப் பிரச்சாரத்திற்கு வந்த போதெல்லாம் எங்கள் வீட்டில் தான் தங்குவார். அப்போது எனக்கு 6 அல்லது 7 வயதிருக்கும். பெரியார் வந்ததை அறிந்ததும் ''தாத்தா, தாத்தா'' என்று அவரைச் சுற்றிச் சுற்றி வருவேன்.

என்னுடைய தந்தையாருக்கும் பெரியார் மீதிருந்த மரியாதை அளவிடற்கரியது. அத்தகைய குடும்பத்தில் பிறந்து வளர்ந்த எனக்குச் சிறு வயது முதற்கொண்டு பெரியார் மீது தனிப் பாசமும், ஒரு வித பயபக்தியும் இயல்பாகவே நிறைந்திருந்ததில் வியப்பில்லை. ஆனால், அதிசயமான நிகழ்ச்சி—யாருமே எதிர்பாராத நிகழ்ச்சி அது—பெரியாரின் மருமகளாகவே ஆகும் பெரிய பேறு எனக்குக் கிடைத்தது. அதை நினைக்க நினைக்க எனக்கு எப்பொழுதுமே பெருமிதமும் ஈடில்லாத மன நெகிழ்ச்சியும் ஏற்படுவதுண்டு. குழந்தைப் பருவம் முதற் கொண்டே எனது தந்தையின் தனிப் பெருந் தலைவராக, எங்கள் சுயமரியாதைக் குடும்பத்தின் தலைவராகப் பார்த்துப் பார்த்துப் பழகிய எனக்கு, பின்னால் அவருடைய மருமகளாக ஆகிவிட்ட பிறகும் கூட, அவரைப் பார்க்கும் போதெல்லாம் அவருடைய எண்ணற்ற தொண்டர்களில் ஒருவளாகத்தான் நான் அவரிடம் நடந்து கொள்வேன். ஆனால், அவரைப் பொறுத்த அளவில் எப்போதுமே குடும்பப் பாசத்துடன் தான் என்னை நடத்துவது வழக்கம்.


பொது வாழ்வில் என்னுடைய துணைவரும் பெரியாரும் வெவ்வேறு திசைகளில் சென்றுவிட்ட போதிலும், சில ஆண்டுகள் என்னுடைய துணைவர் அவரைச் சந்திக்காமலேயே இருந்த போதிலும் கூட, நான் மட்டும் அவ்வப்பொழுது பெரியாரைப் போய்ப் பார்த்து விட்டு வருவது வழக்கம். இதற்கு என் துணைவர் குறுக்கே நின்றதில்லை. அப்போதெல்லாம் அதே பாசத்தைத் தான் பெரியார் காட்டி வந்தார்.

எங்கள் குடும்ப நிகழ்ச்சிகள் எதுவாயிருந்தாலும், பெரியார் இருந்தது வரையில், அவர் முன்னிலையில்—அவர் தலைமையில் தான் நடப்பது வழக்கம். தமிழ் இனத்தின் தனிப் பெருந் தலைவர்—எங்கள் குடும்பத் தலைவராக இருந்து விழாவை நடத்துவதை விட வேறு பெருமை எங்களுக்கு என்ன இருக்க முடியும்?

பெண்கள் நகை மாட்டும் Stand என்று என் திருமணத்தில்தான் பெரியார் பேசினார். என்னுடைய மூத்த மகள் நாகம்மாள் — வெங்கடேஷ் திருமணத்தைப் பெரியாரே முன்னின்று நடத்தியது மட்டுமல்ல; அவளுக்கும் குழந்தை பிறந்த போது, குழந்தையைப் பார்க்க எங்கள் வீட்டிற்கு வந்தார். குழந்தையை மடிமேல் வைத்துக் கொண்டு தன்னுடைய சட்டைப் பையில் கை விட்டு ஒரு பொட்டலத்தை எடுத்துப் பிரித்தார். அதிலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்துக் குழந்தைக்குப் போட்டார். என்னுடைய பேத்திக்கு, அதாவது தந்தை பெரியாரின் கொள்ளுப் பேத்திப் பெண்ணுக்கு, அவரே 3 பவுன் சங்கிலியை அணிவித்தது எங்களையெல்லாம் திடுக்கிட வைத்தது—பூரிக்கவும் வைத்தது! அந்தக் காட்சி நெஞ்சத் திரையில் இன்னும் பசுமையாகச் சுடர் விட்டு நிற்கிறது!

இன்னொரு நிகழ்ச்சி — நான் மறக்க முடியாதது. அது 1973ல் நடந்தது. திண்டுக்கல்லில் இடைத் தேர்தலுக்கு சில நாட்கள் முந்தி! திண்டுக்கல் தேர்தலின் போது, முற்போக்குக் கூட்டணி ஒன்றை உருவாக்க, எனது துணைவர் அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார். வெண்ணெய் திரண்டு வந்த சமயம் தாழி உடைந்த





திருமதி. சுலோசனா சம்பத், திரு. ஈ.வி.கே. சம்பத், தந்தை பெரியார், மணியம்மையார்.

கதையைப் போல, அவருடைய முயற்சிகள் குலைந்து போனதால் பெருத்த அதிர்ச்சிக்குள்ளானார்; அந்த அதிர்ச்சியே அவருக்கு முதன் முதலாக நெஞ்சு வலிக்கு வித்தாகிவிட்டது. ஆபத்தான நிலையில் அரசினர் மருத்துவ மனையில் இருதய நோய்ப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். ஒவ்வொரு நாளும் ஒரு யுகம் போலக் கழிந்து வந்த சமயம் அது. அப்பொழுது பெரியார் உடல் நலம் குன்றி, குற்றாலத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். இச் செய்தி, அறிந்தவுடனே, மனம் பதறி நாள்தோறும் தவறாமல் தொலைபேசியில் தனது மகனின் உடல் நிலையைக் குறித்து விசாரித்து வந்தார். நான்கைந்து நாள் கழிந்த பிறகு அவருடைய மருத்துவர்களின் ஆலோசனையைப் புறக்கணித்து விட்டு, நேராகச் சென்னைக்கு வந்தார். தமது தள்ளாத வயதில், உடல் நிலை குன்றியிருந்த நிலையிலும், மருத்துவமனைக்கு வந்து என்னுடைய துணைவரின் படுக்கை அருகே விரைந்து வந்து படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த தன் தனயனைச் சுமார் ஐந்து நிமிட நேரம் வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் — அவருடைய கண்கள் பனித்தன! அது எங்கள் எல்லோரையும் உருக்கிவிட்டது. இதை என்னால் என்றும் மறக்க முடியாது.




என்னைப் போன்ற பேறு பெற்றவர்கள் இருக்க முடியாது; சுயமரியாதைக் குடும்பத்தில் பிறந்தேன். சுயமரியாதை இயக்கத் தந்தையின் மகனை மணந்தேன். என் துணைவர், தென்னாட்டின் தனிப் பெருந் தலைவரின் மகன் மட்டுமா? 'சொல்லின் செல்வர்' என்று தமிழ் மக்கள் அவரை வாயார வாழ்த்தினார்கள். ''அற்புதமான அரசியல்வாதி'' என்று அரசியல் உலகம் அவரை ஒருமித்துப் பாராட்டியது.

இப்பொழுது அவரும் இல்லை; பெரியாரும் இல்லை. இந்நிலையில் பழைய நிகழ்ச்சிகளை—குறிப்பாக எங்கள் குடும்பத்தின் தலைவராக பெரியார் இருந்து நடத்திய நிகழ்ச்சிகளை—மீண்டும் நினைவுக்குக்கொண்டு வருவதன் மூலம் ஏற்படுகின்ற புதிய சக்தியே, அவர்கள் இருவரும் இல்லாததை நான் தாங்கிக் கொள்ளச் செய்கிறது!



# உலகப் பெரியார்



திருமதி சிவகாமி சிதம்பரனார்

தந்தை பெரியார்! இந்தச் சொல் சுயமரியாதை இயக்கத்தில் பங்கு கொண்டு, ஒன்றுபட்டு, இயக்கத்தில் ஈடுபட்ட, அனைத்து மக்களின் உள்ளங்களிலும் ஒலித்துக் கொண்டிருக்கும் தாரக மந்திரம்! சக்தி வாய்ந்த பெரியார் என்ற வாசகம்! மக்களை மூட பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை பெறத் தட்டி எழுப்பும் உள்ளமெலாம் நிறைந்த சக்தி மிக்க சொற்களாகும். தந்தை பெரியார் என்ற பேரமுதச் சொற்கள்!

தந்தை பெரியார் என்ற சொல்லினிலே, அவர் தம் பேச்சினிலே, ஒவ்வொருவர் மூச்சினிலும் சக்தி பிறக்கும்; தந்தை பெரியார் என்ற இந்தச் சொல்லின் சிறப்பினுலேயே ''அவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்'' என்பது தெற்றென விளங்கும்.

**ஈடு இணையில்லா எளிய சொற்பொழிவு :**

தந்தை பெரியார் 1927ஆம் ஆண்டு ஆரம்பித்த சுயமரியாதை பிரச்சார இயக்கம் இந்தியாவில்—தமிழகத்தில் அர்த்தமற்ற மூடப் பழக்கங்களால் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களைப் பகுத்தறிவு பெறச் செய்து, சாதி, மத, உயர்வு, தாழ்வுகளில் இருந்து விடுதலை பெறச் செய்தது. துணிச்சலான—மிகத் துணிச்சலான பேச்சும், புரட்சிஎழுத்தும், ஐயா அவர்களின் இடைவிடாத பெருந் தொண்டும், பொது மக்களை, மதவாதிகளால் நசுக்கப்பட்ட மக்கள் சமூகத்தை; அவர் தம் கொள்கையின்பால் ஈர்க்கச் செய்தது. சமூகத்தில் ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட பாமர மக்களும் தந்தை பெரியார் வகுத்த கொள்கைப் பாதையில் நூறுயிரக் கணக்கில் ஒன்று சேர்ந்தார்கள்.

**மகளிர் நல்வாழ்விற்கு**

ராஜாராம் மோஹன்ராய் அவர்கள் தன் குடும்பத்தில் நடந்த ''உடன் கட்டை'' ஏறும் பழக்கம் என்னும் படுகொலையை நேரில் கண்டு உள்ளம் கொதித்து அந்த வழக்கத்தை நாட்டில்நடைபெருமல் நிறுத்தப் பாடுபட்டு வெற்றி கண்டார்.

தந்தை பெரியார் அவர்கள் '-உடன்கட்டை'' ஏறுவதைத் தடுத்ததோடு மட்டும் விட்டுவிடாமல், தமிழகத்தில் பெண்கள் சமுகத்திற்கே புரட்சிகரமான பல திருத்தங்கள் கொண்டு வந்தார். பெண்களுக்கு மறுமணம்; பால்ய மணம் ஒழிப்பு, ஆண்-பெண் சம கல்வி; பெண்களுக்கும் சொத்துரிமை; வேலை வாய்ப்பில் முதலிடம் என்ற மாபெரும் புரட்சித் திட்டங்களைக் கொண்டு வந்து அந்தக் காலத்திலேயே பலத்த எதிர்ப்புக்களையும் வென்று போராடி வெற்றியும் பெற்ருர். பெண்களின் மறுமணங்களை; சாதி மத பேதமற்ற பல ஆயிரம் கலப்புத் திருமணங்களை நடத்தியும், கண்டும் மகிழ்ந்தார்.

**சித்தர்கள் வரிசையின் தந்தை பெரியார் :**

சாமி. சிதம்பரஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடன் சீர்திருத்தக் கொள்கையில், பகுத்தறிவு, சுயமரியாதை இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்தி ஒன்று சேர்ந்து இணைந்திராவிட்டால் இன்று ஒரு சாதாரணப் புலவராகவே புதுமைக் கருத்தின்றி, புராணப் புலவராகவேதான் வாழ்ந்திருப்பார்கள்; இன்று தமிழக சித்தர்கள் முதல், வடலூர் வள்ளலார் வரையில், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலிய சமயக் குரவர்களின் அருள் நெறி பற்றி மிக அற்புதமாக — பகுத்தறிவு நோக்கில் ஆராய்ந்து, இறைவனடியார்கள் பக்தியை மட்டும் போதிக்க்வில்லை; மக்களிடம் அன்பு, உயிர்களிடம்



கருணை, எல்லோருக்கும் நல் வாழ்வு, நல்ல சிந்தனை, நல்ல வற்றையே நாடுதல் போன்ற சிறந்த அறங்களை ஆங்காங்கே ஆணித்தரமாக எழுதியுள்ளார்கள் என்பதையும் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார்கள். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன்'' என்பதுதான் சமயக் குரவர்களின் உள்ளக் கிடக்கை என்பதையும் தெளிவாக எடுத்துக் காட்டி எழுதியுள்ளார். மேலும், அவர்கள் இயற்றிய பாடல்களில் காணும் பகுத்தறிவு நிறைந்த கருத்துக்களை அலசி ஆராய்ந்து உள்ளது உள்ளபடியே எடுத்துக் காட்டி விளக்கி பல சிறந்த ஆராய்ச்சி நூல்களை எழுத முடிந்தது என்று கூறினால் அது மிகையாகாது! உதாரணத்திற்கு ஒரு பாட்டு இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அவர்கள் எழுதிய ''சித்தர்கள் கண்ட விஞ்ஞானம்—தத்துவம்'' என்ற நூலில் பாம்பாட்டிச் சித்தர் பாடலில் ''சாதிப் பிரிவினிலே தீ மூட்டுவோம்! சந்தை வெளியினில் கோல் நாட்டுவோம்!'' என்ற வரிகளில் காணும் கருத்து. இதனால் சிவவாக்கியர் சாதி வேற்றுமையை எவ்வளவு மிகுதியாக வெறுக்கிறார் என்பதைக் காணலாம். மனித சமூக ஒற்றுமையிலே அவருக்கு இருக்கும் ஆர்வத்தையும் அறியலாம் என்று எழுதியுள்ளார்.

**இந்தியாவில் இணையற்ற தலைவர்:**

சாமி. சிதம்பரனார் அவர்கள் 1939ஆம் ஆண்டு எழுதிய 'தமிழர் தலைவர் தந்தை பெரியார் அவர்களின் வாழ்க்கை வரலாறு' நூலில் எழுதியுள்ள முன்னுரையில் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார். ''பெரியார் ஈ. வெ. ரா. அவர்களைப் பற்றி அறியாதவர்கள் எவரும் இலர். ஒவ்வொரு துறையிலும் அவர் மிக முற்போக்கான கருத்துடையவர். மதத் துறையில் அவர் கருத்து மிக முற்போக்குடையது'' மதம் மக்களுடைய அறிவைத் தடைப்படுத்தக் கூடாது. உரிமையைப் பறிமுதல் செய்யக் கூடாது. மதத்தின் மூலம் ஒருவரை ஒருவர் ஏமாற்றுவதற்கு இடமிருக்கக்கூடாது. மக்கள் அனைவரும் ஒன்றென்னும் உண்மை நிலவ வேண்டும். இவை வாயளவில் அல்லது நூலளவில் இருத்தல் போதாது. நடைமுறையில் இருக்க வேண்டும். இக்கொள்கைகளுக்கு ஆதரவு தருவது மதமாயினும் சரி, அல்லது அரசியலாயினும் சரி, அல்லது வேறு எதுவானாலும் சரி, அவைகளை வரவேற்க வேண்டும்''. இக்கருத்து பெரியாருக்கு உண்டு. தன் மதத்தில் வெறியும், பிற மதத்தில் வெறுப்பும் உடையவர்களுக்கு இக்கொள்கை நஞ்சாக இருக்கும். ஆதலால், பெரியாரை மதத் துரோகி என்றும், நாத்திகர் என்றும் தூற்றுவோர் ஒரு சிலர்.

சமூகத் துறையிலும் பெரியார் கருத்து மிக முற்போக்கானது. '-இப்போதுள்ள சமூக அமைப்பு, பல பிரிவினைகளுக்கு இடமானது; உயர்வு தாழ்வுகளுக்கு அடிப்படையானது; சண்டை சச்சரவுகளுக்குக் காரணமானது; மக்களுக்குள் ஒற்றுமை, தோன்றுவதற்கு இடமளிக்காதது; பிற நாட்டினர் ஆதிக்கம் செலுத்துவதற்கு வழி கோலியது. ஆதலால் இப்பொழுதுள்ள சமூக அமைப்பு அடியோடு மாற வேண்டும். மக்களெல்லாம் ஒரு குலம் ஆகும்படியான புதிய சமூகமாக மாற வேண்டும்'' என்னும் கருத்துடையவர் பெரியார்.

அரசியல் துறையிலும் இவருடைய போக்கு மிக முற்போக்கானது. 'சமதர்மமே எனது அரசியல் நோக்கம்' என்று கூறினார். இக்காரணத்தால் பணக்காரர்கள் இவரை வெறுக்கின்றனர். முதலாளித்துவத்தை நிலைக்க வைக்க விரும்பும் தேசியவாதிகள் இவரை வெறுக்கின்றனர்.

மதம், சமூகம், அரசியல் ஆகிய மூன்றிலும் பெரியார் ஒரு புரட்சிக்காரராக விளங்குகிறார். பெரியார் ஒரு மதவாதியாக இருந்து பின்னர் மதப் புரட்சிக்காரராக மாறவில்லை. பிறப்பிலேயே மதப் புரட்சிக்காரராகப் பிறந்தார். சமூகப் புரட்சிக்காரராகப் பிறந்தார்; சமதர்மவாதியாகப் பிறந்தார்.

தன் கொள்கையை விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இவரிடம் எப்பொழுதும் இருந்தது இல்லை. தன் கொள்கைக்குப் பிறர் இணங்கி வரவேண்டும்; பிறர் கொள்கைக்கு இவர் இணங்கவே மாட்டார். ஒரு சீர்திருத்தவாதிக்கு இருக்கவேண்டிய குணம் இதுவே. புத்தர், சாக்ரடீஸ், கன்ஃபூஷியஸ், ஏசு கிருஸ்து, முகம்மது நபி போன்ற பெரியார்கள் தங்கள் கொள்கைகளில் வெற்றி பெற்றதற்கு இதுவே காரணம். அவர்கள் பகைவர்களால் பல துன்பங்களுக்கு ஆளாகியும், தங்கள் கொள்கைகளில் எள்ளளவும் விட்டுக் கொடுக்காத உறுதி உடையவர்களாய் இருந்தனர். இன்றைய சீர்திருத்தவாதிகளில் இத்தகைய உறுதியுடையவர் பெரியார் ஒருவரே. ஆதலால், இவர் உலகப் பெரியாராவர்!



நமது மாபெரும் தலைவர் பெரியார் தமக்குச் சரியெனப் பட்டதை எவருடைய தயவு தாட்சண்யத்திற்கும் கட்டுப்படாது, பட்டவர்த்தனமாகச் சொல்லுவார். அது மற்றவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ அதைப் பற்றி அவருக்குக் கவலையே கிடையாது. தம் கருத்தைப் பற்றி மற்றவர்கள் என்ன எண்ணுவார்களோ என்ற பயம், அவருக்கு இருப்பதே இல்லை.

பெரியார் தாம் நினைத்ததைச் சாதிக்கும் ஒரு நேர்மைவாதி. அவருடைய அபிப்பிராயங்கள் ஆணித்தரமானவை. ஆனால், அவர் பிடிவாதக்காரரல்ல. தம் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக, நேர்மையான வழியிலேயே பாடுபடுவார்.

—சர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம்





# தந்தை பெரியாரின் வாழ்க்கைக் குறிப்புகள்



***17—9—1879 :—***

ஈரோட்டில் மண்டி வெங்கட்டப்ப நாயக்கர்-சின்னத் தாயம்மை ஆகியோரின் நான்காவது மகவாகவும், இரண்டாவது மகனாகவும் தோன்றினார்.

***6-ஆம் வயதில் :***

திண்ணைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்.

***9-ஆம் வயதில் :***

துவக்கப் பள்ளியில் பயில அனுப்பப்பட்டார்.

***11-ஆம் வயதில் :***

பள்ளிப் படிப்பை விட்டு நிறுத்தப்பட்டார்.

***12-ஆம் வயதில்:***

மண்டிக் கடை வாணிபத்தில் ஈடுபடுத்தப்பட்டார்.

***19-ஆம் வயதில்:***

13 வயது நாகம்மையைத் (சேலம் தாதம்பட்டி) திருமணம் புரிந்தார்.

***21-ஆம் வயதில்:***

ஒரு பெண் மகவுக்குத் தந்தையானார்; அக் குழந்தை 5 மாதத்தில் இறந்தது. பின்னர் குழந்தையே இல்லை.

தம் வாணிபத்தில் தொழிலாளர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுத்து அவர்களைப் பங்குதாரர்களாக ஆக்கினார்.

***25-ஆம் வயதில் :***

தந்தையார் கண்டிப்புக்கு அஞ்சித் துறவு பூண்டு, காசி, கல்கத்தா முதலான இடங்களுக்குச் சென்று, பின் தந்தையாரால் அழைத்து வரப்பட்டார்.

'வெங்கட்டப்ப நாய்க்கர் மண்டி' ஈ. வெ. இராமசாமி நாயக்கர் மண்டி' என்று ஆயிற்று.

***1907 :***

காங்கிரஸ் இயக்கத்தில் நாட்டங் கொண்டார்.

***1908 :***

காங்கிரஸ் மாநாடுகளுக்குச் சென்றுவரத் தொடங்கினார்.

***1911 :***

தந்தையாரை இழந்தார்.

***1914—1918 :***

காங்கிரஸ் மாநாடுகளை முன்னின்று நடத்தத் தொடங்கினார். ஈரோடு நகர மன்றத் தலைவராகப் பல ஆண்டுகள் பதவி வகித்து ஈரோட்டில் குடிநீர், சுகாதார வசதிகளை அமைத்தார்; மற்றும் சுமார் 28 கௌரவப் பதவிகளை வகித்தார்:

***1919 :***

நகரமன்றத் தலைவர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு, காங்கிரசில் உறுப்பினரானார்; திருச்சியில் காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டு சென்றார்.

***1920 :***

கௌரவப் பதவிகள் அனைத்தையும் ராஜிநாமா செய்தார்: காங்கிரஸ் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கு கொண்டார்; நெல்லையில் காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் வைத்தார்.

**1921 :**
ஈரோட்டில் கள்ளுக் கடை மறியலைத் தலைமை தாங்கி நடத்தினார்; காந்தியின் நிர்மாணத் திட்டத்தை மேற்கொண்டு, தாதம்பட்டியிலிருந்த தமது தென்னைகள் ஐந்நூறை வெட்டினார்; தீவிரக் கதர் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தஞ்சையில் காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு சென்றார்.

**1922 :**
கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, கோவைச் சிறையில் காவல் வைக்கப்பட்டார்; 'குடிஅரசு' இதழ் தொடங்கச் சிறையிலேயே திட்டமிட்டார். திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானம் கொண்டு சென்றார்; 'இந்தி' கற்பிக்கத் தன் கட்டடத்தில் பள்ளி துவக்கினார்.

**1923 :**
'குடி அரசு' துவக்க 19-1-1923-ல் அரசாங்கத்தில் பதிவு செய்தார்; மதுரை காங்கிரசில் வகுப்புரிமை கோரினார். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பணியாற்றினார்.

**1924 :**
தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகப் பணி புரிந்தார். இந்தியாவிலேயே முதன் முதலாகக் கேரளத்தில் வைக்கம் மகாதேவர் கோவில் முன் தீண்டாமை, ஒழிப்புச் சத்தியாக்கிரகம் நடத்தி இரு தடவைகள் சிறைப்பட்டார்; தீண்டாமையை ஒழித்து வெற்றி கண்டார் — ''வைக்கம் வீரர்' எனப் போற்றப் பட்டார். திருவண்ணாமலை காங்கிரசில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தார்; சேரன்மாதேவி குருகுலத்தில் பார்ப்பனரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தார். நீதிக் கட்சி ஆட்சியின் அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்தார்.

**1925:**
3-5-1925-ல் 'குடிஅரசு' (மாலை 1, மலர் 1) வார இதழை ஈரோட்டில் துவக்கினார். காஞ்சிபுரம் காங்கிரஸ் மாநாட்டில் (25-11-1925) வகுப்புரிமைத் தீர்மானத்தை முன்மொழிந்தார். அது ஏற்கப்படாததால்-மாநாட்டுப் பந்தலிலேயே 'இனிக் காங்கிரசை ஒழிப்பதே என் வேலை' எனச் சூளுரைத்துக் காங்கிரசிலிருந்து நண்பர்களுடன் வெளியேறினார்; அப்போது அவர் தமிழ்நாடு காங்கிரஸ் செயலாளர்.

**1926 :**
'இந்திக் கொள்கை'யைக் கண்டித்து எழுதினார். மதுரையில் டிசம்பரில் 'பார்ப்பனரல்லாதார்' முதல் மாகாண மாநாட்டைக் கூட்டினார்.

**1927 :**
காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களைக் கண்டிக்கலானார்; பெங்களூரில் காந்தியாரைச் சந்தித்துத் தம் பார்ப்பனீய எதிர்ப்புக் கொள்கையின் நியாயத்தை விளக்கினார். நாகை இரயில்வே தொழிலாளர் கிளர்ச்சியில் கலந்து கொண்டு, சிறைப்பட்டார். சைமன் கமிஷனை வரவேற்கக் கோரினார். 'திராவிடன்' தினசரியின் ஆசிரியரானார். ஜூலையில், கோவையில், சர். ஏ. இராமசாமி முதலியாரால் 'தமிழ்நாட்டின் ரூசோ' என அழைக்கப்பட்டார். திருக்குறள், புத்தர் கொள்கைகளைக் 'குடி அரசு' மூலம் பரப்பலானார். தம் பெயருக்குப் பின்னால் இருந்த 'நாயக்கர்' என்ற சாதிப் பட்டத்தை விலக்கினார்.

**1928 :**
'ஈ. வெ. ரா. பெரியார்' எனத் திராவிட இனத் தலைவர்களாலும் மக்களாலும் அழைக்கப்படலானார். 'ரிவோல்ட்'— ( Revolt ) ஆங்கில வார ஏடு துவக்கினார்.

**1929 :**
செங்கற்பட்டு. சென்னை மாகாண முதலாவது சுயமரியாதை மாநாடு (பிப்ரவரி 17, 18-ல்) நடைபெற அடிப்படையாக விளங்கினார். டிசம்பரில் நாகம்மையாருடன் மலேயா நாட்டில் முதலாவதாகச் சுற்றுப் பயணம் செய்து, தீவிர சுயமரியாதைப் பிரச்சாரம் புரிந்தார். 'வகுப்புரிமை உத்தரவு' செம்மையாக அமல் நடத்தப்பட வழிகண்டு வென்றார்; பனகல் அரசர் மறைவால் மனமுடைந்த திராவிடரைத் தேற்றினார்.



**1930 :**
மலேயாவிலிருந்து சனவரி 11-ல் புறப்பட்டு, 16-ல் நாகை சேர்ந்தார். அப்பயண நாட்களில் தாடி வளர்க்க நேர்ந்தது. நாடெங்கும் உண்மை நாடுவோர் சங்கம், தாராள சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் ஆகியவற்றைத் துவக்கினார்.

ஈரோட்டில் மாகாண இரண்டாவது சுயமரியாதை மாநாடு நடத்தினார்.

'ரிவோல்ட்' வார இதழ் நிறுத்தப்பட்டது.

காந்தியாரின் நிர்மாணத் திட்டங்களைப் புறக்கணித்தார். சமதர்ம அறிக்கையை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்து வெளியிட்டார்.

**1931 :**
விருதுநகரில் மாகாண மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடத்தினார். நாடெங்கும் சமதர்மச் சங்கங்கள் நிறுவத் தலைப்பட்டார். டிசம்பரில் அயல் நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**1932 :**
எகிப்து, ருஷியா, கிரீஸ், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்சு, போர்ச்சுகல், இங்கிலாந்து, இலங்கை முதலான அயல் நாடுகளில் 11 மாதம் பயணம் செய்தார்; நவம்பர் 11-ல் ஈரோடு திரும்பினார். 'தோழர்' என விளியுங்கள் என வேண்டினார்; டிசம்பரில் சமதர்மத் திட்டம் தீட்டினார்.

**1933 :**
'புரட்சி' வார ஏட்டைத் துவக்கினார், தீவிர சமதர்மப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்; அதற்காக டிசம்பரில்

தண்டிக்கப்பட்டுச் சிறை வைக்கப் பட்டார்.

11-5-1933-ல் நாகம்மையார் இயற்கை எய்தினர்; எனினும் மறுநாள் திருச்சி யில் 144 தடையை மீறித் திருமணம் ஒன்றை நடத்தி வைத்தார். 'மே தினம்' முதன்முதலாக 21-5-1933-ல் கொண் டாடக் கோரினர்.

**1934:**

சமதர்ம வேலைத் திட்டத்தைக் காங்கிர சுக்கும், நீதிக் கட்சிக்கும் அனுப்பினர். கடனுக்குச் சிறையிலடிக்கும் சட் டத்தை எதிர்த்துச் சிறை சென்றார்.

'பகுத்தறிவு' வார ஏட்டைத் துவக்கி னர்; 'பகுத்தறிவு' தினசரி ஏட்டைத் துவக்கிச் சிறிது காலம் வெளியிட்டார். 'பகுத்தறிவு' வார ஏட்டில் டிசம்பரில் முதன் முதலாகத் தமிழ் எழுத்துச் சீர் திருத்தத்தைப் புகுத்தினர். ஜெயப் பிர காஷ் நாராயணன், ஈரோட்டில் பெரி யாரைக் கண்டு பேசினர்.

**1935 :**

நீதிக் கட்சி, தம் திட்டத்தை ஏற்றுக் கொண்டதால், அக்கட்சிக்குத் தீவிர ஆதரவு அளித்தார். 'பகுத்தறிவு' மாத ஏடு துவக்கினர்.

**1936 :**

நீதிக்கட்சி 1937 தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென விரும்பி, தீவிரப் பிரச் சாரத்தில் ஈடுபட்டார். தாயார் சின்னத் தாயம்மாள் 95-ஆம் வயதில் மறைவு.

**1937 :**

தேர்தலில் நீதிக் கட்சி தோல்வி கண்டது; காங்கிரஸ் வென்றது.

**1938 :**

இரயில்வே நிலையங்களிலுள்ள உணவு விடுதிகளில் 'பிராமணுள்-இதராள்' சாப்பிடுமிடம் என்றிருந்த இழிவை, ஒழித்தார்.

ராஜாஜி திணித்த கட்டாய இந்தியை எதிர்த்தார்; காஞ்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டிக் கிளர்ச்சித் திட்டம் வகுத்தார். கிளர்ச்சியில் 1269 பேர் சிறை சென்றனர்; இந்தியை எதிர்த்து, ஆகஸ்டில், தமிழர் பெரும்படை சென்னை நோக்கி அணிவகுத்துச் சென்று 11-9-1938-ல் திருவல்லிக்கேணிக் கடற் கரையை அடைந்தது; அன்று, அங்கு, முதன் முதலாக, 'தமிழ்நாடு தமிழ ருக்கே' எனக் குரல் கொடுத்தார் பெரி யார்; கிளர்ச்சியில் 2 ஆண்டு தண்டனை யும், 2,000 ரூபாய் அபராதமும் விதிக் கப் பெற்று, பெல்லாரி சிறையில் வைக் கப்பட்டார்; சிறையில் இருந்தபோதே 29-12-1938-ல் நீதிக் கட்சித் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'பெரி யார்' என்ற சொல்லால் எப்போதும் அவரைக் குறிப்பிட வேண்டுமெனத் 'தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாடு' அறிவித்தது.

**1939 :**

சிறையிலிருந்து மீண்டார். சர். ஸ்டா போர்ட் கிரிப்ஸைச் சந்தித்து 'திராவிட நாடு பிரிவினையை' விளக்கி வலியுறுத்தி னர்.



**1940 :** ஜனவரி 8-ல் பம்பாயில் எம். ஏ. ஜின்னாவின் இல்லத்தில் அவரைச் சந் தித்துத் தம் தனிநாடு பிரிவினைத் தத் துவத்தை விளக்கினர். டாக்டர் அம் பேத்கார் உடனிருந்தார். திருவாரூர் மாநாட்டில் 'திராவிட நாடு பிரிவினையை விளக்கினர். ஏப்ரலில் கவர்னர் ஜெனர லும், கவர்னரும், திரு இராஜாஜியும் நேரில் வேண்டியும் மந்திரிசபைப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார்.

**1941 :** 'பார்ப்பனர் அல்லாதார்' என்ற பெயரில் அமைப்புகள் இருப்பதைப் படிப் படியாக மாற்றி, 'திராவிடர் கழகம்' ஆக்கி வரலானர். திரு. எம். என். ராய் சென்னைக்கு வந்தபோது சந்தித்து உரை யாடினர்.

**1942 :**

'திராவிடநாடு பிரிவினைக்' கொள்கை யைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார். இரண்டாம் முறை கவர்னர் ஜெனரலும் கவர்னரும் வேண்டியும்கூட மந்திரி சபை அமைக்க மறுத்தார்.

**1943 :**

சோதனைக் குழாயில் குழந்தை உரு வாக்கப்படும் 'Test tube baby' என்ற சுயசிந்தனை முடிவை உலகுக்கு அறிவித் தார்.

**1944:**

சேலத்தில் ஆகஸ்டு 27-ல் கூடிய நீதிக் கட்சி மாநாட்டுக்குத் தலைமை ஏற்று, ''ஜஸ்டிஸ் கட்சி-தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்ற பெயரை 'திராவிடர் கழகம்' என அதிகார பூர்வ மாக மாற்றினர். திருச்சியில் இந்து மகாசபைத் தலைவர் மூஞ்சேயைச் சந் தித்தார். டிசம்பர் 27-ல் கல்கத்தாவில் திரு. எம். என். ராயின் 'ரேடிகல் டெமாக்ரடிக் கட்சி' மாநாட்டுக்கும், 29, 30 31-ல் கான்பூரில் 'பார்ப்பன ரல்லாத-பிற்பட்டோர்' மாநாடுகளுக் கும் சென்று அறிவுரை வழங்கினர்.

**1945:**

செப்டம்பர் 29, 30-ல் திருச்சியில் திராவிடர் கழக மாகாண மாநாடு நடத் தினர்; 'கருஞ்சட்டைத் தொண்டர் படை' என்ற அமைப்பை உருவாக்கி னர்.

**1946 :**

மே 11-ல் மதுரையில் கருஞ் சட்டைப் படை மாநாடு நடந்தது; சமூக விரோதி களின் தூண்டுதலால் மாநாட்டுப் பந்தல் எரிக்கப்பட்டு, தோழர்கள் தாக்கப்பட்ட னர்-கொதித்தெழுந்த கருஞ் சட்டை யினரை அமைதிப்படுத்தினர் பெரியார். திராவிடர் கழகக் கொடி உருவாக்கப் பட்டது. அரசியல் நிர்ணயசபை உரு வாக்கப்பட்ட முறையை வன்மையாக எதிர்த்தார்.

**1947 :**

கடலூரில் 'திராவிடர் மா்நாடு' கூட்டி னர். 'ஜூலை 1 திராவிடநாடு பிரிவினை நாள்' என நாடெங்கும் கொண்டாடச் செய்தார்.

**1948 :**

கட்டாய இந்தித் திணிப்பை எதிர்த்து, அனைத்துத் தலைவர்களையும் அழைத்து, சூலை 17-ல் சென்னையில் மாநாடு நடத்தினார்; இந்தியை எதிர்த்துப் பேச்சுரிமையை நிலைநாட்ட 144 தடையை மீறி குடந்தையில் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றார். கவர்னர் ஜெனரலாக திரு இராஜாஜி சென்னைக்கு வந்த போது அவரைப் பகிஷ்கரித்ததற்காகக் கழகத் தோழர்களுடன் சிறைப்பட்டார். மே 8, 9-ல் தூத்துக்குடியில் மாபெரும் மாகாண திராவிட கழக மாநாடு நடத்தினார். 'திருக்குறள் மாநாடு' நடத்திப் பாமரர்க்கும் அந்நூலை அறிமுகப்படுத்தினார்.

**1949 :**

சூலை 9-ல் மணியம்மையைத் திருமணம் செய்து கொண்டார்; அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டதனை வன்மையாக எதிர்த்தார், பெரியார். உடுமலைப் பேட்டையில் 144 தடை யுத்தரவை மீறிக் கைதானார்.

**1950 :**

'பொன் மொழிகள்' என்ற நூலை எழுதியதற்காக 6 மாதம் சிறைத் தண்டனையை ஏற்றார். வகுப்புரிமை உத்தரவு செல்லாது என ஹைகோர்ட்டும், சுப்ரீம் கோர்ட்டும் அளித்த தீர்ப்புகளை எதிர்த்து, திருச்சியில் டிசம்பர் 3-ல் 'வகுப்புரிமை மாநாடு' நடத்தினார்; தமையனார் ஈ. வெ. கிருஷ்ணசாமி மறைவு.

**1951 :**


இந்திய அரசியல் சட்டத்தை வகுப்புரிமை வழங்கும் வகையில் திருத்தக் கோரினார். அச்சட்டம் அமலுக்கு வந்த ஓராண்டில் 1951 பிப்ரவரியில் அதன் 15-வது விதியில் புதிதாக 4-வது உட்பிரிவு சேர்க்கப்பட்டு, பிற்பட்டோருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் வகுப்புரிமை வழங்கப் பாதுகாப்புச் செய்யப்பட மூல காரணமானார்.

**1952:**

வயது வந்தோருக்கு வாக்குரிமை அளித்து முதலாவதாக நடந்த இந்தியப் பொதுத் தேர்தலில், சென்னை மாகாணத்தில் காங்கிரஸ் தோல்வி அடைய மூலகாரணராக விளங்கினார். இந்தியை எதிர்த்து ஆகஸ்டு 1-ல் இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில், இந்தியை அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார். திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம், தென்பகுதி இரயில்வே மென் யூனியன் இவற்றைத் துவக்கினார்.

**1953 :**

ஆகஸ்டு 1-ல் இரயில் நிலையப் பெயர்ப் பலகைகளில் இந்தியை அழிக்கும் கிளர்ச்சியை நடத்தினார்.



**1954 :**

ஈரோட்டில் புத்தர் கொள்கை மாநாடு. ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் கொதித்தெழச் செய்தார்; 1925 முதல் மேற்கொண்டு வந்த காங்கிரஸ் எதிர்ப்பைத் தளர்த்தி, ஏப்ரல் 13 முதல் காமராசரை ஆதரிப்பதாக அறிவித்தார்; குடியாத்தம் இடைத் தேர்தலில் காமராசரை ஆதரித்தார்; அரை நேரக் கல்வித் திட்டத்தை ஒழித்தார். நாகையில் 76-வது பிறந்த நாளில் 76 பவுன் அளிக்கப் பெற்றார். ஆகஸ்டு 1-ல் இரயில் நிலைய போர்டுகளில் இந்தியை அழிக்கச் செய்தார். மணி அம்மையாருடன் பர்மாவிற்குச் சென்று டிசம்பர் 3-ல் அங்கு உலக பௌத்தர் மாநாட்டில் கலந்து கொண்டார்; மலேயாவில் 2-ஆம் தடவையாகச் சுயமரியாதைப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

**1955 :**

இந்தித் திணிப்பை எதிர்த்தார். 'இந்தி, தேர்வுக்கான பாடமாக இராது' என மத்திய-மாநில அரசுகள் உறுதியளித்ததன் பேரில், கொடி எதிர்ப்புக் கிளர்ச்சியைத் தற்காலிகமாக சூலை 31-ல் ஒத்தி வைத்தார்.

**1956:**

'தட்சிணப் பிரதேசம்' என்ற அமைப்பை எதிர்த்து, அதனை இந்திய அரசு கைவிடும்படிச் செய்தார். மொழிவாரி பிரியும் தமிழ்நாடே, தாம்கோரும் 'தனித் திராவிட நாட்டின்' எல்லை என அறிவித்தார்.

**1957 :**

திருச்சியில் வினோபா பாவேயைச் சந்தித்து இராமாயணம் பற்றிய தம் கருத்தை விளக்கினார். உணவு விடுதியில் 'பிராமணாள்' என்ற பெயரை நீக்கும் கிளர்ச்சி நடத்தி வெற்றி பெற்றார். எடைக்கு எடை வெள்ளி ரூபாய் அன்பளிப்பாகத் தஞ்சையில் 3-11-57-ல் அளிக்கப் பெற்றார்; அங்கு சாதியை ஒழிக்க வேண்டி, 'சாதிக்குப் பாதுகாப்பாக உள்ள அரசியல் சட்டப் பகுதியை எதிர்ப்பது 'என முடிவெடுத்தார்; பெரியாருக்கு 3 செக்ஷன்களின் கீழ் $1\frac{1}{2}$ ஆண்டு தண்டனை விதிக்கப் பெற்றது. ஏக காலத்தில் 6 மாதம் அனுபவிக்கத் தீர்ப்பு அளிக்கப்பட்டார்,

**1958:**

சிறையிலிருந்து விடுதலை அடைந்த அவர் மே 13-ல் சென்னையில் மாபெரும் வரவேற்பை ஏற்றார்.

**1959 :**

வடநாட்டுச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு பிப்ரவரியில் கான்பூர், லக்னோ டில்லி, பம்பாய் முதலான இடங்களில் ரிபப்ளிகன் கட்சிக் கூட்டங்களிலும், கல்லூரிகளிலும் பேருரைகளாற்றினார். தமிழ் மக்கள் அளித்த ரூபாய் ஒன்றரை லட்சம் நிதியைக் கொண்டு சென்னையில் 'எழும்பூர் டிராம் ஷெட்' என்ற இடத்தைக் கழகத்திற்கு வாங்கினார். அதுவே 'பெரியார் திடல்' அங்கேதான் பெரியார் அவர்கள் இன்று மீளாத் துயில் கொள்கிறார்.

**1960 :**

நாடெங்கும், தமிழ்நாடு பிரிவினை கோரி, 'தமிழ்நாடு நீங்கிய இந்திய தேசப்

காவல் சட்டப் பிரிவு 151-ன்படி கைது செய்யப்பட்டார்.

**1961 :**

காங்கிரசில் காமராசர் கையைப் பலப்படுத்தும் பணியைத் தீவிரமாக மேற்கொண்டார்; சமதர்மப் பிரச்சாரம் புரிந்தார்.

**1962 :**

பொதுத் தேர்தலில் காமராசரின் வெற்றிக்குப் பாடுபட்டார்.

**1963:**

காமராசர் பதவி விலகுவது தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும், காமராசருக்கும் தற்கொலையாக முடியும் என முன்கூட்டித் தந்தி மூலம் அவருக்கு அறிவித்தார்.

**1964 :**

'தமிழ்நாடு நில உச்ச வரம்புச் சட்டம் செல்லாது' என சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் கண்டனக் குரல் எழுப்பினர். திருச்சியில் சுயமரியாதைப் பிரச்சாரப் பயிற்சி வகுப்பை நடத்தி விரிவுரைகளாற்றினார்.

**1965:**

'இந்தி எதிர்ப்பு' என்ற பெயரால் திருச்சி மாவட்டத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்புகள் நடத்தினார்.

**1966 :**

விழுப்புரத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு நடத்தினார்.

**1967 :**

தேர்தலில் பெருவெற்றி குவித்த அறிஞர் அண்ணா அவர்கள் மார்ச்சு மாதம் தந்தை பெரியாரைச் சந்தித்தார்; பெரியார் ஆதரவு நல்கினார்.

தஞ்சை விடயபுரத்தில் சுயமரியாதைப் பயிற்சி வகுப்பு நடத்தினார். அங்கேதான் கடவுள் மறுப்பு வாசகங்களை உலகுக்கு அறிவித்தார். அச் சமயம் நாகர்கோயில் பயணத்தினால் அவரது உடல்நலம் பாதிப்புற்றது. திருச்சியில் நகர மக்கள் குழு சார்பில், 17-9-'67-ல் பெரியார் சிலை தமிழகத்திலேயே முதன் முதலாகத் திறந்து வைக்கப் பெற்றது. அறிஞர் அண்ணா ஆட்சியில் 28-11-1967-ல், சுயமரியாதைத் திருமணம் செல்லுபடியாகும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பெரியாருக்கு அரசு அளித்த முதல் வெற்றிக்கனி, அதுவாகும்.

**1968 :**

லக்னோவில் அக்டோபரில் நடந்த மாநாடுகளில் அறிவுரையாற்றினார்.

**1969 :**

இன இழிவை நீக்க கோவில் கர்ப்பக் கிருகக் கிளர்ச்சி பற்றி அக்டோபரில் அறிக்கை விட்டார்; 16-11-1969 அன்று 26-1-1970 கிளர்ச்சிநாள்' என அறிவித்தார்.

**1970 :**

மார்ச்சு 7-ல் திருச்சி சிந்தனையாளர் கழகத்தையும், செப்டம்பரில் சென்னை பகுத்தறிவாளர் கழகத்தையும் துவக்கி, நாடெங்கும் இவ்வமைப்புகளை நூற்றுக் கணக்கில் தோற்றுவித்தார். குடந்தையில் (18-1-1970) மாநாட்டில் கர்ப்பக் கிருகக் கிளர்ச்சியை ஒத்தி வைத்தார்.

அக்டோபரில், உணவு விடுதிகளில் 'பிராமணாள்' பெயர் அழிப்புக் கிளர்ச்சி நடத்தினார். நவம்பரில் பம்பாயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

**1971 :**

12-1-1971-ல் 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்று சட்டம் நிறைவேற்றப்பட்டு, பெரியார் கோரிக்கை நிறைவேற வழி வகுக்கப்பட்டது. சனவரியில் சேலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு கூட்டினார்;

**1972 :**

நாகை வேளாங்கண்ணியில் சுயமரியாதைப் பிரச்சாரப் பயிற்சி வகுப்பில் அறிவுரைகள் வழங்கினார்; தமிழ்நாடு அரசின் 'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்' ஆக உரிமைதரும் சட்டம் செல்லாதென சுப்ரீம் கோர்ட், அச்சமயம், தீர்ப்பளித்தது; அத் தீர்ப்பை எதிர்த்து 15-3-1972 அன்று நாகையில் போர்க் கொடி உயர்த்தினார்.

**1973 :**

தமது 95-ஆம் வயதில் வாழ்ந்த 98 நாட்களில் 35 நாட்கள் சூறாவளிப் பயணம் செய்தார்.

19-12-1973-ல் சென்னை தியாகராய நகரில் சிந்தனையாளர் மன்றச் சார்பில்- மரண சாசனம் என அமைய நேரிட்ட பேருரையை நிகழ்த்தினார். அதுவே இறுதிச் சொற்பொழிவாக அமைந்து விட்டது. 20-12-1973 பிற்பகல் 3 மணிக்கு சென்னை அரசினர் தலைமை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார். 21-12-1973 பிற்பகல் வேலூர் சி.எம்.சி. மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டார்; 23-12-1973 மாலை கவலைக் கிடமான நிலையை அடைந்து, இரவு 11 மணிக்குப் பின் நினைவிழந்தார்-நினைவு திரும்பாமலேயே, 24-12-1973 காலை 7.40 மணிக்கு மீளா விடை பெற்றார், தந்தை பெரியார். அவர்தம் 95 ஆண்டைய நெடிய வாழ்வு முடிவுற்றது; ஓய்வறியாத அப் பெருந்தகை ஓய்வு பெற்றார். உடல் சென்னைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. 24-12-1973 பிற்பகல் 4 மணி முதல் 25-12-1973 பிற்பகல் 3 மணி வரை சென்னை இராஜாஜி மண்டபத்தில் அவர்தம் உடல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது; அன்னாரின் உடலைக் கண்டு லட்சோப லட்ச மக்கள் 'அய்யா' 'அய்யா' எனக் கதறி அழுதனர்; 3.10 மணிக்கு அரசு மரியாதையுடன் இறுதி ஊர்வலம் துவங்கிற்று; 4.45 மணிக்குப் 'பெரியார் திடல்' அடைந்தது; அவரது தங்கமேனி தேக்கு மரப்பெட்டியில் வைத்து மூடப்பட்டு, மாலை 5.05 மணிக்குப் புதைகுழியில் இறக்கப்பட்டது.

[திருச்சி சிந்தனையாளர் கழகம் வெளியிட்டுள்ள ''பெரியார் சிந்தனைகள்-1'' தொகுதியிலிருந்து தொகுக்கப் பெற்றது ]



# வில்லியர்ஸ்

## இன்ஜின் பம்புசெட் பொருத்தி விட்டீர்களா ?

## விளைச்சல் இன்னும் பன்மடங்கு பெருகுமே!

**முதல் விவசாயி:** அண்ணே! ஏன் மிகவும் கவலையுடன் இருக்கிறீர்கள் ?

**மற்றொருவர் :** அட! ஏம்பா கேட்கிறாய்? நான் காலுக்கு பொருந்தாத செருப்பு போல பெரிய ஆயில் என்ஜின் பம்புசெட் பொருத்தினேன் அல்லவா? அது வயல்களுக்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு வயலுக்கு தூக்கிச் செல்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. தேவையான எரிபொருள் கிடைப்பதோ அரியதாக இருக்கிறது. அதுமட்டுமா? சர்வீஸ் செய்ய மெக்கானிக்குகளை தேடி அலைவதோ பெரும் பிரச்சனை!

**முதல் விவசாயி:** நீ வில்லியர்ஸ் என்ஜின் பம்புசெட் பற்றி கேள்விப்படவில்லையா ?

**வில்லியர்ஸ் என்ஜின்** பம்புசெட் வேண்டிய இடங்களுக்கு எளியதாக தூக்கிச் செல்லலாம்! இதனால் வெவ்வேறு இடங்களிலுள்ள நிலங்களுக்கு நீர் இறைப்பதோடு, வாடகைக்கும் கொடுக்கலாம். ISI உத்தரவாதத்துடன் $3\frac{1}{2}$ H.P. மற்றும் 2 H.P. மாடல்களில் கிடைக்கிறது. விலையோ கொள்ளை மலிவு. நிலவள வங்கி மூலம் வாங்கினால் அரசாங்க மானியம் உண்டு. அது மட்டுமா? மண்ணெண்ணையிலும் டீசல் கலவையிலும் ஓட்டலாம். இதனால் தட்டுப்பாடு காலங்களிலும் பாசனத்தில் தடை ஏற்படாது . எவ்வளவு தூரமானாலும் சர்வீசுக்கு அவர்களே மெக்கானிக்கு அனுப்புகிறார்கள். நமக்கு பிரச்சனையே கிடையாது. பில்டர் பாயிண்டு கிணறு, குளம், வாய்க்கால் முதலியவற்றிலும் நீர் இறைக்க உதவும். நீங்களும் **வில்லியர்ஸ் இன்சின் பம்புசெட்** பொருத்துங்கள். விளைச்சல் இன்னும் பன் மடங்கு பெருகுமே! டேய்! டேய்! எங்கே இப்படி ஓடுகிறாய்?

**மற்றவர் :** நான் இப்பொழுதே வில்லியர்ஸ் என்ஜின் பம்புசெட் விநியோகஸ்தரிடம் செல்கிறேன்!



ஆம்! உலகப் புகழ்பெற்ற "புல்லட்" மோட்டார் சைக்கிள் தயாரிப்பாளர்களின் அதி உன்னத படைப்பே **"வில்லியர்ஸ்"** என்ஜின் பம்புசெட் விவசாயிகளைப் பெரிதும் கவர்வதில் வியப்பு இல்லையே.

Villiers

**விலை :** $3\frac{1}{2}$ HP. Rs. 2725-00
2 HP. Rs. 2175-00

திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு பிரதான விநியோகஸ்தர்கள் :—

# மஹேஸ்வரி ஸ்டோர்ஸ்


(G. I. பைப் பிட்டிங்ஸ் சானிடரிவேர்ஸ் & பிட்டிங்ஸ் G. M. பிட்டிங்ஸ் etc. வியாபாரம்)

**101, மேலப்புலிவார்டு ரோடு, திருச்சி—620008.** போன் : 27789 & 24998


*குறிப்பு :* வில்லியர்ஸ் என்ஜின் பம்புசெட்டுக்குரிய **ஒரிஜினல் ஸ்பேர் பார்ட்ஸ்** எங்களிடம் கம்பெனி விலைக்கே கிடைக்கும். (2) எங்களது பணிமனைக்கு (Service Station) கொண்டு வரப்படும் வில்லியர்ஸ் இன்ஜின்களுக்கு சர்வீஸ் இலவசம்.




தந்தை பெரியார்
நடத்திய
பத்திரிகைகள்
revolt
Registered No. M. 2426.
Edited by E. V. Ramasami, S. Ramanathan.
PUBLISHED EVERY WEDNESDAY.
21st NOVEMBER 1928.
NO. 3
The Lion Disappears.
குடி அரசு
25-12-1948
கடமையைச் செய்! சளைக்காதே!
புரட்சி
பெண் ஏன் அடிமையானாள்?
நான் ஏன் கிறிஸ்தவனல்ல?
மதம் என்றால் என்ன?
LEADING TAMIL DAILY
REGD. NO: M. 4789.
PHONE NO: 86977.
விடுதலை
VIDUTHALAI
ESTD: 1935.
திராவிடர் தமிழ்த் தி
அசெம்பிளியில் பெரியார் கருத்து
"PAHUTHARIVU"
பகுத்தறிவு
இவை தவிர
'உண்மை'
'MODERN RATIONALIST'
இதழ்களையும் நடத்தினா




டிரான்ஸ்மிஷன் (மின்விசை)
கோபுரங்கள்



இயந்திரக் கருவிகள்




டிராக்டர் இணைப்பு (Trailers)
வண்டிகள்



எனமல் பூசிய செம்புக் கம்பிகள்



வீட்டுக்கும், அலுவலகத்துக்கும்
ஏற்ற பலவித மேசை, நாற்காலி



பாத அணிகள் மற்றும் அழகு
தோல் பொருட்கள்


# தொடர்ந்து சேவை புரியும் டான்சி மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை எதிர்நோக்குகிறது!

இன்று டான்சி வளர்ந்து பல்வேறு துறைகளில் விரிவடைந்து 57 தொழிற் கூடங்கள் மூலம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 13 கோடிக்கு மேற்பட்ட பொருட்களை உற்பத்தி செய்தும் சேவை அளித்தும் வருகிறது.

கடந்த 12 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்காக டான்சி தன்னை அர்ப்பணித்துக்கொண்டு சேவை புரிந்து வருகிறது.

சிறு தொழில்களைத் துவக்குவது, அவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது டான்சியின் குறிக்கோள்.

பதனிடப்பட்ட தோல், தோல் பொருட்கள், கதவுச்சட்டங்கள் போன்றவைகளை ஏற்றுமதி செய்து வருகிறது டான்சி.



ரூ. 32 இலட்சம் மதிப்புள்ள கிரானைட் கற்களை ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது இந்த ஆண்டில் ஒரு பெரும் சாதனையாகும்.

தனக்கும், மாநிலத்துக்கும், நாட்டுக்கும் மேலும் ஒரு வளர்ச்சி ஆண்டை டான்சி எதிர்நோக்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் மேலும் வளர்ச்சி பெற்று, சேவை புரிய பாடுபடுகிறது

**டான்சி**

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

1, ஒயிட்ஸ் ரோடு, சென்னை-600 014



# பெரியாரின் தீர்க்கதரிசனம்

தந்தை பெரியார் அவர்களின் தீர்க்க தரிசனம் அசாதாரணமானது. எதிர் காலத்தை எண்ணிப் பெரியார் அவர்கள் ஆற்றிய கருத்துரைகள் ஒரு காலத்தில் கனவுலகச் சிந்தனைகளாக கருதப் பட்டிருக்கலாம். ஆனால் இன்று நடைமுறையில் நம் முன்னே நடைபெறும் காட்சிகளாக அந்தச் சிந்தனைகள் மலர்ந்துள்ளன.

இதனை எண்ணியே நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தந்தை பெரியார் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் தொகுத்து **'இனிவரும் உலகம்'** என்ற தலைப்பில் 21-3-1943, 28-3-43 'திராவிட நாடு' இதழ்களில் வெளியிட்டுள்ளார்கள்.

அதில் ஒரு சில பகுதிகள் வருமாறு :

''போக்குவரவு எங்கும் ஆகாய விமானமும் அதி வேக சாதனமுமாகவே இருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத்தக்க சௌகரியம் ஏற்படும்.


பிள்ளைப் பேறுக்கு ஆண்-பெண் சேர்க்கை என்பது கூட நீக்கப்படலாம். நல்ல திரேகத்துடனும், புதிய நுட்பமும், அழகும் திடகாத்திரமும் உள்ள பிரஜைகள் ஏற்படும் படியாகப் பொலி காளைகள் போல், தெரிந்தெடுத்த மணி போன்ற பொலி மக்கள் வளர்க்கப்பட்டு, அவர்களது வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி, நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும். ஆண்-பெண் சேர்க்கைக்கும், குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும்.''

இவ்வாறு பெரியார் அவர்கள் கூறியது இன்று நடைமுறை நிகழ்ச்சியாக மாறிவிட்டது.

அன்று-நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு செயற்கைக் குழந்தை 'Test tube baby' பற்றி பெரியார் சொன்ன கருத்து இன்று நடைமுறையில் மெய்யாகிவிட்டது.

1974ஆம் ஆண்டில் லீட்ஸ் பல்கலைக் கழக மகப் பேறு இயல் பேராசிரியர் டாக்டர் டக்ஸ்ஈவிஸ், சோதனைக் குழாய்களில் விந்துகளைச் செலுத்தி கருத்தரிப்பு உருவாக்கப்பட்டதையும் வெற்றி பெற்றிருப்பதையும் தெரிவித்தார்.

கடந்த 1978 ஜூலையில் இங்கிலாந்திலுள்ள 'ஓல்டுஹாம்' நகரில் லூஸி ப்ரௌன் என்ற பெண்ணுக்கு பிறந்தது. டாக்டர் எட்வர்டு, டாக்டர் ஸ்டெப்டோவ் இருவரும் இம்முயற்சியில் பெரும் வெற்றியடைந்தனர். இது உலகில் பெரும் பரபரப்பான செய்தியாக அமைந்தது.



# வைக்கம் வீரர் வழிச் செல்வோம்

**சி. என். கிருஷ்ண பாரதி**
துணை இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை



**1924**-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் கொடைக்கானல் மலைப் பகுதியிலுள்ள பண்ணைப்புரம் கிராமம் பெருவிழாவினைக்கொண்டாடிக் கொண்டிருந்தது. தமிழ் நாட்டின் விடுதலை வீரர் ஒருவருக்கு மாபெரும் வரவேற்பு நடந்து கொண்டிருக்கிறது. விடுதலையின் அவசியத்தைப் பற்றியும், அடிமைத் தனத்தால் சமுதாயம் சீரழிந்து போன நிலையையும், அடுக்குப் பாத்திரம் போல அடிமைத் தனம் மேலிருந்து கீழாகச் சாதிகள் வாரியாக நிலவி வரும் கேட்டை அன்றைய தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் முழங்கிக் கொண்டிருக்கிறார். எளியாரை வலியார் கொடுமைப்படுத்த, அவரினும் வலியார் இவர்களைக் கொடுமைப்படுத்த, சங்கிலித் தொடர்போல் சுரண்டல் பேரரசு நடந்து கொண்டிருப்பதைக் கண்டித்து விழிப்புணர்ச்சியினைப் பாமர மக்களுக்கு அவர்களது மொழியிலேயே பேசிக் கொண்டு இருக்கிறார் தலைவர். தலைவரது பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கும் அடுத்த ஊர்த் தொண்டன் —''நாளை நம்மூரில் இந்த முழக்கம் கேட்கப் போகிறது. நம்முடைய மக்கள் விழிப்படைந்து வீறு கொள்ளப் போகிறார்கள்' என்று தனக்குள்ளே கணக்குப் போட்டு இன்பக் கனவில் ஆழ்ந்திருக்கிறான். தலைவரது சொற்பெருக்கு முடிந்ததும் ஒரு கடிதம் அவர் கையில் சேர்ப்பிக்கப்படுகிறது. அக்கடிதம் கேரள நாட்டிலிருந்து ஈரோடு வந்து, பின்னர் பண்ணைக் காட்டிற்கு அனுப்பப் பட்டுள்ளது. கடிதத்தைக் கண்டதும், பெரிய சொற்பொழிவிற்குப் பின் ஓய்வு பெற்றிருக்க வேண்டிய தலைவர் சீறி எழுகிறார். ''சீ, சீ! இப்படி ஒரு அநியாயமா? உடனே புறப்பட்டாக வேண்டும்'' என்கிறார்.

''தொடர்ச்சியாகக் கூட்டம் ஏற்பாடாகியிருக்கிறது. இந்த மலைப்புறச் சூழ்நிலை தங்கள் உடலுக்கும் நல்லது. கொஞ்சம் ஓய்வுக்குப் பின் போகலாமே'' என்கிறார் உள்ளூர்ப் பிரமுகர் ஒருவர்.

''என்ன ஓய்வும், பேச்சும் வேண்டிக் கிடக்கிறது! அங்கே, நாய்களுக்கும் பன்றிகளுக்கும் கொடுத்திருக்கும் சுதந்திரத்தைக் கூட மனிதனுக்கு மறுக்கிறார்கள். தட்டிக் கேட்பவர்களையெல்லாம் சிறைக்குள் தள்ளி விட்டார்களாம். இந்நிலையில் நான் உடனே புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்'' என்று பரபரக்கிறார் தலைவர்.

''எங்கே கலவரம் ஐயா?'' என்று அச்சத்தோடு கேட்கிறார்கள்.

''நம்ம திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஈழவர்களுக்குச் செய்யப்படும் அநியாயத்தை எதிர்த்த தலைவர்களைச் சிறையடைத்து விட்டார்களாம். தலைவர்களில்லாத நிலையில் போராட்டமே நிலைகுலைந்து நிற்கிறது. நாம் யாராவது போனால்தான் வெற்றி காண முடியும்''.


''கேரள நாட்டில் நடக்கும் சம்பவத்திற்குத்தானா இந்த அவசரம்?'' என்று பேசத் தெரியாத தொண்டனின் முணுமுணுப்பு அவர் காதுக்கு எட்ட வேண்டுமா?

''என்ன, கேரள நாட்டில் அநியாயம் நடந்தால் அது அநியாயமில்லையா? அங்கேயும் தொல்லைக்குள்ளானவன் நம்மைப் போலத் தானே! சமூகக் கேடுகளைப் பற்றி மணிக்கணக்காகக் கேட்பது நமக்கெல்லாம் பொழுதுபோக்காகப் போய் விட்டதே தவிர—அதற்கான காரியத்தில் இறங்குவதென்றால் யோசனைதான்! அதுவும் கேரளாவென்றால் நமக்குச் சம்பந்தப்படாதது மாதிரிப் பேசுகிறீர்களே — அங்கு நடந்த கொடுமைகள் அடக்கப்படாவிட்டால் இங்கு வர எத்தனை நாட்களாகும்? இதோ புறப்பட்டாகி விட்டது, வணக்கம்!'' என்று விடுவிடென்று தலைவர் எப்போதும் தன்னிடம் இருக்கும் துணி மூட்டையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டுவிட்டார். கூடியிருந்த பொதுமக்களும், உள்ளூர்த் தலைவர்களும் மிரள மிரள விழித்துக் கொண்டு தமிழ்நாட்டுத் தலைவரை வழியனுப்பி வைத்ததைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. வந்த கடிதம் என்ன?

கேரள மாநிலத்திலுள்ள திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த போராட்ட வீரர்களான ஜார்ஜ் ஜோஸப், பாரிஸ்டர் மேனன், கேசவ மேனன் ஆகியோர்கள் எழுதிய கடிதம். ''வைக்கம் போராட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துவிட்டது. எல்லாத் தலைவர்களும் கைது செய்யப்பட்டு விட்டார்கள். போராட்டத்துக்குஉயிர்கொடுக்க இங்கு யாருமில்லை. நீங்கள் உடனே புறப்பட்டு வந்து வெற்றிக்கு வழி காண வேண்டும். இல்லையென்றால் நாங்கள் மன்னிப்புக் கேட்டுப்போராட்டத்தை

வாபஸ் பெற வேண்டிய நிலையிலிருக்கிறோம். உடனே நீங்கள் வந்து பொறுப்பேற்க வேண்டும்'' என்பதுதான் அந்தக் கடிதம்.

பெருந் தலைவரொருவரை உலுக்கி எடுத்த போராட்டம் தான் என்ன? கொடைக்கானல் மலையிலிருந்து கேரள திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு ஆயத்தங்கள் கூடச் செய்யாமல் பரபரப்புடன் செல்ல வேண்டிய அவ்வளவு அவசியம் என்ன? இப்படித்தான் அன்றைய தமிழ் நாட்டுத் தலைவர்கள்கூட எண்ணினார்கள்.



தந்தை பெரியார் வைக்கத்தில் அறப்போர் செய்த இடம்

மக்களோடு மக்களாக வாழும் ஒரு தலைவன்தானே மனித உணர்வுகளின் பதைபதைப்பை உணர முடியும்! அவ்வாறு உளம் பதைபதைக்கச்சென்ற மாபெரும் தலைவர், அன்றைய காங்கிரஸின் தலைவராக இருந்த பெரியார்தான்! தீண்டாமை என்று பொதுவாக வழங்கப்படும் சொல்லுக்குக் கேரள மாநிலத்தில் அன்று பொருளேயில்லை. அவர்கள் பின் பற்றி வந்த கொடுமை தீண்டாமையைவிடக் கேவலமானது— பார்க்காமை—காற்றுக் கூடப் படாமை என்று அவைகளைக் கூறலாம். மேல் சாதிக்காரர்கள் என்று கூறிக் கொள்ளுபவர்கள் வாழும் தெருக்களிலும், நடக்கும் தெருக்களிலுங்கூட கீழ்ச் சாதியினர் என்பவர்கள் நடக்கக் கூடாது. அவர்கள் வருவது தெரிந்தால்கூட வேறு தெருக்களில் புகுந்து சென்றுவிட வேண்டும். அவர்களது ஆடைகளுக்குக்கூடக் கட்டுப்பாடுகள் உண்டு. செருப்பு அணிவதிலும், குடை எடுத்துச் செல்வதிலும் கட்டுப்பாடு இருக்கும். அவர்களது ஓலைக் குடைகள் மழைக்குப் பாதுகாப்பிற்கல்ல. பெரிய சாதிக்காரர்கள் எதிர்பாராது எதிர்ப்பட்டு விட்டால் தங்களை முழுதும் மறைத்துக் கொண்டு ஓடி விட!

இத்தகைய கொடுமைகளின் தலைநகராக இருந்த இடம் 'வைக்கம்' என்ற ஊர்; ஊர் நடுவே ஓர் கோயில்; கோயிலைச்சுற்றிலும் மதில்களும் மாட வீதிகளும் உண்டு. அந்த வீதிகளில் கீழ்ச் சாதிக்காரர்கள் என்று அழைக்கப்பட்ட ''அவர்ணஸ்தர்கள்'' எல்லோரும், அயித்தக்காரர்கள் எனப்படும் தீண்டாதாரும், ஈழவர்கள் போன்ற வகுப்பினரும் கோயிலின் நான்கு மாட வீதிகளிலும் நடக்கக் கூடாது. அப்பகுதியில் ஓரிடத்தை அடையச் சுற்று வீதிகளில்தான் நடந்து செல்ல வேண்டும். இத்தெருக்களில் முக்கியமாக அரசு அலுவலகங்கள், நீதி மன்றம், காவல் நிலையம் அமைந்திருந்தன. இவ்விடங்களுக்கு வருவதற்கு கீழ்ச் சாதிக்காரர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது மட்டுமின்றி, இவ் அலுவலகங்களில் பணி புரிபவர்களில் எவரும் கீழ்ச் சாதிக்காரர்கள் இல்லாதவாறுபார்த்துக் கொள்ளப்பட்டது. வெளியூர்களிலிருந்து மாற்றம் செய்யும்போது கூட மிகக் கவனமாகச் செய்யப்பட்டது. அங்கிருந்த கடைகளிலும் இத்தகையோர் பொருள் வாங்க முடியாது!

இக்கொடுமை திருவாங்கூர் சமஸ்தானம் முழுவதும் பரவியிருந்தது. அவைகளைத் தடுக்கும் முயற்சியின் முதற் கட்டமாக இவ்வூர் தேர்ந்தெடுக்கப்பட்டது. வைக்கம் போராட்டத்தின் வித்து திருவனந்தபுரத்தில் நடந்ததோர் சம்பவமாகும்.

மாதவன் என்பவர் ஈழவ வகுப்பைச் சேர்ந்த வழக்கறிஞர். அவர் திருவாங்கூர் மன்னன் கொட்டாரத்தை(அரண்மனையை) அடுத்த வழக்கு மன்றத்தில் வழக்காட வந்தபோது, அப்பகுதியில் மன்னரது பிறந்த நாளையொட்டி 'ஜெபம்' நடந்து கொண்டிருந்ததால் தடுக்கப்பட்டார். இக்கொடுமையினைக் கண்டு மக்கள் கொதித்தெழுந்தனர். அதன் விளைவுதான் வைக்கம் போராட்டம்.

போராட்டம் தொடங்கியதும் வழக்கறிஞர்கள் மாதவன், கேசவ மேனன், ஜார்ஜ் ஜோசப் போன்ற 19 தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். அப்போது மன்னரிடம் காவல் துறைத் தலைவராயிருந்தவர் ''பிட்'' என்ற ஆங்கிலேயர் மிகச் சாமர்த்தியமாகப் போராட்டத்தைச் சமாளித்து வந்தார். சில நாட்களிலேயே தடை செய்யப்பட்டிருந்த தெருக்களில் கீழ்ச்சாதிக்காரர்கள் நுழைவது என்பதுதான் இப்போராட்டம். நாளுக்கொருவர் நுழைந்து கைதாகி வந்தனர். அவர்களுக்குச் சரியான தலைவர் ஒருவரிருந்து அனுப்ப யாருமே இல்லாத நிலையில் பெரியாரை நாடி வந்தது கடிதம்.

உடனடியாகத் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு, ராஜாஜி அவர்களுக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைமைப் பதவியைத் தற்காலிகமாகப் பார்த்துக் கொள்ளும்படிக் கடிதம் அனுப்பிவிட்டு, கோவை திரு அ. அய்யாமுத்து, திரு. இராமநாதன் ஆகியவர்களை அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டார். நாகர் கோயிலையடுத்த கோட்டாறு டாக்டர் சி. எம். நம்பெருமாள் நாயுடு என்பவர் தனது காரில் போராட்ட வீரர்களை அழைத்துக் கொண்டு திருவிதாங்கூர் கிராமங்களில் பிரச்சாரத்திற்குச் சென்றார். படகில் சென்று வைக்கம் அடைந்தபோது பெரியதோர் அதிசயம் காத்திருந்தது. தங்களது போராட்டத் தலைவரை எதிர்கொண்டழைக்க வந்த மக்களினத்தை முந்திக் கொண்டு, திருவிதாங்கூர் அரசரின் சார்பாக காவல் துறை அதிகாரி, பிட் துரை, திவான், தாசில்தார் ஆகியோர் பெரியாரை வரவேற்றனர். தாம் கைது செய்யப்படுவோம் என்று எதிர்பார்த்திருந்த பெரியாருக்கும், தம்மைக் காக்கத் தமிழகத்திலிருந்து வரும் தலைவரையும் அவரது தோழர்களையும்



சிறைப்படுத்தப் போகிறார்களே என்று கவலைப்பட்டுக் கொண்டு இருந்த கேரள மக்களுக்கும் அரசாங்க வரவேற்பு குழப்பமும், வியப்பும், பின்னர் அளவற்ற உற்சாகமும் அளித்தது.

பெரியாரின் குழப்பம் சிறிது நேரத்தில் தெளிவடைந்தது. திருவிதாங்கூர் மன்னர் டெல்லி செல்லும்போது ஈரோட்டில் அவரது பரிவாரங்களுடன் ஒரு நாள் தங்குவது வழக்கம். அவரது பரிவாரங்களுக்குத் தங்குமிடம் பெரியாரது தந்தை கட்டி வைத்திருந்த சத்திரம்; மன்னர் தங்குவதற்குப் பெரியாரது மாளிகை. நிகழ்ச்சிக்கு மூன்று மாதத்திற்கு முன்னர் அவர்களுக்கு விருந்து தந்த பெரியாருக்கு அரசரின் சார்பில் வரவேற்பளித்தது. அந்த வரவேற்பின் வேகத்தில் போராட்ட வீரர் மயங்கிவிடுவார் என்றும் கருதியிருக்கலாம். ஆனால் இதற்கெல்லாம் கட்டுப்படுபவரா இவ்வீரர்!

ஒரு பக்கம் விருந்தினர் —மறு பக்கம் சத்தியாக்கிரகத்தைப் பரப்பும் பிரச்சாரம்! கிராமம் கிராமமாகச் சென்று மேல்சாதியினரின் கொடுமைகள் விளக்கப்பட்டன. 'செரயின்கீழ்' என்ற கிராமத்தில் முதன் முதல் போராட்டத்தைத் துவக்கிய திரு அய்யா முத்து கைது செய்யப்பட்டார். பெரியாரது கனல் கக்கும் சொற்பொழிவுகளை முதல் 5, 6 நாட்கள் பொருட்படுத்தாது இருந்தார் மன்னர். மேல்சாதிக்காரர்களின் முறையீடு அதிகரித்தது. பிரச்சாரம் தொடங்கிய பத்தாவது நாள் தடையுத்தரவு போடப்பட்டது. தடையை மீறி பெரியாருக்கு ஒரு மாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டு 'அருவிக்குத்தி' என்னும் ஊரில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார். பெரியார் சிறை சென்றதையறிந்த நாகம்மையாரும், அவரது தங்கை கண்ணம்மாளும் மற்றும் பல தொண்டர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுச்சிறை சென்றனர்.

போராட்டத்திற்கான ஆதரவு நாடு முழுவதிலும் பெருகிவிட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் தொண்டர்கள் குவியத் தொடங்கினர். பலரும் நன்கொடை பெருமளவில் அனுப்பத் தொடங்கினர். பெரிய பந்தல் அமைக்கப்பட்டு தினசரி போராட்ட வீரர்களுக்குச் சமையல் துவக்கப்பட்டது. தினசரி முந்நூறு பேர்களுக்கு இவ்வாறு உணவளிக்கப்பட்டு வந்தது. பணமாக மட்டுமின்றி அரிசி, பருப்பு, காய்கறிகள் போன்றவைகளையும் மக்கள் அள்ளிக் கொடுத்து வந்தனர்.


பஞ்சாபிலிருந்து சுவாமி சிரத்தானந்தா என்னும் தலைவர் சுமார் முப்பது பேர்களுடன் வந்து இரண்டாயிரம் ரூபாய்களை நன்கொடையாக அளித்தார். இவ்வாறு போராட்டம் வெற்றிப் பாதையினை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்திய நாடு முழுவதும் போராட்டத்தின் வெற்றியை எதிர்நோக்கி இருந்த போது மற்றொரு பேரிடி விழுந்தது.

இப்போராட்டம் இந்து சமயத்தை ஒழிப்பதற்காக அதன் எதிரிகள் மறைந்திருந்து தூண்டி விடுகிறார்களென்ற பீதியை மேல்சாதிக்காரர்கள் கிளப்பி விட்டனர். காந்தியடிகளுக்கும் இது பற்றி எழுதினர். 'கேரள மாநில சம்பந்தப்பட்ட விஷயத்தில் மற்றவர்கள் தலையீடு கூடாது'' என்று வாதிக்கத் தொடங்கினர்.

காந்தியடிகளும் இப்போராட்டத்தைக் கேரள மக்களுக்கே விட்டுவிடும்படியும், மற்ற மாநிலத்தவர்களும், மதத்தினரும் திரும்பி விட வேண்டுமெனவும் கட்டளையிட்டார். போராட்டத்தில் கலந்து கொண்ட சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் திரும்பலாயினர். இராஜாஜி அவர்களும் நமது மாநிலத் தலைமையைக் கவனிக்காமல் மற்றொரு மாநிலத் தகராறுகளில் முழுக் கவனம் செலுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு கடிதம் எழுதியவுடன், பொறுப்பான தலைவர்களையும் அனுப்பிப் பார்த்தார்.

ஆனால், ஒரு மாதத்தில் சிறை மீண்ட பெரியார், பெரிய அளவில் போராட்டத்தைத் துவக்கினார். சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1,000 பேருக்கு மேல் சேர்ந்துவிட்டனர். சுவாமி சிரத்தானந்தர் போன்றவர்கள் காந்தியடிகளின் வேண்டுகோளையும் மீறித் தீவிரமாகப் பங்கு கொள்ளத் தொடங்கினர்.

ஒரு மாத வெறுங்காவலில் இருந்து வெளிவந்து போராட்டத்தைத் தீவிரமாக்கியதன் பலனாக ஆறு மாதக் கடுங்காவல்



தண்டனை கிடைத்தது பெரியாருக்கு. சத்தியாக்கிரகத்தை நிறுத்துவதற்காகவும், போராட்ட வீரர்களை ஒழிப்பதற்கும் வைதிகர்களனைவரும் சேர்ந்து பெரிய அளவில் ''சத்ருசங்கார யாகம்' என்ற வேள்வியினைச் செய்யத் தொடங்கினர். இதற்குப் பல ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்பட்டது. இவையெல்லாம் போராட்டத்தின் போக்கைச் சிறிதும் குறைக்க முடியவில்லை.


இச்சமயத்தில் திருவாங்கூர் மன்னர் காலமாகி விடவே கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். போராட்டம் மீண்டும் வலுக்கத்தொடங்குவதையறிந்து மகாராணி ஓர் ஒப்பந்தத்திற்கு வர முயற்சித்தார். தெருக்களில் நடக்க உரிமை கோருபவர்கள் அடுத்து, கோயிலுக்குள்ளும் புக வேண்டும் எனக் கேட்பார்கள் என்ற அச்சம் வைதிகர்களுக்கும், ஆட்சியிலிருந்தவர்களுக்கும் பற்றிக் கொண்டது.

பெரியாரிடம் சமாதானம் பேசவோ அச்சம்; கொள்கையில் பிடிவாதமாயிருக்கும் தலைவர் இவர்களது கோரிக்கைக்கு எப்படி இணங்குவார்? தொண்டர்களின் உற்சாகம் அளவு கடந்து இருந்தது. தெருவில் நடப்பதற்குக் கிடைக்கும் உரிமை சர்வ சாதாரணமாகத் தென்பட்டது. இந்தப் பிரச்சினையை எப்படி முடிப்பது என்று புரியாமல் அரசு விழித்துக் கொண்டிருந்தது. தங்கள் கோயில், ஆலயப் பிரவேசத்தால் என்னவாகுமோ என்று அஞ்சிக்கிடந்தது வைதிகம். தங்கள் முயற்சிகளும் யாகங்களும் பயனில்லாது போயினவே எனச் சோம்பிக் கிடந்தனர் மேல்சாதிக்காரர்கள்.

பெரியாருக்கு யாரிடம் அளவற்ற பற்றும் மதிப்பும் இருக்க முடியுமென ஆராய்ச்சி செய்தார்கள். அந்த ஆராய்ச்சியின் பயனாக காந்தியடிகளை அழைக்க முடிவு செய்தனர். 1925ஆம் ஆண்டு மார்ச் மாதம் திருவனந்தபுரத்திற்குக் காந்தியடிகள் வருகை தந்தார்.

பயணிகள் விடுதியில் தங்கிய காந்தியடிகளிடம் மகாராணி, கோயிலைச் சுற்றியுள்ள பாதைகளில் எவரும் நடக்கலாமென்பதற்கு உத்தரவாதமளிப்பதாகவும், ஆலயப் பிரவேசத்தை அனுமதிப்பதற்குச் சிறிது அவகாசம் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். தீண்டாமையும், ஆலயப் பிரவேசமும கொள்கைகளாகக் கொண்டு அவற்றை நாடு முழுவதும் பரப்பி வந்த காந்தியடிகள் பெரியதோர் பிரச்சினைக்குள்ளானார். ஒரு புறம் அவரது கொள்கைகளுக்காக உயிரைத் திரணமாக மதித்துப் பெரியாரின் தலைமையில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள்; மறுபுறம் இரக்கம் வேண்டி நிற்கும் அரசும், மதத் தலைவர்களும்.

''பாதையைத் திறந்து விடட்டும். ஆனல், ஆலயப் பிரவேசந்தான் நமது கொள்கையாயிற்றே!




## வைக்கம் நகரமைப்பு

வைக்கம் நகரமைப்புப் படத்தில் 1 எண்ணிட்ட இடம் கோவிலாகும். அதனைச் சுற்றிலும் 4 என்ற எண்ணிட்ட இடங்களுக்கு அப்பால் தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் அனுமதிக்கப்படாமலிருந்தனர். வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அப்பகுதியில் கைது செய்யப்பட்டனர். ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் அவர்கள் வேறு பாதைகளில்தான் சுற்றிச் செல்ல வேண்டுமென்ற நிலையிருந்து வந்தது.

தாழ்த்தப்பட்டவர்கள் அனுமதிக்கப்படும் எல்லையில் ஒரு பெரிய கோயில் உண்டியல் வைக்கப்பட்டிருக்கும். அவ்வெல்லைக்கு அப்பால் அனுமதி மறுக்கப்படும் ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குச் செல்ல முடியாவிட்டாலும் அவர்களது காணிக்கைத் தொகையைச் செலுத்தும் பெரும் வசதியினைக் கோவில் அதிகாரிகள் செய்து கொடுத்திருந்தனர்! கோவில் நுழைவு மறுக்கப்படும் இனத்தவரின் காணிக்கைகள் மட்டும் தவறாது வசூலிக்கப்பட்டு வந்தது!

3, 2 என்று எண்ணிட்ட இடங்களில் போராட்ட வீரர்கள் தங்கியிருந்தனர். 6 எண்ணிட்ட இடத்தில்தான் போராட்ட வீரர்களுக்கெனப் பெரும் உணவு விடுதி அமைக்கப் பட்டிருந்தது.

5 எண்ணிட்ட இடத்தினைத் தற்போதைய கேரள அரசு வைக்கம் போராட்ட நினைவுச் சின்னம் அமைப்பதற்கென ஓர் இடத்தினை நன்கொடையாக அளித்துள்ளது.





## "வைக்கம் வீரர்" என்று பேயர் சூட்டியவர் யார்?

பெரியாருக்கும் எனக்கும் உள்ள நட்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது 35 வருடங்களுக்கு மேற்பட்டது. "வைக்கம் வீரர்" என்பதை இந்த அடியேன் கைப்பேனுதான் சூட்டியது.

திருவிதாங்கூரிலே தீண்டாமையை ஒழிக்க மாபெரும் போராட்டத்தை நடத்தி வெற்றி பெற்ற பெரியாருக்கே அந்தப் பெருமை; ஆனால், அந்தப் புகழ் யாருக்கோ போயிற்று!

பெரியாரது அந்த வீரத்தியாகம் எனது வாழ்க்கைக் குறிப்பிலுள்ளது. எனக்குப் பெண்டு பிள்ளைகள் இல்லை. நான் செத்துப் போனால் எனக்காக அழுகின்ற ஒரு நண்பர் இருந்தால் அவர் பெரியார் இராமசாமியாகத்தானிருக்க முடியும்.

இந்த நாட்டில் பெரிய காரியம் செய்தவர்: பெரியார் ஒருவர்தான்!

—திரு. வி. க.

எப்படி விட்டுக் கொடுக்க முடியும்?'' என்று ஒரேயடியாகக் கூறிவிட்டார்.

ஓராண்டு நடைபெற்ற தீவிரப் போராட்டத்திற்கு முடிவு கட்டவும், உடனடியாக இரு தரப்பாருக்கும் இடையில் அமைதி நிலவச் செய்யவும் பெரியாரையும் அவரது தொண்டர்களையும் சமாதானம் செய்ய வேண்டி வந்தது.

உடனடியாக எல்லாப் பாதைகளையும் எல்லாத் தரப்பினரும் பயன்படுத்துவதில் தடையிருக்கக் கூடாது என்றும், மக்கள் மன மாற்றம் ஏற்பட்ட பிறகு ஆலயப் பிரவேசம் செய்யலாமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன் பின்னர் சில ஆண்டுகளில் கேரள நாட்டின் எல்லாக் கோயில்களிலும் எல்லா வகுப்பினர்களும் சென்று வழிபடலாம் என்ற முறை ஏற்பட்டது.

கேரள மக்களுக்கு இப்போராட்டத்தின் மூலம் கிடைத்த வெற்றி மிகப் பெரியதாகும். பல்லாண்டுகளாக மண்டிக்கிடந்த மூடப்பழக்க வழக்கங்களைத் தூக்கியெறிவதற்கான முதற் கட்டம் வெற்றியாக முடிந்தது. பெரியாரின் அஞ்சா நெஞ்சம், ஆணித்தரமான வாதம், பாமரர்களும் எளிதில் புரிந்து செயல்படத் தூண்டும் எளிய சொற்பெருக்கு, இவையெல்லாம் இந்திய நாட்டையே ஈர்த்தது. காந்தியடிகள் இப்போராட்டத்தைச் சிறப்பித்து எழுதியிருந்தார்.

கிராமம் கிராமமாக மக்கள் பெரியாருக்கு வரவேற்பளித்தனர். 'வைக்கம் வீரர்' என்ற விருதளித்துப் பெருமைப்படுத்தினர். அவரைக் காரில் அமர்த்தி காரினை இழுத்துச் சென்றனர். மாலைகளும் வரவேற்புகளும் சென்றவிடமெல்லாம் அளிக்கப்பட்டன. தனது குடும்பத்துடன் வெற்றி தேடித் தந்த வீரனை நாடே பாராட்டிற்று.

சமுதாயத்தில் ஒரு பகுதியினருக்கு இழைக்கப்பட்டிருந்த அநீதிகளை எதிர்த்துப் போராடுவதையே தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார் தந்தை பெரியார். ஐம்பது ஆண்டுகளாக பொது வாழ்வில் அவர் மேற்கொண்ட போராட்டங்களனைத்தும் இந்த அடிப்படையில் எழுந்தவைதாம். இக்கொள்கைக்கு எதிராக இருந்தவர்கள் எவராக இருப்பினும் அவர்களைப் பற்றி அவர் கவலைப்பட்டதேயில்லை.


பரம்பரையாக நிலவி வரும் பழக்கங்கள், சாத்திரங்கள், இலக்கியங்கள், கலைகள் என்பன வற்றின் பேரால் வேற்றுமைகள் நிலவக் கூடாது. எல்லோரும் ஓர் குலம் என்னும் உணர்வை வளர்க்காத எதுவும் சமுதாயத்திற்குத் தீமையளிப்பதுதான்.

மனிதனது சிந்தனை, அறிவு வளர்ச்சி, கல்வி, விஞ்ஞானம் என்பவையெல்லாம் சமுதாயத்தை உயர்த்தி பேதங்களை ஒழிக்க வேண்டும். சுய சிந்தனையை வளர்த்து வருவதன் மூலம் சுதந்த்ரமான எண்ணங்கள் எல்லோரிடமும் வளர வேண்டும். அதுதான் உண்மையான சமதர்ம அமைப்பு. இதனைத்தான் ''வைக்கம் வீரர்'' தனது ஒப்பற்ற போராட்டத்தின் மூலம் நாட்டிற்கு வழி காட்டினார். அவ்வழியையே வாழ்வின் இறுதி வரை கடைப்பிடித்தார். அவரது வழியில் நாமும் செல்லுவோம்!

### 2000 ஆண்டில் மகத்தான சமூகப்புரட்சி

"இந்தியாவில் இரண்டாயிரம் வருடத்தில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது. திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்பது அமெரிக்காவிலுள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்து ஆகும்''.

—அமெரிக்கப் பேராசிரியர் ஜான்ரைலி.
(ஆதாரம்: ''ஆனந்த விகடன்'' 16—7—72)



# எந்தத் தமிழ் மனமும் என்றும் மறக்காது!

திருமதி சௌந்தரா கைலாசம்



சிறந்ததிரு வள்ளுவனைச் சேயாகப் பெற்றவளே!
அறந்திகழ வந்தவளே! ஆருயிரே செந்தமிழே!
நிறைந்தபுகழ் மஞ்சத்தில் நெஞ்சத்தில் வாழ்பவளே!
பிறந்ததனி நாளறியாப் பெருமைக் குரியவளே!
பழங்காலம் நீயிருந்தாய் பண்டிதரின் சொத்தாக!
தலைகாலே புரியாது தமிழென்றால் அப்போது!
நலம் மாளும் இப்படியே நாட்சென்றால்
எனும் நினைப்பின்
அலைதாவப் பேரறிஞன் அவனொருவன் வாழ்ந்திருந்தான்!
மெதுவாக வந்து சிறைமீட்டான்; வெளியுலகில்
பொதுவாக உலவவிட்டான்; புதுமை மெருகிட்டான்;
நதியாகத் தவழவிட்டான்; நலமுடனே திகழவைத்தான்!
விதியோடு கலந்துவிட்டான்; விழிநோகப் புரிந்துவிட்டான்;
அந்தஒரு மனிதன் அருமையினைப் பெருமையினை
எந்தத் தமிழ்மனமும் என்றும் மறக்காது!
வந்தெழுந்து மேடையிலே வாய்திறந்தால் போதாதா?
செந்தமிழாம் தேன்பெருகி தெருவெல்லாம் ஓடாதா?
தாளிட்ட மனக்கதவைத் தட்டித் திறக்காதா?
வேர்விட்ட துன்பத்தை வெட்டி முறிக்காதா?
வானாக விரிந்தஅவர் மனத்தின் பெரும்பரப்பில்
தானாகப் பொங்கிவந்த தமிழுக்கு ஈடேது?
தலைகீழாய் அகராதிதனைப் புரட்டி மோனைக்கு
வலைவீசித் திரியும் வழக்கம் கிடையாது!
எதுகையதும் மோனைகளும் எதிரே தவங்கிடந்து
கொடுகை எனக்கெஞ்சிக் கும்பிட்டுக் கூத்தாடும்
மூக்கடைத்த சுவைக்குரலில் முழங்குமுரை கேட்டுவிடில்
வாக்கடைத்துப் பகைவர்களும் வணங்கி விடைபெறுவர்!
பெருந்தன்மை-உருஒன்றைப் பெற்றெழுந்து அண்ணாவாய்
பெருந்தன்மை யுற்றதெனில் வையகமே மகிழ்ந்தொப்பும்!
பகைக்கூடத் திருந்தவரும் பழகியபின் முகமெல்லாம்
நகைக்கூட மாய்நிற்பார்-நான்மிகவும் நன்கறிவேன்!




தாம் ஆர்வத்துடன் நம்பிய இலட்சியங்களுக்காக அவர் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பணிபுரிந்து வந்தார். நமது நாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் சமூக விழிப்பு ஏற்பட அவர் ஆற்றிய பணி, அவர் வகித்த பாத்திரம் மிகப் பெரியது. அவர் ஒரு மாபெரும் தேசபக்தர்.

பெரியார் நமது சமூகத்துக்கு ஆற்றிய சேவைகள் நம் மனத்தில் நீண்ட நெடுங் காலம் நிலைத்து நிற்கும். தமது கருத்துக்களைப் பயம் துளியுமின்றி எடுத்துக் கூறியவர்களில் பெரியாரும் ஒருவர். கடைசி வரை அவர் விடா முயற்சியுடன், சலியாத கடும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

—பெருந்தலைவர் காமராஜ்.

சும்மாவா அவர்பேச்சு?
சுதிகலையாச் சங்கீதம்.
சுகவாழ்வுக் கடிகோலும்
விதிகலையாத் தீங்கவிதை;
விளையாடும் பூந்தென்றல்!
அலங்காரம் உடையநடை
அவர்நடையோர் புதியநடை
நலங்காண நடந்தநடை
நமக்காகப் பிறந்தநடை!
அந்தநடை சொந்தநடை
அழகனைத்தும் திரண்டு
வந்த நடை; அனைவர்க்கும்
வாழ்வருளும் அன்புநடை!
தடைக்கற்கள் என்றாலும்
அடுக்கியதோர் தொடரின்
அயராத படையின்நடை;
தூற்றுகின்ற மொழிகேட்டு
துவண்டுவிழா மனிதநடை;
போற்றுகின்ற மொழிகேட்டுக்
கர்வமுறாப் புனிதநடை!
சீராகச் செல்லும் நடை
செந்தமிழுக் கெதிர்ப்பிருந்தால்
கூராகிக் கொள்ளும்நடை!

மூடத்தனத்தில் முளைத்தெழுந்த வற்றையெல்லாம்
சாடத்துணிந்தநடை சான்றோர் புகழ்ந்தநடை!
காளையரின் திருக்கூட்டம் தொடரவைத்த நடை
அண்ணாத்துரையுடைய இனியநடை! வாழ்க!
அவர் நடையின் சாயலில் இன்று
ஆயிரம்பேர் வந்தாலும்
சுவைவளரும் அவர்பேச்சின்
சுகம்தனிதான்-அசல் அசல்தான்!
அசல் எங்கே? அந்த அசல் எங்கே? அதில் வழிந்த
இசை எங்கே? எங்கே? எமைவிட்டுப் போனதெங்கே?




# புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகம் லிட்.

## எண். 154, புதுக்கோட்டை.

தோற்றம்: **1933** போன்: **483**

**அழகிய அச்சு & கலர் வேலைகள், பைண்டிங் வகைகள்**
ஆகியவை செய்வதில் நீண்டகால அனுபவமிக்கவர்கள்

கூட்டுறவுச் சங்கங்கள், அரசு அலுவலகங்கள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், தேவஸ்தானங்கள், கல்வி நிலையங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரது ஆர்டர்களையும் ஏற்றுத் திறம்பட அச்சிட்டு வழங்குகிறோம்.

உங்களுடைய நல்லாதரவைப் பணிவுடன் வேண்டுகிறோம்.
சேவையே எங்கள் இலட்சியம்.

**கிளை அச்சகம்:**
19, ஆபீஸர்ஸ் காலனி,
**புத்தூர். திருச்சி—17.**
போன்: **27801**


**V. குருசாமி.**
தனி அலுவலர்.

ANNA PUBLICITIES/5/78



ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# ஜாதிகளற்ற சமுதாய அமைப்பே சமதர்மச் சமுதாயத்தின் அடித்தளம்!



உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்துவரும் ஜாதிச் சண்டை என்னும் நெருப்புக்கு நெய்யாய் இருப்பதால், இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்.

—தந்தை பெரியார்.



இந்த நாட்டிலே, ஜாதி தான் மக்களுக்குள் பேதத்தை ஏற்படுத்தும் முதல் சாதனம். மக்களின் இரத்தத்திலே கலக்கப் பட்டிருக்கும் கடுவிஷம். மனதிலே முடக்கு நோயைப் புகுத்திவிட்டமுறை — எனவே தான் பேதமற்ற சமுதாயத்தை — சமத்துவத்தை — சமதர்மத்தை நாம் நாடவேண்டுமானால் முதலில் ஜாதி தொலைந்தாக வேண்டும்.

—பேரறிஞர் அண்ணா.

எங்கும் சமத்துவம் ஓங்க
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் நிறை
எனும் இலட்சியம் ஈடேற
தொண்டாற்றுவோம்!

பதிவு எண். M. 8676
தமிழரசு

